[illegible]

[illegible] 17 [illegible]

17 Oct 1931


JL
00211, N15 8B
N31. 17. 4.
187514

Regd. No. M. 1190. Oct. 1931 பிரஜோற்பத்தி௵ ஐப்பசி௴

REGD. No. M. 1190.





# ANANDA BODHI

11 NOV 1931

Vol. 17. பொருள[illegible] No. 4.

[illegible] பக்கம்.


1. கடவுள் வணக்கம் ... 241
2. அரும்பொருள் விளக்கம் ... 242
3. காந்தி திருநாள், காந்தி போதம் 243,247
4. காந்தி மணித்திரட்டு ... 249
5. மேனாட்டு விழுச் செல்வம் ... 252
6. இன்பந்தேடிய இளவாசன் ... 257
7. "கேகயர் கோமகன் இழைத்த கைதவம்", மாட்டின் ஜீவிய சரிதம் 263,269
8. வைத்தியம், கலைமகள் வழிபாடு 272,273
9. மேனாட்டுத் தத்துவம் ... 277
10. லைப் இன்ஷியூரென்ஸ் பகுதி ... 280
11. கதிர்காம க்ஷேத்திரத்தின் மகிமை 286
12. ஆதி இங்கிலாந்து ... 291
13. தமிழரின் கடவுட் கொள்கை ... 294
14. திலகரின் தீரமொழிகள் ... 298
15. அழிப்பான் கதைத் திரட்டு ... 300
16. விசித்திர விநோதம் ... 301
17. எனது தொண்டு, கும்பிடுக்கும் கூலியாரி-ஆச்சாரிய லக்ஷணம் 305,308
18. "ஆ-போ" வாழ்த்து, ஒரு ஐயம் 316,317
[illegible]த்தொகை விவரம், பஞ்சாங்கம் 318,320




# "ஆனந்தபோதினி"

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, ஸிலோன் ... ... | 1—0—0 |
| | பினங், ஸிங்கபூர், தென்ஆப்ரிக்கா, பசரா, மெசபொடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு | 1—8—0 |
| நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை | | 0—2—0 |
| சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை விலை | | 0—3—0 |

**ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.**

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் **பூரணமாகப்** பெயரை எழுதி யனுப்பவேண்டும்.

(2) சந்தாத் தொகையை முன்னுடிச் செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாச முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடி மாத சஞ்சிகை முதல், பத்திரிகை அனுப்பப்படும்.

☞ (3) சஞ்சிகையை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 3—அணு வோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணு வாகையால்) அந்தக் கமிஷன் 2-அணு, வி. பி. க்குத் தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-5-6-அதாவது 6-அணு சேர்த்து ரூபா 1-6-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினுல் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக் கொள்வதே நலம். **இதைக் கவனிக்கவும்.**

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம் தேதி வரையில் பார்த்து அதற்கு மேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் அவ்விவரத்தைத் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் கிரய மனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புது விலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) **சந்தா நம்பரைக்** குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் **ரிப்ளை கார்டாவது தபாற் பில்லையாவது** அனுப்பினுலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன், மத தூஷணை, பிறர் தூஷணை, துரைத்தன விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியனவாகவும் எழுதவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| **Life Subscription** ஜீவிய சந்தா | இந்தியா, பர்மா, சிலோன் | ரூபா | 15—0—0 |
| | அன்னிய நாடுகளுக்கு | ,, | 20—0—0 |

*Telephone* No. 3005. *Telegram* :—"Ananda Bodhini," Madras.

**விலாசம்:—நா. முனிசாமி முதலியார், "ஆனந்தபோதினி"**

6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

# (31-10-31 வரை)

அனுப்பப்படும்.

தங்களுக்கு தெரிந்த
பொன் வேலை செய்யும்
ஆச்சாரிகள்,
நகை வியாபாரிகள்,
காசு கடை வியாபாரிகள்

விலாசம் 6

11 NOV 1931

தெரியப்படுத்தினால்
அநேக வர்ணங்களில்
அச்சிட்ட போஸ்டு கார்டு
சைசில் கீழ்கண்ட படங்கள்

1. ஸ்ரீ கிருஷ்ணன்
2. விஷ்ணு பூஜை
3. லக்ஷ்மி சரஸ்வதி
4. கணபதி
5. பார்வதி பரமசிவன்
6. ராம பட்டாபிஷேகம்

இனமாய் அனுப்பப்படும்.

பி. கோபாலசாமி நாயுடு அண்டு சன்ஸ்,
நகைகள், ஆபரண கற்கள் வியாபாரம்,
பறங்கிமலை போஸ்ட், (மதராஸ்) கோ.

ஆசிரியரின்றி ஆங்கிலந் தெரிந்துகொள்ளும்

# ஆனந்த ஆங்கிலபாஷா போதினி

## (நான்காம் பதிப்பு)

எம்.ஏ., எல்.டி. பட்டம்பெற்ற ஆங்கில போதகாசிரியர் ஒருவரால் இப்பொழுது பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புகளோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

187514

**800 பக்கங்களுக்குமேல்**

இங்கு காகிதத்தில் அச்சிடப்பட்டுச் சீமை காலிகோ பைண்டு செய்யப்பட்டது.

பற்பல கதைகளும், பாரதக்கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16 ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1-4-0

தமிழ்நாட்டுச் சகோதரர்களே!

மேதினியில் உள்ள தமிழர் எல்லோர்க்கும் இனிமையாக எளிதில் ஆங்கிலம் போதிக்கந்தக்கது, உயர்ந்த இங்கிலீஷ் போதனு முறையில் முதன்மை பெற்றுத் தோன்றிய பெறுதற்கரிய பெரும்பயன்வாய்ந்த எமது

## ஆனந்த ஆங்கில பாஷா போதினி

ஒன்றே.

இதன் முதல்மூன்று பதிப்புக்களைக்காட்டிலும் இப்பதிப்பில், பாட முறைகள் அதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

உலகப் பிரசித்திபெற்ற எமது புத்தகத்திற்குப் போட்டியாக வெளிவரும் போலி விளம்பரங்களுள்ள பல புத்தகங்களை நம்பி மோசம் போகாதீர்கள். இக்காலத்தில் இல்லாததை உள்ளதாகக் காட்டி விளம்பரங்களில் எழுதுவதே எங்கும் பலரிடத்திலும் வழக்கமாகிவிட்டது. ஆதலின், அத்தகைய போலி விளம்பரங்களிலுள்ள பகட்டுரைகளைப் படித்து மயங்கிவிடாதீர்கள்; ஆங்கிலத்தை உண்மையாகவே எளிதில் போதிக்கும் அரிய நூல் எதுவென்று ஆராய்ந்து பாருங்கள்; அவ்வாறு பார்த்தால் எமது புத்தகமே அதற்குத் தகுதியானதென்பது விளங்கும். இதற்கு முன் பல புத்தகங்கள் வெளிவந் திருப்பினும், சரியான பாட முறைகளுடன் வெளிவந்திருக்கும் எமது போதினியே முதன்மை பெற்றதாகும். ஒரு விஷயத்தைப் பற்றியே பலர் பல நூல்களை வெளிப்படுத்துவது இயற்கை. அப்படி வெளிப்படும் நூல்களில் ஒன்றின்பின் ஒன்றாகப் பின்னர் வெளிவருவன வெல்லாம் ஒன்றிலும் மற்றொன்று விசேஷமாக, 'பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினனே' என்ற முறைப்படி பழைய முறைகளைத் தள்ளிப் புதிய முறைகளைச் சேர்த்து உயர்ந்த அமைப்புக்களுடன் வெளிவருதல் கூடும்.



இருபது வருடங்கட்கு முன்னும் ஆங்கிலம் போதிக்கும் நூல்கள் பல வெளிவந் திருக்கின்றன. இப்போது வெளிவந்தவை அவற்றிலிருந்து சில மாறுதல்கள் அடைந்திருக்கின்றன; அவற்று ளெல்லாம் எமது புத்தகம் திருத்தமும், தெளிவும் பொருந்தியது. முதல் மூன்று பதிப்புகள் வெளியான' சில தினங்களுக்குள்ளாகவே செலவாகி இந்நான்காம் பதிப்பு வெளிவந்திருக்கிறது. ஆதலின் முன் வந்தவை உயர்ந்தவை யென்றும், பின் வந்தவை தாழ்ந்தவை யென்றும் கருதாமல் இக்காலத்தில் எளிதாகவும் விரைவாகவும் ஆங்கிலத்தைக் கற்றுக்கொடுப்பது எதுவென்று பார்த்து, அத்தகைய முறையில் அமைந்து ஆங்கிலஞானப் பிரகாசத்தை எங்கும் எவரிடத்தும் பரப்பிவரும் எமது "ஆனந்த ஆங்கிலபாஷா போதினி"யை வாங்கிப் படியுங்கள்.

## "ஆனந்த ஆங்கில பாஷா போதினி" வெளியானதற்குக் காரணமென்ன?

187514

நெடுங்காலமாக நம் நாட்டில் ஆங்கில துரைத்தனம் நிலைபெற்றிருப்பதால் சகல விஷயங்களிலும் இங்கிலீஷ் பாஷையே ஏற்றமடைந்து நிற்கின்றது; எப்பேர்ப்பட்டவருக்கும் எந்நிலையிலும் எக்காரியத்திலும் எவ்விடத்திலும் அது மிக உபயோகமாகக்கூடியதா யிருக்கிறது; முடிவாகக் கூறுமிடத்துத் தற்கால இயற்கையை அனுசரித்துத் தோட்டிவேலை செய்பவனுக்குங் கூட அது அவசியம் தெரிந்து கொள்ளவேண்டிய பாஷையா யிருக்கிறது. அது தெரியாதவர்களுக்கு எவ்விடத்திலும் கௌரவமில்லை, எக்காரியத்திலும் பலவித இடையூறுகள் உண்டாகும்; நம் சுதேசிகளும் கூட ஒருவரோ

டொருவர் பேசிக்கொள்ளும்போது ஆங்கிலத்திற் பேச அதிக உற்சாகமுடையவர்களா யிருக்கிறார்கள். ஆனதால் ஆங்கிலந் தெரியாதவர்கள் நம் சுதேசிகளோடும் பேசமுடியாமல் நம்மவர்களாலேயே அவமதித்து ஒதுக்கித் தள்ளப்படுகிறார்கள். சுதேசிகளுக்குள்ளேயே இங்கிலீஷ் தெரியாதவர்கள் கதி இப்படியாகும்போது ஐரோப்பியர் முதலிய மேல்நாட்டாரோடு காரியத் தொடர்பு வைத்துக்கொள்வோர்க்கு இங்கிலீஷ் தெரியாமலிருந்தால் அவர்களுக்கு மிகுந்த சங்கட முண்டாகுமென்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. இன்னும் ஆங்கிலமானது தற்காலத்தில் எல்லா நாட்டிலும் பரவிய ஒரு பொதுப் பாஷையா யிருப்பதால், தமிழ் தெரியாத மற்ற எந்த நாட்டினரோடும் பேசி விஷயங்கள் தெரிந்து கொள்வதற்கும் அனுகூலமாயிருக்கின்றது. இத்தகைய பெரும் பயன்களைத் தரும் இந்த ஆங்கில பாஷையைத் தெரிந்து கொண்டவர்க்கு எண்ணற்ற நன்மைகளுண்டாகின்றபடியால், எல்லோருமே இதனைத் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகின்றது. அங்ஙனம் தெரிந்துகொள்வதற்காகவே இந்த அரும் பெரும் "ஆனந்த ஆங்கில பாஷா போதனி"யை இப்பொழுது நாம் வெளிப்படுத்தி யிருக்கின்றோம்.

## இது, எவ்வகைப் பயன்களைத் தருகின்றது?

இதனைச் சிரத்தையுடன் கற்றுக்கொள்ளத் தொடங்குவோர் பணச்செலவில்லாமலும், உபாத்தியாயர் உதவியில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமுமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும், படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். சில ஆயிரக்கணக்கான பணச் செலவுசெய்து 10-வருஷம் படிப்பதனால் எவ்வளவு ஆங்கிலத்தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாட்களில் இப்புத்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதிவிரைவில் படித்துக்கொள்ளலாம்; இப்புத்தகமொன்று வாங்கிக்கொண்டால் இங்கிலீஷ் கற்றுக்கொள்வதற்காக உபாத்தியாயருக்கு அதிகச் சம்பளம் கொடுத்து அவரிடம் புத்தகத்தைத் தூக்கிக்கொண்டுபோய் அலைய வேண்டியதில்லை. ஒவ்வொருவரும் தாங்கள் இருக்குமிடத்திலேயே அதனைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். மனிதர் தாமே சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத்தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப்பெற்றிருக்கின்றன. அவை வெகு சுலபமாக ஆங்கில ஞானத்தை உண்டாக்கிவிடும்.

## எக்காரணத்தினால் இது எளிதில் ஆங்கிலம் போதிக்கின்றது

இதில் முக்கியமாக ஒவ்வொரு இங்கிலீஷ் எழுத்தின் உச்சரிப்பையும் தமிழ் எழுத்தில் காட்டி இங்கிலீஷ் உச்சரிப்பின் சப்தம் சரியாய்த் தொனிக்கும்படி அத் தமிழ் எழுத்துக்களுக்கு அடையாளங்கள் இடப்பட்டிருக்கின்றன. இந்தக் கிரமத்தின்படியே, ஒவ்வொரு இங்கிலீஷ் பதமும் இங்கிலீஷ் எழுத்துக்களிலும், தமிழ் எழுத்துக்களிலும் அமைக்கப்பட்டு அதன் அர்த்தம் தமிழில் எழுதப்பட்டிருக்கிறது. ஆதலின்,

இங்கிலீஷ் எழுத்துக்களை மாத்திரம் சரியான சப்த உச்சரிப்போடு சிறிது நேரத்திற்குள் ஒருவரிடம் தெரிந்துகொண்டு அதன்மேல் இந்தத் தமிழ்ப் பாட முறையைப் படிக்கத் தொடங்கினால், தமிழிலேயே சரியான உச்சரிப்போடு இங்கிலீஷ் எழுத்துக்களையும், அவ்வெழுத்துக்களாலாகும் பதங்களையும், பதங்களாலாகும் தொடர்களையும், தொடர்களால் முடியும் பற்பல விஷயங்களையும் இலேசாகச் சில தினங்களில் கற்றுக்கொள்ளலாம். இங்கிலீஷ்



எழுத்துக்களைச் சப்த தோஷமின்றி உச்சரிக்கும் விதங்களும் எழுத்துக்கூட்டும் முறைகளும், பதங்களைச் சேர்த்துப் படிக்கும் விதங்களும் இலக்கண விஷயங்களும் இப் புத்தகத்தில் மட்டுந்தான் சரியான முறையில் அமைந்திருக்கின்றன. இப் புத்தகத்தால் ஆங்கிலம் கற்றுக்கொண்டவர்கள் முறைப்படி பத்து வருஷங்கள் இங்கிலீஷ் படித்துத் தேர்ந்தவர்களைப்போலவே விளங்குவார்கள். இவ்வளவு அருமையான முறைகளுடன் இப்புத்தகம் அமைக்கப்பட்டிருப்பதோடு இதில் மனிதர் சம்பாஷணைக்கு முக்கியமாக இன்றியமையாதனவாகிய மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், ஊர்வன, நீர் வாழ்வன முதலிய பிராணி வர்க்கங்களைப்பற்றிய விஷயங்கள், மரங்கள், செடிகள், கொடிகள், புற்பூண்டுகள், மலை, கல் முதலிய தாவர வர்க்கங்களைப்பற்றிய சாமான்கள், மண், நீர், நெருப்பு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்கள், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள், அவற்றின் சம்பந்தமான ஐம்புலன்கள் முதலியவை சம்பந்தமான விஷயங்களும், நாள், கிழமை, மாதம், வருடம், கிரகங்கள், நக்ஷத்திரங்கள் முதலிய பற்பல விஷயங்களும், மனிதரின் செய்கை, பண்பு, ஆகாராதிகள் முதலியவைகளைப் பற்றிய செய்திகளும், கோர்ட் நடவடிக்கைகள், வியாபாரம், கைத்தொழில். பயிர்த்தொழில் முதலியவற்றைப்பற்றிய விஷயங்களும், உத்தியோக முறைகளும், இராஜாங்க நீதிகளைப்பற்றிய செய்கைகளையும், கடிதம், பத்திரம், விண்ணப்பம், உத்தரவு முதலியன எழுதும் விவரங்களும், சிறு வியாசங்களும், பழமொழிகளும், சிறு கதைகளும், பாரத கதைகளும், இன்னும் பற்பலவிதமான கதைகளும், விவரமான ஆங்கில இலக்கணம், இன்னும் அளவில்லாத அநேகம் செயல்களும் ஆங்கிலத்திலும் தமிழிலும் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கின்றன. இவற்றினாலேயே இப்புத்தகம் சில தினங்களில் ஆங்கில ஞானம் உண்டுபண்ணுமென்பது நன்கு விளங்கும்.

ஷை தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

---

பரமார்த்த தரிசனம் என்னும்

## ஸ்ரீமத் பகவத்கீதை வசனம்

(ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியாரவர்கள் எழுதியது.)

இது, பாரதப் போரில், யுத்தகளத்தில், அருச்சுனன் தன் தாயாதி முதலியோர்களைக் கண்டு, மயக்கங்கொண்டு, தனது க்ஷத்திரிய தருமத்தைக் கைநெகிழவிடுத்தபோது ஸ்ரீ பகவான் அவனுக்கு உண்மை விளங்க உபதேசித்தருளிய சிறந்ததோர் தத்துவநூல்; எல்லாப் பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு எல்லாராலும் பொன்னேபோற் போற்றப்படுவது ; கன்ம, ஞான, பக்தியோகம் முதலியவற்றை விளக்கமாக எடுத்துரைப்பது ; பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்டது. இதன் ஆவசியகத்தைப் பெரிதுங் கருதி ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள், ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் கருத்துக்கிணங்க கோவிலூர் ஸ்ரீமத் பொன்னம்பல சுவாமிகள் செய்தருளிய பாஷியத்தைத் தழுவி, சகலரும் படித்துஜ்ஜீவிக்க, இனிமையான எளிய தமிழ்நடையில் வசன ரூபமாக எழுதி நமது ஆனந்தபோதினியின் வாயிலாகச் சிறிது சிறிதாக வெளியிட்டு வந்தார். அது இப்போது தனிப் புத்தகமாக அச்சிடப்பட்டு விலைக்குத் தயாரா யிருக்கின்றது.

**இதன் விலை ரூபா 1-8-0.**

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-11-31 வரை விலை ரூ. 1-4-0.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

காதலருக்கு இன்பந்தரும் நூதன நூல்

அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஆனந்த சாஸ்திரம் வெளியாயிற்று!

# இன்பவாழ்க்கையின் - இரகசியங்கள் -

## (மூன்றும் பதிப்பு)

அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டு கண்ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன்



400-பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் பேபரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

## இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1–8–0

இது காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தத்தை விரும்பும் பூமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.

இது காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்திப் பேரானந்தக் கடலில் மூழ்கி, நற்சந்ததிகளைப் பெற்று, மறுமைப் பயனையும் அடைதற் கேதுவாயிருக்கும்படி பற்பல இன்பமரர்க்கங்கள் நிறைந்த இ' நூல் இப்போது இனிய தமிழ்நடையில் வெளிவிடப்பெற்றிருக்கிறது. இதில் நமது பூர்வீக கொக்கோக சாஸ்திரத்தின் சாராம்சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேகதத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அராபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரெஞ்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்பவாழ்க்கையின் இரகசிய முறைகளும், அவற்றிற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன்பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம் புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடையவேண்டிய இன்பத்தையும், மறுமை யின்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஷை தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

# இந்திராபாய் அல்லது இந்திரஜாலக்கள்ளன்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்கரம் என்ற கள்ளன் கல்வி சாஸ்திர் ஆராய்ச்சி, தந்திரம், சாமர்த்தியம் முதலிய யாவும் உடையனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலைகளவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன் முறைகளில் அக்கள்ளனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணபத்துக்களி லிருந்து தப்புவதும் அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்கரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2—8—0

# தமிழ் மெட்டீரியா மெடிக்கா

என்னும் அருமையான வைத்திய நூல்.

# MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலப்பு விவர முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டுமென்பதை இந்நூல் நன்றாகக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக் குதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடியவரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். இதன் விலை ரூபா 3.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# எமது சொந்தப் பிரசுரங்கள்.

**இரத்தினபுரி இரகசியம் 4 பாகம் 8 4 0**

இதில் மிக்க ஆச்சரியமுள்ளனவும், நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதி முதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருஷ்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்படுகின்றன.

**ஞானசெல்வம்பாள் (5-பாகங்கள்) 9 10 0**

நம்மிடம் இதுவரை வெளியாகியிருக்கும் அநேகம் நாவல்களில் இது தான் மிகப் பெரியது. "இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறுபோல்" படிப்போர் மனத்தை இழுத்துக்கொள்ளத் தக்கது. கதை மிகப் பெரியதாயினும், வாசகர்களின் மனம் சிறிதும் அயர்ச்சியடையாமல் மேலும் ஆனந்தமாக முடிவுவரை யிருக்கும். சில பெண்கள் தங்களுக்கு மேலதிகாரிகளின்றித் தங்கள் இஷ்டம்போல் எங்கு முலவிச் சகல ஆடவர்களுடன் பழகிக்கொண்டிருப்பதால் நேரும் துன்பங்கள் இத்தன்மையன வென்பது நன்குவிளங்கும்.

நான்கு பாகம் வரை ஒவ்வொன்றுக்கு விலை ரூபா 2 0 0
ஐந்தாவது பாகம் மாத்திரம் ,, . ,, 1 10 0
ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு
ஐந்து பாகமும் சேர்ந்து வாங்கினால் ,, ,, 8 0 0

**அமராவதி 2 பாகம் 4 0 0**

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனாயிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக் கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேக சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியையளிக்கும்.

**அற்புதமர்மங்கள் அல்லது**
**ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் 1 12 0**

இது, மகா அற்புத மர்மங்களடங்கிய துப்பறியும் நாவல். இதில் எட்டு விஷமான கதைகள் அடங்கியிருக்கின்றன. எந்த நாட்டிலும் எப்பேர்ப்பட்ட யூகமுடைவர்களாலும், எவ்வித காரணத்தைக் கொண்டும், கண்டுபிடிக்க முடியாத அதியாச்சரியமான இரகசிய சம்பவங்கள் நிகழ்வதும், அவற்றை ஆனந்தஸிங்கு அதிகப் பிரயாசையுடனும், வெகு சாமர்த்தியத்துடனும் கண்டுபிடித்து உண்மையை வெளியாக்கிக் குற்றவாளிகளைத் தண்டனைக்குள்ளாக்குவதும், நிரபராதிகளுக்குத் துணைபுரிவதும், சத்தியத்தை நிலைநிறுத்துவதும், படிப்பவர்க்கு மிக்க மனோற்சாகத்தையும், ஆனந்தத்தையும், அறிவு விளக்கத்தையும் உண்டாக்கி, உலகத்திலுள்ள மனிதவர்க்கத்தவரின் இயற்கைகளையும் நன்கு விளக்கிக்காட்டும்.

---

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.


ஓம்
பரப்பிரஹ்மணே நம

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)


| தொகுதி | பிரஜோற்பத்திஸ்ரீ ஐப்பசிமீ கஉ | பகுதி |
| --- | --- | --- |
| 17 | 1931ஸ்ரீ அக்டோபர்மீ 17உ | 4 |


## கடவுள் வணக்கம்.

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகி யெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள
புட்பமிசை வீற்றி ருக்கு
நாரணி மநாதீத நாயகி குணாதீத
நாதாந்த சத்தி யென்றுன்
நாமமே யுச்சரித் திடுமடியர் நாமமே
நானுச்ச ரிக்க வசமோ
ஆரணி சடைக்கடவு ளாரணி யெனப்புகழ
அகிலாண்ட கோடி யீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே
வாரணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவையரசே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்காத லிப்பெணுமையே. (1)

காலன் றனையுதைத்தான் காமன் றனையெரித்தான்
பாலன் பசிக்கிரங்கிப் பாற்கடலை—ஞாலமெச்சப்
பின்னே நடக்கவிட்டான் பேருளை நாடாதார்க்
கென்னே நடக்கை இனி. (2)

கொள்ளித்தேள் கொட்டிக் குதிக்கின்ற பேய்க்குரங்காய்க்
கள்ளமனம் துள்ளுவதென் கண்டோ பராபரமே. (3)

## அரும்பொருள் விளக்கம்

1. இதனால் அடியார்க்கடியன் ஆகும் நிலை எப்பொழுது சித்திக்கும் என்று இரங்குகின்றார்.

(இ-ள்) ஆத்திமலர் மாலை அணிந்த சடையினையுடைய சிவபெருமான் வேத முதல்வி என்று துதிக்க, எல்லா உலகங்களையும் பெற்றருளிய தாயே! அங்ஙனம் பெற்றருளிய பின்னும், கன்னிகை என்று வேதங்கள் போற்று கின்ற சுகவடிவாகிய மயிலையாய்! மாதர்கள் மகிழும்படியான கங்கையினால் புகழ்ப்பெற்ற வளம் பொருந்திய தேவை நகர்க்கரசியே! மலையாசனுக்கு இரண்டு கண்மணியா யுதித்த மலைவளர் காதலிப் பெண்ணுமையே! பூரணி யென்றும், புராதனி யென்றும், சுமங்கலை யென்றும், சுதந்தரி யெனறும், புராந்தகியென்றும், திரியம்பகி யென்றும், அழகுவாய்ந்த புங்கவி யென்றும், விளங்குகின்ற சிவசங்கரி யென்றும், ஆயிரம் இதழ்களுள்ள புஷ்பத்தின்மீது எழுந்தருளியிருக்கும் நாரணியென்றும், மனங் கடந்த இறைவியென்றும், குணங்கடந்த நாதாந்த சக்தி யென்றும், உன்னுடைய திரு நாமங்களையே உச்சரித்துக்கொண்டிருக்கின்ற அடியார்களின் திருப் பெயர்களையே நான் செபித்துக்கொண்டிருக்கும்படியான பாக்கியம் கிடைக்குமா? என்க.

பூரணி முதலிய திருநாமங்கள் இறைவனைப் பற்றி இறைவிக்கும் உள வாதலால் இவ்வாறு கூறினார். எங்கும் நிறைந்திருத்தலின் பூரணி எனவும், முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளாய் விளங்குபவளாகலின் புராதனி எனவும் கூறினர். இறைவனுக்கு இறப்பு இன்மையால் சுமங்கலை என்றனர். தன் வயத்தியாகலின் சுதந்தரி எனவும், திரிபுரநாசனியாகலின் புராந்தகி எனவும், சுகம் உண்டாக்குபவளாகலின் சங்கரி எனவும், ஆறு தாரங் களைக் கடந்த சிரத்திலே ஆயிரம் இதழ்த்தாமரையின் நடுவில் வீற்றிருக்கின்ற வளாகலின் புஷ்பமிசை வீற்றிருக்கும் நாரணி யெனவும், பாச அறிவுக்கு எட்டாதவளாகலின் மநாதீத நாயகி எனவும், குணங்களைக் கடந்து நாத தத்துவத்திற்கு மேற்பட்டு விளங்கலின் குணாதீத நாதாந்த சத்தி யெனவும் கூறினார்.

2. இதனால் இறைவனது பேருளை நாடாதவர்கட்கு எத்தகைய நடக் கையும் இல்லை என்று கூறுகிறார்.

(இ-ள்) யமனை உதைத்தவனும், மன்மதனை எரித்தவனும், பாலனுடைய பசியைக் கண்டு இரங்கிப் பாற்கடலை உலகம் வியக்க அப்பாலனுக்குப் பின் னே குடிக்குமாறு நடக்கவிட்டவனுமாகிய முதல்வனுடைய திருவருளை விரும்பாதவர்கட்கு இனிமேல் எத்தகைய நடக்கையும் இல்லை என்க.

காலனை உதைத்தது மார்க்கண்டேயர் பொருட்டு. வியாக்கிரபாத முனிவரின் புத்திரராகிய உபமந்நியு பகவானுக்குக் குழந்தைப் பருவத்தி லுண்டாகிய பசியைத் தணிக்கும்பொருட்டுப் பாற்கடலை ஈந்தான் என்பார் "பாற்கடலை.........நடக்கவிட்டான்" என்றார். இத்தகைய முதல்வனை வணங்காதார் நடக்கை பயனில்லை என்பார் "என்ன நடக்கை இனி" என் றார்.

3. கொட்டினால் நெருப்புக் கொள்ளிபோல் எரியச் செய்வதாகிய கொள்ளித் தேள் கொட்ட, அதனால் துடிக்கின்ற பேய் பிடித்த குரங்குபோல், வஞ்ச மனமானது துள்ளுவது என்ன கருதியோ என்க.



## காந்தி திருநாள்

மகாத்மா காந்தியடிகளின் 63-வது பிறந்த நாட் கொண்டாட்டம் நமது நாடெங்கும்—இமயம் முதல் குமரிவரை வெகு சிறப்பாக நடைபெற்றது. 2-10-31-ம் தேதி வெள்ளிக்கிழமை முதல் ஒரு வாரம் "காந்தி வார"மாகத் திகழ்ந்தது. இங்கிலாந் திலும் காந்தி திருநாள் கொண்டாடப்பட்டது. காந்தி வாரத்தில் எங்கும் பொதுக் கூட்டம்! எங்கும் உற்சாகம்! எங்கும் ஊர்வலம்! எங்கும் காந்தி பேச்சு! ஆலயங்களிலெல்லாம் அபிஷேகாராதனை! ஆண்—பெண்—சிறுவர்—சிறுமியர் அடங்க லும் காந்தி திருநாமத்தை உச்சரித்தனர். ராமர், கிருஷ்ணர், புத்தர் முதலிய மகான்களின் பிறந்தநாட் கொண்டாட்டங்களை ஒரு குறிப் பிட்ட மக்களே கொண்டாடுவர். ஆனால் நம் உலகம் போற்றும் உத் தமர்-காந்தியடிகள் பிறந்த நாளைச் சாதி—சமய—மொழி—நிற வேற்று மையின்றி எல்லா மக்களும் கொண்டாடினர்—போற்றினர்! காந்தி யடிகளின் கொள்கைகளை—தத்துவங்களை எல்லாச் சமயத்தினரும் ஏற்றுக்கொள்கின்றனர். நமது அன்புத் திருவடிவை—அருண்மூர்த் தியை கிறிஸ்தவ சமயத்தினர் கிறிஸ்துவாகக் கருதுகின்றனர்; பௌத் தர் புத்தபகவானாகப் போற்றுகின்றனர். வைஷ்ணவர் விஷ்ணுவாக விரும்புகின்றனர். சைவர் சிவனாகச் சேவிக்கின்றனர். முஸ்லிம்கள் முகம்மது நபியாக முழங்குகின்றனர்.—சர்வ சமய தத்துவ சொரூபி யாக விளங்குகிறார் நமது மகாத்மா! இவ்வளவுக்கும் இவர்பால் அமைந்துள்ள ஆற்றல் என்ன என்பதை நேயர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டுகின்றோம்.

மகாத்மா காந்தியடிகள் தமது வாழ்நாள் முழுவதையும் "தரித் திர நாராயணர்க"ளாகிய ஏழை மக்களின் துன்ப நீக்கத்திற்கே செலவு செய்து வருகிறார். தென்னாப்பிரிக்காவில் ஏழை இந்திய மக் களின் பொருட்டுப் படாத பாடெல்லாம் பட்டார்; வெற்றிபெற்றார்.

இப்பொழுது இந்தியாவிலும் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க வீடின்றித் தவிக்கும் கோடிக் கணக்கான ஏழை மக்களின் பொருட்டே அல்லும் பகலும் அரும்பாடுபட்டு வருகிறார். வாயில்லாப் பூச்சிகளாகிய பாமர மக்களின் விமோசனத்திற்காகவே காந்தியடிகள் பூரண சுயராஜ்யம் கேட்கிறார். நாடு விடுதலையடைந்தால் ஏழை மக்கள் உண்டியும் உடையும் பெறுவதோடு எல்லாக் குடிமக்களும் நலம்பெற்று வாழ்வார்கள் என்ற ஆசையே காந்தியடிகளைச் சுயராஜ்ய வேட்கை கொள்ளுமாறு செய்துவருகிறது.

நமது இந்தியா செல்வங் கொழிக்கும் மணித்திருநாடாக ஒரு காலத்தில் விளங்கியது. இப்பொழுது அது பழங்கதையாகிவிட்டது. இந்தியரும் மனிதரா என்று பிறநாட்டார் ஈனமாகக் கருதும் இழிநிலையில் நாம் வாழ்ந்துவருகின்றோம். நமது அருமைப் பாரத நாடு நீர் நில வளங்களிற் சிறந்தது. விரிந்து பரந்த நிலப்பரப்புடையது. மலைவளமுடையது. இப்பொழுதும் இவையெல்லாம் எங்கும் ஓடிப்போகவில்லை; கடல் கொள்ளவும் இல்லை. ஜீவ நதிகளாகிய கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணை, காவிரி தாம்பிரபாணி முதலியன எப்பொழுதும்போல் பிரவகித்துக்கொண்டுதான் இருக்கின்றன. நிலங்களும் விளைந்துகொண்டுதான் இருக்கின்றன. மலைகளும் அப்படியேதான் நிற்கின்றன. இவையெல்லாம் இருந்தும் பயன் என்? கோடிக்கணக்கான மக்கட்கு அரை வயிற்றுக் கஞ்சிக்கும் வழியில்லை. மானங்காக்கவும் துணி இல்லை. பருத்தி ஏராளமாக விளைந்தும் ஆடைகளுக்காக அந்நிய நாடுகளையே எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. பலவகை வளங்களும் பழுத்து விளங்கிய கிராமங்கள், இப்பொழுது எல்லாவிதத்திலும் ஒளிமழுகிக் கிடக்கின்றன. கிராமங்களில் உழவுத் தொழில்களால் மக்களின் வாழ்க்கை சரிப்படுவதில்லை. பழைய கிராமக் கைத் தொழில்களெல்லாம் பாழடைந்தன. விளையும் மூலப் பொருள்களெல்லாம் பிறநாடுகட்கு ஏற்றுமதியாகிவிடுகின்றன. இந்நிலையில், கிராம மக்களின் வருவாயை வளர்க்கும் நோக்கத்துடனேதான் காந்தியடிகள் ராட்டினத்தைச் சாதனமாய்க் காட்டியிருக்கிறார். ஆண்—பெண்—வயோதிகர்—வாலிபர் என்ற வேற்றுமையின்றி எல்லாரும் ராட்டினத்தை மேற்கொள்ளலாம். இதைவிட வேறு நல்ல சாதனம் கிராம மக்கட்கு இல்லை என்று காந்தியடிகள் நிரூபித்துக் காட்டுகிறார். ராட்டினத்தில் நூல் நூற்று, கைத்தறிகளில் கதராடைகள் தயாரித்துப் பரப்பினால், கிராம மக்கள் உண்டிக்கும் உடைக்கும் பிறர் கையை எதிர்பார்க்க வேண்டிய துரதிர்ஷ்டம் இல்லாதொழியும். ராட்டையில் நூல் நூற்கும் தொழிலும், கைத்தறி நெசவுத் தொழிலும் விருத்தியானால் ஏழை மக்களின் கலிதீரும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இதுவே சிறந்த கிராம நிர்மாண வேலையுமாகும்.

கதரில் மக்களின் கருத்தூன்றச் செய்வதற்கு அந்நிய ஆடை



பகிஷ்காரம் கைக்கொள்ளப்பட்டது. பகிஷ்காரம் வலுக்க வலுக்கக் கதர்த் தொழிலில் உற்சாகம் அதிகரிக்கிறது. சுயராஜ்ய சித்திக்கு முன்னும் பின்னும் நமது நாடு உண்டிக்கும் உடைக்கும் பிறர் தயவை எதிர்பாராமல் தன்னைத்தானே சமாளித்துக்கொள்ளவேண்டும் என்பதே காந்தியடிகளின் கருத்து. இவரது சங்கற்பத்தை நிறைவேற்ற எண்ணியே "காந்தி வார"த்தில் கதரைப் பரப்பவேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் வல்லபாய் படேல் நாட்டு மக்கட்கு வேண்டுகோள் விடுத்தார். மில் துணிகளால் ஏழைகட்கு எத்தகைய நலமும் இல்லை என்பதையும், எல்லா நலமும் மில் முதலாளிகட்கே போய்ச் சேரும் என்பதையும் ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு கதரை வளர்த்துவருமாறு வேண்டிக்கொள்ளுகின்றோம்.

புண்ணிய பூமி என்று சிறப்பிக்கப்படும் நமது நாட்டில், இன்னும் மதுப்பேய் தலைவிரித்தாடி வருதல் வருந்தத்தக்கது. கள்-சாராயக் குடிகளால் கெட்ட குடும்பங்கள் எண்ணில. ஏழை மக்கள் பொருள் கொடுத்து மயக்கத்தை விலைக்கு வாங்குகின்றனர். தாமும் கெடுகின்றனர்; பெண்டு பிள்ளைகளையும் அலக்கழிக்கின்றனர். மனைவி மக்கள் கஞ்சிக்கும் கந்தைக்கும் ஏக்கமுற்றுத் திண்டாடிக்கொண்டிருக்க, நாள் முழுதும் பாடுபட்டுச் சம்பாதித்த அற்பத் தொகையைக் கள்ளரக்கனுக்குத் தாரைவார்த்து மயங்கும் மூடமக்களின் நிலைமை மிகவும் பரிதாபகரமானது. இதற்கும் அரசாங்கத்தார் துணைபுரிந்து ஆதரிக்கின்றனர்! அறிவும் இரக்கமும் படைத்த மக்கள் இக்கொடுமையைக் கண்டு எவ்வாறு பொறுத்துக்கொண்டிருப்பர் என்று கேட்கின்றோம்? தீனதயாளுவான மகாத்மா காந்தியடிகள் மதுப்பேய் ஏழைமக்களை வாட்டும் கொடுமையைக் கண்டே கள்-சாராயக் கடைமறியலில் கருத்தைச் செலுத்தினார்.

சென்ற ஆண்டில் நடைபெற்ற சாத்வீக சட்டமறுப்புப் போரின் பயனாகக் காந்தி-இர்வின் உடன்படிக்கை ஏற்பட்டது. சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டாலும் சாந்தமான முறையில் அந்நியத்துணி மறியலும், கள்-சாராய மறியலும் நடைபெறலாம் என்று காந்தி-இர்வின் உடன்படிக்கை ஒப்புக்கொண்டிருக்கிறது. அதை அநுசரித்து நாடெங்கும் அவ்விரு மறியல்களும் அமைதியான முறையில் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. லங்காஷயர் ஜவுளி வர்த்தக வீழ்ச்சியும், நமது நாட்டில் கலால் வருமானக் குறைவும் அவ்விரு மறியல்களின் ஒப்பற்ற சிறப்பை விளக்கி நிற்கின்றன. சர்வ வல்லமையுள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்தைச் சமா[illegible]ம் பேசத் தூண்டியதும், உடன்படிக்கைக்கு இணங்கச் செய்ததும் எது? நமது காந்தியடிகள் கண்டருளிய-சத்திய அஹிம்ஸா தருமத்தை அடிப்படையாகக் கொண்ட—சத்தியாக்கிரகமே என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்ளுவர்.

சத்தியாக்கிரகம் என்பது இதுகாறும் உலகங் கண்டறியாத அற்புத ஆயுதமாகும். சத்தியாக்கிரகத்தின் முன் துராக்கிரகம்-பலாத்காரம் தலையெடுத்து நிற்காது என்னும் உண்மையைச் சென்ற ஆண்டின் சட்டமறுப்புப் போர் காட்டிவிட்டது. வலியார் எளியாரைப் பலாத்காரத்தால் அடக்கிவிடுவது உலக இயல்பு. தனிப்பட்ட நபர்களும், நாடுகளும் ஒருவரையொருவர்—ஒன்றையொன்று அடக்கியாளுவதற்கு இதுகாறும் மிருகபலமே மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. எந்தநாட்டுச் சரித்திரத்தை எடுத்துக்கொண்டாலும் போர் முழக்கங்களே நிறைந்திருக்கக் காணலாம். நிலப்படை, நீர்ப்படை, ஆகாயப்படை முதலிய எல்லா வலிமையும் பொருந்தியுள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் காந்தியடிகள் எவ்வாயுதங்கொண்டு போர் தொடங்கினார்? நிராயுதபாணிகளாகிய ஏழை இந்திய மக்களை அஹிம்ஸா தரும வழியில் நிறுத்தி, சத்தியாக்கிரக ஆயுதத்தை மேற்கொள்ளச்செய்து போர் தொடங்கினார். அரசாங்கமும் தனது பிடிவாதத்தை விடுத்துச் சமரஸம் பேசி, உடம்படிக்கை செய்துகொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அவ்வுடன்படிக்கையின் பயனாகவே காந்தியடிகள் இப்பொழுது லண்டன்மகாநாட்டில் கலந்துகொண்டிருக்கிறார். காந்தியடிகளின் அஹிம்ஸாதருமக்கொள்கை முறையை உலகமே கொண்டாடுகின்றது. காந்தியடிகள் காட்டிய வழியே மக்கள் கைக்கொள்ளவேண்டிய உத்தம வழி. காந்தியடிகட்குச் சாதி சமய வேற்றுமை இல்லை. அவருக்கு எல்லாரும் சமம்; எல்லாரும் சகோதரர். இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கும், தீண்டாமை விலக்குக்கும் காந்தியடிகள் உள்ளன்புடன் சிரத்தைகாட்டி வருகிறார். காந்தியடிகள் கோரிய நிர்மாணத் திட்டங்களை எல்லாரும் ஒருமுகமாய் நின்று நிறைவேற்றி வைக்கவேண்டும். "காந்தி வார"த்தில் காட்டிய உற்சாகமும் ஊக்கமும் இவ்வாண்டு முழுவதும் காட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம். இவ்வாண்டிற்குள் நமது நாடு முழுதும் கதர்மயமாக விளங்கவேண்டும். குடிப்பழக்க முள்ளவர்களெல்லாரும் நல்லொழுக்கமுடையவர்களாய்த் திகழவேண்டும். தீண்டாமையை அறவே ஒழித்துவிடவேண்டும். "காந்திவாரம்" கொண்டாடுவதின் உண்மை நோக்கம் மேற்படி நிர்மாணதிட்டங்களை நிறைவேற்றலேயாகும். வெறும் ஊர்வலங்கள்—அபிஷேகாராதனைகள் — அன்னதானங்கள் செய்துவிட்டால் கோரிய பயன் கிடைத்துவிடும் என்று நம்ப முடியுமா? எல்லாரும் காங்கிரஸில் அங்கத்தினராகச் சேரவேண்டும். கிராமங்கட்குச் சென்று கதர்-மதுவிலக்கு-தீண்டாமைவிலக்கு முதலியவைகளின் அவசியங்களைப் பொது மக்கட்கு எடுத்துக் காட்டவேண்டும். காந்தியடிகளின் வெற்றி தோல்விகள் இங்கு நாம் செய்யும் உருவான வேலையைப் பொறுத்திருக்கின்றன என்பதை நாம் என்றும் மறந்துவிடக்கூடாது. காந்தியடிகள் வாழ்க. வந்தேமாதரம்.

ஓம் தத் ஸத்.

# காந்தி போதம்

## கட்குடி நீக்குமின்!

:(o):

(சர்க்கார் பாளையம்—ஸ்ரீமான். ச. க. சுப்பையன்.)

உலகி லுள்ளபல கோடி சீவனி னுயர்ந்ததென் றெவரு மேத்திடும்
அலகி லாமனித யோனி யின்னவ தரித்து நற்செய லனைத்துமாய்
நிலவி நின்றுதனி நெறியி னுய்த்திடுவ தென்று நாளுநனி நாடியே
குலவி நின்றபல நூலுணர்ந் தினிது குறைவில் தொன்னெறியின் மருவுவீர்!

மலையெ னும்பெரிய மணிசி றித்திரளை மாசுறக் கடிதி யற்றியே
அலைவு றும்மனதை யாசு மாக்கிநெறி தேசினும் பெரிது போக்கியே
கொலையை யும்கொடிய களவை யும்புரியக் கூட்டு விக்குமது வாதலால்
தொலைவி லாதநம காந்தி சொற்படியின் நீக்குவீர் மதுவை நீக்குவீர்

மனைவி மக்களுண வுணவி லாதுமிக வாடு கின்றநனி போதினும்
தனிய ளாகவுண வொண்ணு மோவினிது சால வுங்கொடிய தென்றுதன்
வினைவி னிற்சிறிது நேர்ந்தி டாதுதனி யுண்ணு விக்குமது வாதலால்
வினையை நீக்குநம காந்தி சொற்படியின் நீக்குவீர் மதுவை நீக்குவீர்

நீதி யானபல போத நன்னெறிகள் நீக்கு மாக்கமது மாந்தலால்
ஓது கின்றபல நோய்களும் மினிது(உ) வந்து சேரிடுவ தன்றியே
ஞாதி யார்பலரும் நாளும் வெந்துதவ நைய்ய நைய்யவுரை பெய்வதால்
காது நீக்கியருள் காந்தி சொற்படியின் நீக்குவீர் மதுவை நீக்குவீர்

யாது யாதுவுரை யாவ ரோதுகினும் ஏத மேபுரிகள் ளுண்பதலால்
தீதில் தாதையர்கள் தேடி நாடிமிக ஈட்டு நன்பொருளு மோட்டியே
சூதி னும்மனதை யீர்த்து மேபொருளைச் சேர்த்து கென்றுநனி செப்புமால்
சாது வானநம காந்தி சொற்படியின் நீக்குவீர் மதுவை நீக்குவீர்

பண்பு சாலுமொழி மாய வன்மொழிகள் பேசு விக்குமது வுண்டிடின்
நண்ப னென்றுமுண ராது புன்மொழிகள் நாவி னின்வர அயன்மனை
உண்ணி னைந்துமதி கண்ணி லாதுபுக வோட்டு விக்குமது வாதலால்
புண்ணி யப்புனித காந்தி சொற்படியின் நீக்குவீர் மதுவை நீக்குவீர்

வெறுமை யானபல வீறழிந் தமொழி கூறு விக்குமது வுண்டிடின்
சிறுமை யேயலது பெருமை தான்சிறிதுங் காணி டாதுநனி ஒருவீர்!
வறுமை யென்னுமறு வான சேற்றதனின் மாசு றக்கடி துழக்கிடும்
பொறுமை மிக்கநம காந்தி சொற்படியின் நீக்குவீர் மதுவை நீக்குவீர்.

நுண்மை யானபல நூலு ணர்ந்தவறி வோர்க ளின்னுரை மறுத்துமே
கண்க ளும்மரிய பஞ்ச டைந்துமிக வாடி யாடிநடு வழியிலே
பெண்க ளும்பரிய பேயி தென்றுமிக அஞ்ச நஞ்சுமது வீழ்த்தலால்
திண்மை யானநம காந்தி சொற்படியின் நீக்குவீர் மதுவை நீக்குவீர்.

கயக்கு றங்கொடிய கண்ணி லாதவர்கள் கண்டு சூழவகை செய்துபின்
பயக்கு நன்னெறிந டக்கு நண்புமிகு பண்பி,ஞரை நனி நீக்கியே
முயக்கி லாதபல செயலி லாழ்த்திவிடு மூர்க்க மானமது வுண்பதால்
மயக்கி லாவலிய காந்தி சொற்படியின் நீக்குவீர் மதுவை நீக்குவீர்

புங்க மானபல நூலு ணர்ந்தவனும் புனித மில்மதுவை யுண்டிடின்
துங்க மானபல றங்க ளுர்ந்திட மறம்வ ளர்ந்திடுவ தன்றியே
பங்க மானபல போரினும் பொருது பகையை மூட்டிவிடு மாதலால்
சிங்க மானநம காந்தி சொற்படியின் நீக்குவீர் மதுவை நீக்குவீர்.

---

# காந்தியடிகளும் திருக்குறளும்

(திருவானைக்கா-டி. எஸ். குழந்தைவேலன்.)

---

புதிய சோமேச வெண்பா.

1. உண்மை கொண்டோன் உயர்வு கண்டோன்

வாய்மை நெறியினால் வையகமே போற்றிசெயத்
தூய்மைகொண் டான்காந்தி சோமேசா—ஆய்வதெவன்
உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்.

2. அடக்க முடையோன் பெருக்க மடைவோன்

இல்லிற் புலனடக்கி இவ்வுலகி லேயுயர்ந்தான்
துல்லிய னுங்காந்தி சோமேசா—சொல்லு
நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினு மாணப் பெரிது.

3. இன்சொல் மொழிவோன் துன்பம் ஒழிவோன்

இன்பமொழி யேபேசி என்றுமே செல்வனாய்த்
துன்பமொழித் தான்காந்தி சோமேசா—உண்மையாய்த்
துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொல் அவர்க்கு.

4. அஞ்சாத சொல்லாளன் எஞ்சாத வல்லாளன்

அஞ்சாத நெஞ்சமொடு ஆர்த்தசபை யிற்பேசி
துஞ்சாச்சீர் கொன்காந்தி சோமேசா—விஞ்சிச்
சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

5. வலிகொண்ட நெஞ்சினேன் வையமதில் விஞ்சினேன்

உறுதி மனதால் உயர்வெற்றி கண்டான்
சுருதிமொழி சொல்காந்தி சோமேசா—இறுதியில்
எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

# காந்தி மணித்திரட்டு

தியாகம் என்னும் நெருப்பால் தூய்மை அடையாமல் எந்நாடும் முன்னேறியதில்லை. குழந்தையின் இன்பத்திற்குத் தாய் துன்பமேற்கிறாள். உலகில் ஒவ்வொரு உயிரும் இன்னொரு உயிருக்கு இடங்கொடுத்து விட்டு மடிகின்றது. ஆகவே தியாகம் செய்யாமல் பாரதமாதா தன் அடிமை விலங்கை அறுத்தெறிய முடியுமா?

*           *           *

சத்தியாக்கிரகம் என்பது சத்தியத்தைக் கடைப்பிடித்து நிற்றல். அதாவது சத்திய சக்தி. இதை அன்பின் சக்தி அல்லது ஆன்ம சக்தி எனவும் நான் அழைக்கிறேன்.

*           *           *

அஹிம்சை இல்லாத சத்தியாக்கிரகம் மாலுமி இல்லாத கப்பலை ஒக்கும். மற்றவர்கட்கு எத்தகைய தீங்கும் இழைக்காமல் நம்மையே நாம், துன்புறுத்திக் கொண்டு பிறரை மாற்றுவதே சத்தியாக்கிரகம்.

*           *           *

அரசாங்கத்தின் மிருகபலமோ அல்லது சமூகத்தின் பிடிவாதமோ எதுவாயினும் சரி, சத்தியாக்கிரகத்தின் மூலமாகவே எதிர்த்துப் போராட வேண்டும்.

*           *           *

உயிர்களைப் படைக்கும் ஆற்றல் மனிதனுக்கு இல்லை. ஆதலால் எவ்வுயிரையும் துன்புறுத்தவோ அழிக்கவோ அவனுக்கு உரிமை கிடையாது. ஆக்கியோனுக்கே அழிக்கும் அதிகாரம் உண்டு.

*           *           *

அஹிம்சையைக் கடைப்பிடிப்பவனுக்கு அன்பே துணைக்கருவி. நமக்குத் தீமை செய்பவரை நாம் வெறுத்துத் தள்ளக்கூடாது. அவர்கள்மீது அன்பு செலுத்தி, அவர்களிடமுள்ள தீய குணத்தைப் போக்கிவிடவேண்டும்.

*           *           *

சினமும், ஆத்திரமும் தோன்றும்போது அவற்றை அடக்கி மனதை அன்பு மயமாக்க வேண்டும். கோபத்திற்கு இடங்கொடுப்பவன் ஒரு சில நிமிஷங்கட்குத் தன்னையே தான் மறந்து மிருகமாகிறான்.

---

அதமர்கள், பொருளைமாத்திரம் விரும்புவார்கள். மத்திமர்கள், பொருள், கௌரவம் இரண்டையும் விரும்புவார்கள். உத்தமர்கள் கௌரவம் ஒன்றையே மேலான பொருளென ஆசிரயிப்பார்கள்.

தருமம், நியாயம், மக்களின் உரிமை முதலியவற்றிற்கு முரண்பட்டிருக்கும் சட்டங்களை எதிர்த்துப் போராடுவதே சட்டமறுப்பாகும்! இது சாத்வீகத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படுவதால் "சாத்வீகச் சட்டமறுப்பு" என்று பெயர் பெறும்.

* * *

சாத்வீக சட்டமறுப்புச் சாமானியமானதல்ல. இதற்கு மனவுறுதி, தன் கொள்கையில் தெளிந்த அறிவு, தியாக வுணர்ச்சி, சகிப்புத்தன்மை, அடக்கம், மரியாதை முதலிய குணங்கள் மிகமிக அவசியம். கோபம், பகைமை, துவேஷம் முதலியன இதற்கு எதிரிகள்.

* * *

தீமை என்று தோன்றுபவைகளுடன் ஒத்துழைக்க மறுப்பதே ஒத்துழையாமை. தற்போதுள்ள ஆட்சிமுறையால் தீமையே உண்டாவதனால் அதனுடன் நாம் ஒத்துழைக்க மறுத்து வருகின்றோம்.

* • *

"ஜானகிராமன்" "சீதாராமன்" "ராதாகிருஷ்ணன்" போன்ற பெயர்களை ஊன்றிக் கவனியுங்கள். ஆணைவிடப் பெண் உயர்ந்தவள் எனக் கருதப்பட்டே பெண் பெயர் முன்னும் ஆண் பெயர் பின்னும் வைக்கப்பட்டிருக்கின்றன.

* * *

சமயத்தில் தீண்டாமைக்கு இடமில்லை. இது சாத்தானின் குறும்பாகும்.

## காந்தியடிகளின் கடற் பயணம்

1 1888-ம் ஆண்டு செப்டம்பர் 4-ம் தேதியில் மகாத்மா காந்தியடிகள் பம்பாயிலிருந்து சீமைக்கு முதன் முதல் கடற்பிரயாணம் செய்தார். எல்லோருக்கும் சகஜமாக வரக்கூடிய கடல் நோய் (வாந்தி—தலைசுழற்றல்) அவருக்கு வரவில்லை. வெட்கத்தால் "டெக்கின்" பக்கம் வரவே இல்லையாம்.

2. 1891-ம் ஆண்டு ஜூன்-மீ 12-ம் தேதியில் "அஸ்ஸாம்" என்ற கப்பலில் சீமையிலிருந்து பம்பாய்க்குப் பிரயாணம் செய்தார். கப்பலில் எல்லாரும் நோயுற்றார்கள். சுகமாயிருந்தவர் காந்தியடிகள் ஒருவரே. "டெக்கின்" மீதிருந்து புயலைக்கண்டு மகிழ்ந்துகொண்டிருந்தார்.

3. 1893-ம் ஆண்டு ஏப்பிரல்-மீ பம்பாயிலிருந்து தென்னாப்பிரிக்கா—நெட்டாலுக்குப் பிரயாணம்.

காலதாமதத்தால் முதல் வகுப்பு "டிக்கட்" கிடைக்கவில்லை. பாரிஸ்டர் காந்தி "டெக்கி"ன் மீதிருந்து பிரயாணம் செய்ய விரும்பவில்லை—மனம் ஒப்புக்கொள்ளவில்லை. கப்பல் தலைவருடன் சம்பாஷித்து—வற்புறுத்தி முதல் வகுப்பு "டிக்கட்" சம்பாதித்தார். பிரயாணத்தின்போது காந்தியடிகள் கப்பல் தலைவருடன் சதுரங்கம் ஆடினார். கப்பல் தலைவர் காந்தியை அன்புடன் நேசித்தார்.

ஒரு கெட்ட ரூபாயைவிட, ஒரு நல்ல தம்படி எவ்வளவோ சிறந்தது.



4. 1896-ம் ஆண்டில் நெட்டாலிலிருந்து கல்கத்[illegible] கோலா" என்னும் கப்பலில் பிரயாணம்.

சகாப் பிரயாணியாகிய ஒரு ஆங்கில உத்தியோகஸ்தருடன் தினம் ஒரு மணிநேரம் சதுரங்கம். உருது, தமிழ்மொழிகள் கற்றல். ஸ்டீமர் கேப்டனுடன் நட்பு. ஆன்மார்த்தப் பிரசங்கம்.

1896-ம் ஆண்டு டிஸம்பர் மாதம் 1-ந் தேதியில் பம்பாயிலிருந்து நெட்டாலுக்கு "குர்லேண்டு" என்னும் கப்பலில் பிரயாணம்.

சார்ஜ் இல்லை. தருமபத்தினி கஸ்தூரிபாய், தம்மிரு குழந்தைகள், காலஞ்சென்ற மைத்துனரின் மகன் ஆகியவர்கள் சமேதம் இரண்டாந் தடவை தென்னாப்பிரிக்காப் பிரயாணம் செய்தார். குடும்பத்துடன் கடற் பயணம் செய்தது இதுவே முதல் தடவை. கப்பல் தலைவர் மிஸ்டர் கிளயண்ட் என்பவர் காந்தியடிகட்கு நண்பர். அதனால் காந்தியடிகட்குச் சொந்த வீட்டில் இருப்பது போன்ற சௌகரியங்கள் கிடைத்தன. பெரிய புயலடித்தது. பிரயாணிகள் பெரிதும் அஞ்சினர். காந்தியடிகள் அஞ்சவில்லை. தமக்குக் கடல் நோய் வராத காரணத்தால் கேப்டன் சொல்லிக்கொண்டிருந்த செய்திகளைப் பிரயாணிகளிடம் சொல்லிக்கொண்டிருந்தார். கப்பல் டிசம்பர் 18-ந் தேதியோ அல்லது 19-ந்தேதியோ டர்பன் துறைமுகம் சேர்ந்தது.

6. 1901-ம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவிலிருந்து பம்பாய்க்கு வந்தார்.

7. 1902-ம் ஆண்டு பம்பாயிலிருந்து தென்னாப்பிரிக்கா.

8. 1914-ம் ஆண்டு ஜூலை மாதம் தென்னாப்பிரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு ஸ்ரீமதி கஸ்தூரிபாயுடன் பிரயாணம்.

தென்னாப்பிரிக்காச் சத்தியாக்கிரகப் போராட்ட நாட்களில் காந்தியடிகள் மூன்றாவது வகுப்பிலேயே பிரயாணம் செய்வது வழக்கம். அம்முறையில் மூன்றாம் வகுப்பு டிக்கட் வாங்கினார். ஆகஸ்டு மாதம் 4-ம் தேதி பெரும்போர் ஆரம்பம். 6-ம் தேதி பத்தினியுடன் சீமையில் இறங்கினார்.

9. 1915-ம் ஆண்டில் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு "பி அண்டு ஓ" கப்பலில் பிரயாணம். மூன்றாவது வகுப்பு டிக்கட்டுக்கு முயற்சிசெய்தார். அது கிடையாமையால் 2-வது வகுப்பில் பிரயாணம் செய்தார். கோபாலகிருஷ்ண கோகலே அவர்களின் தலைமையில் பம்பாயில் பெரிய உற்சாகமான வரவேற்பு நடந்தது.

10.} கல்கத்தாவிலிருந்து ரங்கூனுக்கும் ரங்கூனிலிருந்து கல்கத்தா
11.} வுக்கும் "டெக்கி"ன்மீது பிரயாணம் செய்தார்.

12. 1931-ம் ஆண்டு ஆகஸ்டு மீ 29-ம் தேதி பம்பாயிலிருந்து இங்கிலாந்துக்கு "ராஜபுதனம்" என்ற கப்பலில் பிரயாணம்.

உலகம் போற்றும் உத்தமர்-மகாத்மா காந்தியடிகள் முப்பத்தைந்து கோடி பாரத மக்கட்குத் தனிப்பெருந் தலைவராகச் சென்றிருக்கிறார். செப்டம்பர் மீ 12-ம் தேதி லண்டன்மாநகரை அடைந்தார். வாழ்க காந்தியடிகள்! வந்தேமாதரம்!

ஒரு முட்டாளுக்குக் கிடைத்த அதிருஷ்டம் அவனுடைய துரதிர்ஷ்டமேயாகும்.

# மேனாட்டு விழுச் செல்வம்

(பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, எம். ஏ., பி. எல்.)

1 மனிதனைப் பூரணமாக்கவேண்டிய குணங்கள் எவை? கலங்கா அறிவு; அன்பு நிறை நெஞ்சு; நீதியான தீர்மானம்; ஆரோக்கிய உடல். கலங்கா அறிவின்றேல் அவசரமாய் முடிவு செய்துவிடுவோம். அன்புநிறை நெஞ்சின்றேல் சுயநலமுள்ளவராயிருப்போம். நல்ல எண்ணம் இருப்பினும் நீதியான தீர்மானமின்றேல் நன்மை உண்டாவதினும் தீமையே உண்டாகும். உடற்சுகமின்றேல் ஒன்றும் செய்ய முடியாது.

ஆவ்பரி.

2 ஜயமானது கிடைத்துக் கொண்டிருக்கு மட்டும் சந்தோஷம் தரும். பின்னர் அது பறவை பறந்தோடிவிட்ட பழைய உருவுக்கூடு.

பீச்சர்.

3 இல்லாத குணங்களுக்காக இளவரசரைத் துதிப்பது தண்டனை சாரா வண்ணம் பழிக்கும் முறையாகும். ரோஷிவக்கல்டு.

4 உயர்ந்தோர் அனைவரும் தங்கள் உயர்விற்கான குணங்களைத் தங்கள் தாயிடமிருந்தே பெறுகின்றனர். விலக்குகள் அறியா விதி ஏதேனும் உண்டேல் அது இதுவே. மிச்சலெட்.

5 குணமாகத் திருத்த முடியாத குற்றமும்—குற்றமாக இழிந்துவிடாத குணமும் நாம் இயற்கையிடம் பெறுவதில்லை. குற்றங்களில் இரண்டாவது வகையே குணமாக்க மிகக் கடினமானவை. கதே.

6 மனோவிகாரங்களே வாழ்வாகிய கப்பலைச் செலுத்தும் காற்று. அறிவே அதை நடத்தும் சுக்கான். கப்பல் காற்றின்றேல் நின்றுவிடும். சுக்கானின்றேல் தரைதட்டிவிடும். ஷ—ல்ஜ்.

7 மனித மனத்தின் தலைசிறந்த சிருஷ்டிகள் பூரணத்தில் மிகக் குறைந்தன என்பது முற்றிலும் நிச்சயம். வாவனார்கூஸ்.

8 பிறர் கூறுவதற்குச் செவிசாய்க்க அறிந்துகொள். தவறாய்ப் பேசுவோர்களிடமிருந்து கூட பலன் பெறுவாய். புளூட்டார்க்.

9 வீண் சொற்கள் விஷயங்களைப் பழுதாக்குகின்றன.

பிஷப் ஆண்டுரூஸ்.

10 படிப்பு அறிவிற்கான உபகரணங்களை மட்டுமே உதவும். படிப்பதை நமதாக்குவது சிந்தனையே. நாம் அசைபோடும் இனத்தைச் சேர்ந்த

---

அழுக்குப் பட்டாடையைவிட சுத்தமான கந்தல் மிக உயர்ந்தது; மதிப்புள்ளது.



வர். விஷயப் பெருஞ்சுமையொன்றை நம்மிடம் திணித்துக்கொண்டால் மட்டும் போதாது. அதை மறுபடியும் சுவைத்தாலன்றி அது நமக்கு போஷணையும் பலமும் அளியாது. லாக்.

11 வண்டுக்குக் குடிசையில் பூக்கும் ஒரு மலரில்கூடத் தேன் கிடைத்துவிடும். வண்ணாத்திப் பூச்சிக்கு அரசர் தோட்டத்தில் கூட அணுவளவு தேனும் அகப்படமாட்டாது. எட்வர்ட் புல்லர்.

12 மனம் ஒரு பெட்டியை ஒக்கும். ஒழுங்காக அடுக்கினால் அதற்குள் அநேகமாக ஒவ்வொரு வஸ்துவையும் வைத்துவிடலாம். ஒழுங்கின்றேல் எதை வைப்பதும் அரிதாய்விடும்.

13 விஷயத்தை விளக்கமாக வரையறுத்துக் கூறமுடியும்பொழுது மட்டுமே நிச்சயமாய் அதை அறிவோம் என்பதைச் சகல கலைகளும் ஒப்புக்கொள்கின்றன. மில்டன்.

14 சித்திரங்கள் தொங்கும் அறை சிந்தனைகள் நிறைந்த அறையாகும்.

ரெயினால்ட்ஸ்.

15 நன்றியறியாமையில் சகல இழிதகைமைகளும் அடங்கும். இதர துர்க்குணங்களோடு அன்றி அது ஒருபொழுதும் காணப்படுவதில்லை.

புல்லர்.

16 படிப்பின் நோக்கம் ஆட்சேபம் செய்தல், ஆராயாது நம்பிக்கை கொள்ளுதல், வாதம் செய்தல் இம்மூன்றும் அல்ல. ஆய்ந்து சீர்தூக்கித் தீர்மானித்தலே. பேக்கன்.

17 உலகிலுள்ள மக்களில் ஒருவன் தவிர ஏனையோர் அனைவரும் ஒரேவித அபிப்பிராயம் உடையவராயிருந்தால், அவ்வொருவனுக்குப் பலமிருந்தால் அவன் உலகத்தாரை வாயடக்க எப்படி நியாயமில்லையோ அப்படியே உலகத்தார் அவ்வொருவனை வாயடக்கவும் நியாயமில்லை.

ஜான் ஸ்டுவர்ட் மில்.

18 தவறான அபிப்பிராயத்தை ஒழிப்பதும், அறிவைத் தூய்மை செய்வதும், நமது அறியாமையின் ஆழத்தை உறுதி செய்வதுமே தத்துவ ஞானத்தின் தொழில். ஹாமில்டன்.

19 "அறியாமை"யால் நமக்குச் சௌகரியங்கள் கிடையாமல் போகும் என்பது மட்டுமன்று—நமது கேட்டிற்கு நம்மையே வேலைசெய்யத் தூண்டுவதும் அதுவே. அது அறிவிலா "இன்மை" என்பது மட்டும் அன்று—சதாகாலமும் துன்பம் தந்துகொண்டிருக்கும் தவறுகளின் "நிறைவு"ம் ஆகும். ஸாமுவேல் பெய்லி.

20 சாதாரண ஜனங்கள் மதிக்கும் உபயோகமற்ற விஷயங்களை அறியாதிருத்தற்கு மனோதைரியம் தேவையே. ஆனால் அந்த மனோதைரியம் உண்மையை விரும்புவார்க்கு அத்யாவசியம். ஸ்டுவார்ட்.

---

சமயோசிதமான சொல்லைச் சிறுவர் சொன்னாலும், கிளி சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்ளல்வேண்டும். அதே அயுக்தமான சொல் பெரியோரிடத்திருந்து வந்தாலும் அதை நிக்ரஹம் செய்தல்வேண்டும்.

21 நூல்களைப் பற்றிய "சுவையறிதல்" என்றால் என்ன? நூல்களின் குணங்களைச் சந்தோஷத்தோடும் குற்றங்களை வருத்தத்தோடும் காணும் மனப்பான்மையே சுவையறிதல் ஆகும். அடிஸன்.

22 தன் அபிப்பிராயங்களில் எதையும் ஒருபொழுதும் மாற்றிக்கொள்ளாதவன் தன் தவறுகளில் எதையும் ஒருபொழுதும் திருத்திக்கொண்டவனல்லன். தன்னிடம் குற்றம் எதுவும் காணப்போதிய அறிவில்லாதவனுக்குப் பிறரிடமும் குற்றம் என்று அவன் கருதும் எதையும் மன்னிக்கப் போதிய தயாள குணம் இருக்காது. விச்கோட்.

23 "மானம்" என்னும் வர்க்கத்தின் ஆண் "வாய்மை"—பெண் "தூய்மை"

24 தத்துவ ஞானம் எல்லாம் ஆச்சரியத்தில் ஆரம்பித்து ஆச்சரியத்தில் முடிவடையும். ஆதி ஆச்சர்யம் அறியாமையின் குழந்தை; அந்த ஆச்சரியமோ வணக்கத்தின் தாய். முதலாவது நமது அறிவின் பிரசவக் கஷ்டம்; இறுதியானது அதன் சுக மரணம். கோல்ட்ரிட்ஜ்.

25 பேரெண்ணங்கள் எல்லாம் வெகு எளியன. அதுபோலவே பெரியோர்களும் எளியர்.

26 ஆணுக்குள்ளதைவிடப் பெண்ணுக்கு இயற்கை யறிவின் ஆற்றல் நிச்சயமாய் அதிகம். சாதாரண அறிவு சக்தியில் பெண் ஆணுக்குத் தாழ்ந்தவளே. ஆனால் உணர்ச்சிகளின் தூய்மையிலும் உயர்விலும் ஆணைவிடப் பெண் பன்மடங்கு உயர்ந்தவளாவள். பெண்ணின் ஆக்கை ஆன்ம இயல்பு ஆணுக்கு இல்லாததை அளிக்கத்தக்க முறையில் அழகாய் அமைந்துளது. ஆணின் சக்திகளை அவள் தூய்மைசெய்து உயர்த்தாவிடில் அவை இழிந்த சுயநல இலட்சியங்களுக்கே உபயோகிக்கப் பெறும். டாக்டர் கார்பெண்டர்.

27 இன்பம் எல்லாம் துன்பவிலை கொடுத்தே வாங்கவேண்டும். மெய் யின்பத்திற்கும் பொய்யின்பத்திற்கும் உள்ள வித்தியாசம் இதுவே—மெய்யின்பத்திற்கு விலை அதை அனுபவிக்கு முன் கொடுக்கப்படும். பொய்யின்பத்திற்கு விலை அதை அனுபவித்த பின் கொடுக்கப்படும்.
ஜான் பாஸ்டர்.

28 நகைப்பில் எவ்வளவு அடங்கியிருக்கின்றது! மக்கள் அனைவருடைய மனத்தையும் திறந்து அறிவதற்கேற்ற பொதுச் சாவி அதுவே. நகைக்க முடியாதவன் துரோகம் தந்திரம் திருட்டு செய்யத் தகுந்தவன். இப்பொழுதே அவனுடைய வாழ்வு முழுதுவதும் ஒரு துரோகம், ஒரு சூழ்ச்சி. கார்லைல்.

29 தாராளம் சேருமானால் சிக்கனம் நல்லதே. சிக்கனம் அனாவசியச் செலவுகளை ஒழித்தலாகும். தாராளம் தேவையுள்ளவருக்கு அனுகூலமாக அவைகளை உபயோகிப்பதாகும். பின்னதில்லா முன்னது பிறர் பொருளாசை பிறப்பிக்கும். முன்னதில்லாப் பின்னது வீண் பொருள் விரயம் விளைவிக்கும். பென்.

சிநேக முண்டாகாதவரையில் ஒருவனைக் கண்டால் மரியாதை செய்ய வேண்டும். அவனிடம் சிநேகமுண்டான பிறகு செய்யும் மரியாதை கபடமானதே.



30 குழந்தைகள் பாடம் கற்கும்பொழுது தங்களுக்குப் படிக்கக் கஷ்டமாயுள்ள கடின மொழிகளை கவனியாது கடந்து செல்வதுபோல், சிலர் தங்கள் குறைகளைக் கவனிப்பதிலர். லெய்ட்டன்.

31 தன்னைக் காண்பதுவே மிகக் கடினமான காரியம். பிறர் செயல்களில் குற்றம் காண்பதுவே மிக எளியகாரியம். தேல்ஸ.

32 திருப்தியுள்ள பன்றியாயிருப்பதினும் திருப்தியில்லா மனிதனாயிருப்பது நலம். திருப்தியுள்ள மூடனாயிருப்பதினும் திருப்தியில்லா ஞானியாயிருப்பது நலம். பன்றியும் மூடனும் இவ்வபிப்பிராயத்திற்கு மாறுபட்டால், அதற்குக் காரணம் அவர்களுக்கு விஷயத்தில் தங்கள் பட்சமே தெரியும். ஒப்பிட்டதிலுள்ள பிறரோ இருபட்சமும் அறிவர்,
ஜான் ஸ்டுவர்ட் மில்.

33 இதைக் கூறியது யார் என்று தேடற்க. கூறியதை மட்டுமே ஆராய்க.
தாமஸ் அக்கம்பிஸ்.

34 உண்மையைக் கண்டுபிடிப்பதே மனிதனுடைய மகோன்னதமான லட்சியம். உண்மையைத் தேடுவதே பரமோத்தமமான தொழில், அது அவனுடைய கடமையுமாகும். எட்வர்ட் போர்ப்ஸ்.

35 நம்பக்கம் உண்மையிருப்பது வேறு—நாம் உண்மை யின்பத்திலிருக்க விரும்புவது வேறு. வாட்லி.

36 முதலில் தூசியைக் கிளப்பிவிடுகிறோம், பின்னால் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகிறோம். பிஷப் பார்க்லி.

37 மனிதனுடைய முதன்மொழி "ஆம்" இரண்டாவது "அன்று" மூன்றாவதும் இறுதியானதும் "ஆம்"—பலர் முதலாவதோடு நின்றுவிடுவர். வெகு சிலரோ இறுதிமொழி வரைச் செல்வர்.

38 தத்துவ ஞானிக்குப் பிறர் யோசனைகளைக் கேட்க விருப்பமும், ஆனால் தானே ஆராய்ந்து முடிவுகட்ட மனவுறுதியும் வேண்டும். உழைப்பும் இருந்துவிட்டால் அவன் "இயற்கை"யின் ஆலயத்திலுள்ள இரகசிய மண்டபத்தினுள் நுழையவும் எதிர்பார்க்கலாம். பாரடே.

39 மெய்கலந்த தவறுகளே அபாயகரமானவை. மெய்க்கலப்பாலேயே அவைகளுக்கு எங்கும் பரவச் சாத்தியமாகின்றது. சுத்தப் பொய்யால் தொந்தரவு ஒருநாளும் உண்டாவதில்லை. விட்னி ஸ்மித்.

40 சுருதிக்காக அறிவை அகற்றுபவன் இரண்டின் ஒளியையும் அவிப்பவனாவான். அவன் செயல் கண்ணுக்கு எட்டா நட்சத்திரத்தை தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியாய்த் தெளிவாய்ப் பார்ப்பதற் கென்று கண்களை அவித்துக்கொண்டது போலாம். லாக்.

41 மதப் பிடிவாதமுடையவர் தங்கள் காலத்தில் மட்டுமே மதியுடையவராய் மதிக்கப்படுவர். தாமஸ் வில்ஸன்.

42 உண்மையைக் காண அறிவை அழிக்கச் சொல்லுதல் பகலொளியைக் காண கண்களை அவித்துக்கொள்ளச் சொல்லுதல் போலாம். அறிவை அழிக்கச் சொல்வது சமயத்தின் சூழ்ச்சியன்று; மூட நம்பிக்கையினதே.
தாமஸ் வில்ஸன்.

43 பண விஷயமாய் நம்பத் துணியாத இடத்தில் ஆன்ம விஷயமாய் நம்பத் துணிவது எவ்வளவு விபரீதம்! மதாச்சாரியார் காலணாக் கொடுத்தால் அது செல்லுமோ செல்லாதோ என்று சந்தேகிப்போம். ஆனால் அவர்கள் கூறும் மதத்தை ஆராயாது சரி என்று அங்கீகரித்துவிடுகின்றோம். என்னே மனிதர் மடமை!
பென்.

44 நாம் பிறரிடம்கண்டு பரிகாசம் செய்யும் குற்றங்கள் நமக்குள் நம்மையே பரிகாசம் செய்யும்.
ஸர் தாமஸ் ப்ரௌண்.

45 அறத்திற்குப் போலவே மறத்திற்கும் பிராணத்தியாகிகள் உண்டு.
கோல்டன்.

46 விக்கிரகங்கள் சந்தேகத்திற்கு இடமாயும், வணங்குவோர் இதயத்திற்கு (எவ்வித நல்லுணர்ச்சியும் தரச் சக்தியற்ற) சர்வ சூன்யமாயும் ஆகும் பொழுதுதான் "விக்கிரக ஆராதனை" தவறாகும்.
கார்லைல்.

## சந்தா நேயர்களுக்கு அறிக்கை.

நேயர்களே! தபால் இலாகாவில் ரிஜிஸ்திரேஷன் கட்டணம் இரண்டணாவிலிருந்து மூன்று அணாவாக இம்மாதம் முதல் தேதி முதல் உயர்த்தப்பட்டிருப்பதால் சந்தாத் தொகைக்காக வி. பி. அனுப்பினால் சந்தாத் தொகையுடன், ரிஜிஸ்திரேஷன் கட்டணம், மணியார்டர் சார்ஜ், பார்சல் செலவு ஆகிய மூன்றும் சேர்ந்து ஆறு அணா அதிகமாகின்றது. ஆகவே சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்பிவிட்டால் சந்தாவுடன் மணியார்டர் சார்ஜ் இரண்டணாதான் செலவாகும். ஆதலால் நமது 'ஆனந்தன்' மாத, வாரப் பதிப்பின் சந்தாநேயர்கள் இரு தரப்பினருக்கும் நஷ்டமில்லாத வகையில் சந்தாவை மணியார்டர்மூலம் அனுப்பிவிடுவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

மானேஜர்.

# இன்பந்தேடிய இளவரசன்.

(T. S. குழந்தைவேலன், திருவானைக்கா.)

'இல்லறவாழ்வில் இன்பம் நிறைந்தில்லை. துன்பக் கலப்பற்றது துறவற வாழ்க்கையே.' இதே எண்ணத்துடன் நாட்டை விட்டுக் காட்டை யடைந்தேன். துறவி யொருவரின் மலைக்குகையில் துணிகரமாய் நுழைந்தேன். ஆழ்ந்த எண்ணத்துடன் அமரிக்கையாய் அமர்ந்திருந்த துறவியைக் கண்டேன். அவர் முகத்தோற்றம் என் மனதிற்கு ஆனந்தத்தை யூட்டியது. இவரிடந்தான் இன்பத்தைக் கொள்ளை யடித்துக்கொண்டு போக வேண்டுமென்று உறுதி கட்டினேன். மெள்ள என் கருத்தை அவாறிய வெளியிட்டேன். அவர் இன்பமலையை எடுத்துக் கொடுப்பாரென்று ஆவலாய் எதிர் பார்த்தேன். அவர் சொன்னதைக் கேளுங்கள்—"நான் துறவியாகிப் பதினைந்தாண்டு ஆகிறது. என்னைப் பார்த்து எவரும் துறவறம் பூணுவது எனக்குச் சம்மதமல்ல. இளம்பருவகாலத்தில் நான் இராணுவத்தொழில் செய்து, வரவரத் தாமுயர்ந்து தளபதியானேன். பரவிய தேசங்களுக்குப் படை யெடுத்துச் சென்றோம். பல சண்டைகளைக் கண்டேன். பலகோட்டை முற்றுகையைப் பார்த்தேன். கடைசியில், பருவத்தில் குறைந்த இராணுவத் தொழிலாளர் ஒருவருக்கு மிகுந்த நன்கொடை நடந்ததனாலும், எனது ஆண்மை குன்றியதனாலும் சமாதானமாய் இளைப்பாறி யிருந்து நாள்கழித்து இறக்க நிச்சயித்திருந்தேன். இல்வாழ்க்கையில் இடையூறு விளைவிக்கும் இன்னலும் பிணக்கும் மிகுதியெனக்கண்டு துறவி யானேன். முன்னொரு முறை மாற்றானொருவன் என்னைத்தொடர, அவன் கண்ணுக்குத் தப்பிப் பிழைக்கும்படி நானடைந்த அடைக்கல ஆலயம் இந்தக் கல்வளை. ஆரம்பத்தில் இவ்விடம் எனக்கு இன்ப மளித்தது. ஆனால் பழகப்பழகப் பாலும் புளிக்கும் என்றபடி யாயிற்று. என் புதிய இன்பம் எங்கேயே ஓடி யொளித்தது. என்னென்னவோ எண்ணங்கள் என்மனதை அலட்டுகின்றன. நல்வினை விட்டாலன்றித் தீவினைக்கு விலகுவது அசாத்திய மென்று என் நெஞ்சில் சில வேளை சிந்தனை பிறப்பதை நினைந்து நாணுகிறேன். நான் துறவியானதற்குக் காரணம் பக்தியல்ல; குரோதமே. பைத்தியமான காட்சிகளைக்கண்டு என் மனம் களியாடுகின்றது. நான் போக்கடித்தது அதிகம்—வரப்பெற்றது கொஞ்சமென்று எண்ணித் துயரப்படுகிறேன். தீயோர் செல்லும் வழியைக் கண்டு அதில் செல்லும் நிமித்தம் ஏகாங்கியாகிய எனக்கில்லை. நல்லோர்

---

உண்மையில் பெருங்கடல் நம்மால் அறியப்படாமல் பரந்து கிடக்கின்றது. நாமோ கடற்கரையில் விளையாடி, அங்குமிங்கும் ஓடி, அழகான ஒரு சிப்பியையும் மெல்லிய ஒரு கடற்பாசியையும் கண்டு மகிழ்ந்து நிற்கும் சிறு குழந்தைகளைப்போல் இருக்கின்றோம்.

சொற்றுணை-பழக்கம் உண்டா? அதுவும் இல்லையே. இல்லற வழியில் நிற்பவர்களுக்கு உண்டாகும் இன்ப துன்பங்களைத் தரம்போட்டுப் பார்த்து, துன்பத்திலும் இன்பமே அதிகமென்று கண்டு, நாளையதினம் ஊருக்குப் பறப்படவிருக்கிறேன். தனிமையில் நாளைக் கழிப்பவனுக்குத் துன்பம் பெருகுவது நிச்சயம்'' என்றார். நான் இதுவரையிலும் அவர் சொன்னவற்றை மூச்சுப் பிடித்துக் கேட்டுக்கொண்டிருந்தேன். இப்பொழுதே எனக்கு உச்சுவாசம் நிச்சுவாசம் ஒழுங்காய் வரத் தலைப்பட்டது. இன்பம்தேடி இடர்ப்பட்டது போதுமென்று சாமியாரையும் அழைத்துக்கொண்டு நாட்டைநாடி வந்து அவரைவிட் டகன்றேன். அத்துடன் என்னாசை அடங்கி விட்டதா? அது ஒரு நாளுமில்லை. இன்பமாங் காதலியை இறுக அணைத்து முத்தமிடும் வரையிலும் என்னிரு கண்களும் உறங்கா. எனது உள்ளமுஞ் சலியாது. இதோ கூவிப் புறப்படுகிறேன்—இன்பம் எங்கே யிருக்கிறது?

***

இயற்கைநெறி விலகாது ஒழுகுவோர்க்கு இன்ப முண்டாமென்று எவரோ மொழிந்தது என்காதில் விழுந்தது. திரும்பிப் பார்த்தேன். இருவர் ஓரிடத்தில் இன்பங் குறித்து வாய்ப்போர் நிகழ்த்துவதை வகையாய்க் கண்டேன். "இன்பம்பெறும் ஆசை, மனிதர் நெஞ்சில் அடியுற அழுந்தியிருப்பதனால், இன்பம் தமக்கு ஏற்படாதென்று நாட்பட அனுபவசித்தமாய் அறிந்திருப்பினும், அவ்வாசைக்கு ஓரழிவில்லை. இம்மையில் எவ்வித நிலையிலிருப்பவர்க்கும் துன்பமேயின்றி இன்பமேயில்லை'' என்றாரொருவர். இன்னொருவர் ஆத்திரத்துடன் எழுந்தார். "தான்தான் செய்த பிழையாலன்றி மற்றப்படி எவனும் துன்புறுதிருக்குங்காலம் வந்துவிட்டது. கருணாநிதியாகிய பகவான் நமக்கு எட்டும்படி கிட்டவைத்திருக்கும் இன்பத்தைப் பெறும் வகையாதென்று கண்கெட்டவர்கள்போல் விசாரிப்பதைவிட மிக்க பைத்தியம் மற்றொன்றில்லை. இயற்கைக்குப் பொருந்த ஒழுகுவதே இன்பம் பெறும் மார்க்கம். "இயற்கை நெறிவிலகல் இன்பநெறி விலகல்'' என்னும் இளைஞரும் எளிதிலுணரத்தக்க தெள்ளிய நீதிமொழியை நமக்கு மறைமொழியாய்த் தலைமேற்கொண்டு ஒழுகக் கடவோம்'' எனப் பகர்ந்தார். இவரோ என் மனப்பிணி தீர்க்கும் மருந்தெனத் துணிந்து அவரிடஞ்சென்று, என் ஆவலைத் தெரிவித்துப் பலபல உசாவினேன். என்மனதிற்படாத என்னென்னவோ செய்திகளை அவர் சொன்னார். சொல்லச் சொல்லப் பொருளை விள்ளாமல் மயங்கவைக்கும் ஞாதாக்களில் இவரும் ஒருவரென்று விரைவிலறிந்து கொண்டு விலகினேன். இன்பந்தேடுவதில் இத்துணைப் பாடுகளா? துன்பத்திற்குப் பிறகு இன்பமுண்டே! நான் இத்தனை துன்பம் அநுபவித்ததற்கேனும் இன்பமுண்டா? இன்னும் அலைந்து பார்க்கிறேன். இன்பம் எங்கே யிருக்கிறது?

அரச வாழ்விலேயே அதிக இன்பம். இதை முன்னமேயே அறியாமற் போன என் அறிவென்ன? ஆ! எத்தனைபெயர் அவனைப் பணிகிறார்கள்! அவன்போல் பாக்கியவான் யாருளர்? என்றும் மகிழ்ந்து இன்பமே துய்க்கும்

---

அரண்மனையில் வாசம் செய்தாலும் எதைப் பார்த்தும் ஆனந்திக்க முடியாதிருப்பதைவிட, ஒரு சிறு குடிசையில் வாசஞ் செய்தாலும் அரண்மனையைக் கண்டு ஆனந்திக்கக் கூடியதாயிருப்பதே பேரின்பம் தருவதாகும்.



இராசனே எனக்கு இன்பப்பொருளை எடுத்தளிக்க வல்லவன்;-கிட்ட நெருங்குகிறேன். ஆ! எவ்வளவு கண்ணியத்தோடு கூடிய மரியாதை! நிறைகுடம் நீர் ததும்புமா? "இன்ப வேந்தரே! இன்பவேட்கை கொண்டலையும் எனக்கு இன்பம் நல்குவீரா? விழைபயன் கருதாது மழைபோ லுதவும் மாமலர்க் கையினையுடைய வள்ளலே! வேண்டிய பொருளை ஈண்டே தருவீர்!'' என்று நான் அவசரமாய்க் கேட்டது ஆச்சரியமா? ஆ! ஆ! அரசன் மறுமொழி என்னை அப்படியே வாரித்தூக்கிப் போட்டு விட்டதே! கிணறு வெட்டப் பூதம் புறப்படுகிறதே! அவன் வாய்மொழி வருமாறு:—"இன்பந் தேடும் இளங்குமரனே! அறிவு பொருந்த அரசாள்வதில் அநேககோடி மக்கள் இன்பநிலையுற் றிருப்பதைக் கருத்துறக்கண்டறியும் இன்பத்திற் கொப்பான இன்பம் வேந்தனுக்கு வேறொன்றில்லை. ஆயினும் இராச்சியத்தில் வாழும் எல்லாமக்களும் அரசன் ஆணைகடவாது நடப்பதுபற்றி அவ்வரசன்ஒருவனுக்குமாத்திரம் உண்டாகும் மேலான இன்பத்திற்கு ஒரு குறையிருக்கிறது. அது நால்வர்க்கும் பொது இன்பமல்ல; ஒருவனுக்கே சிறந்த இன்பம்; பிறர்க்குக் கிட்டா இன்பம். இப்படிப் போக்கு நீக்கற்ற அரசனொருவன் இதயத்திலடங்கி அவனோடு அழிந்துபோகும் இன்பத்தைத் தோற்றுவிக்கும் பொருட்டு அநேகம் பேர் அவன் சித்தத்திற் கடங்கி நடத்தல் சிறப்பல்லவே; அறமுமின்றே. ஆகவே, இதனினும் மேலான இன்பம் மற்றொன்று இருக்கவேண்டுமென எண்ணுகிறேன். இன்னுங் கேள் இளவரசனே! என் கீழ் வேலைசெய்வோரனைவரும் ஒருவர்க்கொருவர் அழுக்காறுகொண்டு அலைகிறார்கள். பொய், புனைசுருட்டு, சதிசூழ்வது, கலகம் விளைவித்துக் கட்சி பிரிப்பது முதலிய அருங் குணங்களை அவர்களிடங் காணலாம். இவர்களைக் கட்டிக்கொண்டு அரசாளும் நான் இன்பமே காண்பது எப்படி? இன்னும் வேற்றரசர்களின் படை யெடுப்புக்கு அச்சங்கொள்ளும் என்னுளத்தில் இன்ப வெள்ளமோடாமல் அணைபோட்டுத் தடுக்கப்படுகிறது...'' இதற்குமேல் அவர் மொழிகளைக் கேட்டுக்கொண்டிருக்க என்னிடம் பொறுமையில்லை. ஐயகோ! அரசவாழ்விலேயே அவதியென்றால் அப்புறம்! இன்பம் எங்கே யிருக்கிறது?

***

எளிய வாழ்க்கையிலுள்ள ஏழைகளிடமே என் இன்பம் குதிகொண்டு விளையாடும். அங்கு போய்த் தேடுகிறேன். பாழும் உலகமே! என்ன நான் இப்படி ஏமாறுகிறேன்! எத்தனை வீடுகளில் நுழைந்து பார்த்தும் இன்பமாம் செல்வியைக் காணவில்லையே! தரித்திரமுள்ள குடும்பங்களிலும் இல்லாத குடும்பங்களிலும் சாதாரணமாய்ப் பிணக்கு இருக்கிறது! ஒரு இராச்சியமாவது பெருங் குடும்பமானால், ஒரு குடும்பம் கலகக் கட்சிகளால் பின்னப்பட்டுக் காலச் சக்கரச் சுழற்சிக்கு இலக்காயுள்ள சிறு இராச்சியமாகும். உலகப் போக்குத் தெரியாதவன் பெற்றார்க்கும் பிறந்தார்க்கும் உள்ள அன்னியோன்னிய அன்பு நிலைபெற்றுச் சமமாயிருக்கு மென்று எண்ணுவான். ஆனால் இவ்வன்பு பிள்ளைப் பருவம் கழிந்த பின் நிலைபெறுவது அரிது. பிறந்து சிறிது

---

தீ யொழுக்கத்திற்குக் கட்டுப்பாடில்லை என்று நினைப்பது தவறு. தீயவனே எஜமானர்கள் அனைவரிலும் கொடிய எஜமானனுக்கு அடிமையாயிருக்கின்றான். அக் கொடிய எஜமானன் யார்? அவனுடைய சொந்த தீய உணர்ச்சிகளே.

காலத்திற்குள் பிள்ளைகள் வளர்ந்து பெற்றோர்க்கு எதிரிகளாகிறார்கள். பெற்றோரும் பிள்ளைகளும் மனமொத்து ஒழுகுவது அரிது. எல்லோரும் நல்லோரா யிருக்கும் குடும்பத்தை எங்குங் காணோமே! அடிக்கொரு குணங்கொள்ளும் ஐசுவரியவான்களாகிய உற்றார் உறவினர்களால் என்னென்ன கெடுதி நேரிடுமோ வென்று சிலர் இடைவிடாது ஏங்கித் திகைக்கிறார்கள். செல்வர்களிடம் இதமாய் நடக்கவும் இயலவில்லை. பிழையாய் நடக்கவும் பயப்படுகிறார்கள். இதனால் வாடுவோர் பலர். கணவர் சிலர் துடுக்கர்; மனைவியரிற் சிலர் வக்கிர குணமுடையவர். பெரும்பாலும் இவ்விதமே துயர்க்கடலில் ஆழ்ந்திருக்கிறார்கள். இளைஞர் பலர் துன்பத்திற்குப் பயந்து 'அவளைத் தொடுவானேன் கவலைப்படுவானேன்' என்று மணமின்றித் தனியே வாழ்கிறார்கள். போதும்! போதும்! எங்கும் ஏமாற்றமா? இன்பந்தேடி இன்னும் எங்கெங்கு திரிந்து இளைப்பேன். கடவுளே! என் முயற்சியில் வெற்றி காண்பது குதிரைக் கொம்புதானோ? இன்பந் தேடிய என் நெஞ்சு இளைக்கிறதே! ஊக்கம் சலிக்கிறதே! என்ன? என் உறுதி எங்கே சென்றது? இதோ! இதோ! குதித்தெழுந்தேன்! இன்பம் எங்கே யிருக்கிறது?

புதிதாய் மணஞ் செய்துகொண்ட புருஷன் மனைவியரிடம் இன்பந் துள்ளி விளையாடும். அங்கு சென்று அதை அள்ளிக்கொண்டு வந்துவிடுகிறேன். ஆகா! இந்த என் எண்ணம் எப்படி வெடித்து வெறுங் காற்றாய் விட்டது! கேட்கிறீர்களா நான் கண்டறிந்த அநுபவத்தை? மனிதருக் குண்டாகும் எண்ணிறந்த துன்பங்களில் மணமும் பலவிதத் துயரங்களுக்கு வழியா யிருக்கிறது. விவாக நிலைக்குரிய வெவ்வேறு துக்கம் துயரையும், கணவனுக்கும் மனைவிக்கும் சடுதியில் தீராப் பிணக்கு உண்டாகும் ஏதுக்களையும், இருவர் குண பேதங்களையும், கருத்து விரோதத்தையும், ஒருவர் விருப்பத்திற்கு ஒருவர் விருப்பம் மாறுபடும்பொழுது உண்டாகும் கடுஉக்கிர விவாதங்களையும், நெஞ்சறிய நன்றென அவரவர் தழுவிய இருவித சுகுணம் ஒன்றுக்கொன்று வேறுபடுங்கால் உண்டாகும் பிடிவாதச் சண்டையையும் மதித்துப் பார்க்குமிடத்தில் மணத்தில் இன்பமில்லை யென்றே தெரிகிறது. இன்னுஞ் சில கேளுங்கள். தற்செயலாக ஓரிடத்தில் சந்திக்கும் வாலிபராகிய ஆண் பெண்கள் ஒருவருக்கொருவர் கண்ணம் பெய்து இருவரும் நேரிற் கண்டு மரியாதை செய்து, அவரவர் வீட்டிற்போய்ச் சேர்ந்து தனிமையிலிருக்கும் பொழுது ஒருவரை யொருவர் கனவிற் காண்பார்கள். வேறு பராக்கு நினைவற்று இராப்பகல் இருபோதும் அதே சிந்தையா யிருப்பதனால், பிரிந்திருக்கும் பொழுது அவர்கள் மனம் துன்பப்படும். ஆனதால், இருவருங் கூடி வாழ்ந்தால் இன்பமுண்டென்று அறுதியிட்டு மணமுடிப்பார்கள். இம்மங்கல மணத்திற்கு முந்தி அவர்கள் கண் திறந்து பாராதுவிட்ட குணக்கேடுகளெல்லாம் பின்னிட்டுத் தெளியத் தோன்றும். தோன்றத் தோன்ற நாயும் பூனையும்போல் அவர்களுக்குத் தீரா வாக்குவாதம் உண்டாகி வாழ்நாள் குன்றும். கண்கெட்ட தெய்வம் இப்படித் தம்மைச் சேர்த்துவைத்து வருத்துகிறதே யென்று அவர்கள் கடவுளை நோவார்கள். அன்றியும் பருவத்திற்கு முந்தி மணம் முடிவதனால் பெற்றோர்க்கும் பிள்ளைகளுக்கும் எதிரிடை உண்டா

நம் வாழ்நாள் அற்பம் என்று எப்பொழுதும் வருந்துகின்றோம். ஆனால் அதற்கு முடிவில்லாதது போலவே காரியங்களைச் செய்துகொண்டு போகிறோம்.



கின்றது. தந்தை மனம் கசந்து உலகப் பற்றைக் கைவிடுமுன் மைந்தன் அதைக் கைப்பற்றிக் கொள்ளப் பதைப்பான். தாய்க்குப் பருவம் தளருமுன் மகள் பக்குவமடைவாள். இதனால் பெற்றோரை விட்டுப் பிள்ளைகள் பிரிந்துவிட வேண்டுமெனத் துடிப்பார்கள். பிரிந்த குடும்பத்தில் பிறகு இன்பமேது? இன்னும் பருவம் ஏறிய பின் மண முடித்தவர்களுக்கு மிகுதியான இன்பமில்லை யென்பதையும் ஒருவாறுணர்ந்தேன். பருவத்திற்குப் பிந்தி மணம் செய்வோர்க்கு மனையாள் அன்பும் தலைப்படுமென்று எண்ணுகிறேன். எல்லாம் சரி. நான் காணப்புறப்பட்ட பொருள் எங்கே? அதைத்தான் காணவில்லை. 'மனித சக்திக்கு அமையாத அளவுக்கு மேல் அதிகம் சாதிக்க எத்தனிப்பவன் ஒன்றையுஞ் சாதிக்கமாட்டான்' என்று சொல்லுவார்களே அதன்படிதான் என் முயற்சி முடியுமோ? எத்தகைய கோழை எண்ணம்! உழைப்பின் வாரா உறுதிகளுளவோ? மனமே! எழுந்திரு! புதிய விடத்திற்குப் போய்ச் சேருவோம். உலகத்தீரே! இன்பம் எங்கேயிருக்கிறது?

* * *

அதோ ஒரு வயோதிகன் பர பரப்பற்று மெதுவாகச் செல்லுகிறான். அவன் வாழ்க்கை ஆடம்பரமற்றது. இன்பமுற்றது. அவனே எனக்கு வழி சொல்லுவான். "ஐயா பெரியவரே! இம் முதிர் வயதில் உம்மைக் குறித்து என்ன நினைக்கிறீர்? உமது இன்ப துன்பம் எப்படி?" என்ற என் கேள்விக்கு அக்கிழவன் கூறிய மறுமொழி என்ன? இதோ கேளுங்கள்—"உல்லாசமும் திடகாத்திரமும் உள்ளவர்களுக்கு வெளியில் உலாவி வருவது இன்பம். பருவம் முதிர்ந்தவர்களுக்கு ஆரோக்கியம் அமையுமானால், அதுவே போதும். எனக்கு இவ்வுலகில் இனிப் புதுமை ஒன்றுமில்லை. எண் திசையும் பார்க்கும்பொழுது நான் உல்லாசமா யிருந்த காலத்தில் கண்டவைகளையே காண்கிறேன். வானத்தை அண்ணாந்து பார்த்து வளர்பிறை தேய்பிறையைக் காணும்பொழுது காலச் சக்கரத்தை நினைந்து துன்புறுகிறேன். பிரபஞ்ச தத்துவ விசாரணையில் எனக்கு இப்பொழுது முன்போல அதிகப் பிரீதியில்லை. விரைவில் இங்கிருந்து செலவு பெறவிருக்கும் எனக்கும் உலகத்துக்கும் இனிச் சம்பந்தமென்ன? இன்னுங் கேள் மைந்தனே! நான் புகழில் பூரித்திருப்பேனென நினைப்பாய். பிறர் போற்றுவது விருத்தனுக்கு வெற்றொலி. மைந்தன் கீர்த்திகேட்டு மனமகிழ என்னைப்பெற்ற மாதாவுமில்லை; மணமகன்பெற்ற சன்மானமென்று மனம்பூரிக்க மனைவியுமில்லை. என் மித்துருக்கள் சத்துருக்கள் இரு திறத்தாரும் காலங்கடந்து போனார்கள். பிறரால் புகழப்படுவது வாலிபருக்கு விருப்பம். செல் காலத்தில் நான் செய்தது, பட்டதைப் பின்னோக்காய்ப் பார்க்குமிடத்தில், செய்யத் தக்கவைகளைச் செய்யும் பருவத்தில் செய்யாது விட்டதும், வீணான செய்கைகளில் மிகவும் வீண்பொழுது போக்கியதும், பின்னும் அதிககாலம் சோம்புற்றும், செயலொழிந்து மிருந்ததும் என் ஞாபகத்தில் வருகின்றன. முக்கிய காரியங்கள் பலவற்றை முயலாது விட்டேன். செய்யத் தொடங்கிய பெருமுயற்சிகள் பலவற்றை அரைகுறையாய் நிறுத்திவிட்டேன். ஆசையையும் அலைச்சலையும் என் சிந்தையினின்று அகற்ற எத்தனிக்கிறேன். ஆசையும் அலைச்சலும் வீணென்று விவேக மறியும். அறிந்திருந்தும் அவைகள் இந்நாள் வரையும் குடிகொண்ட மனையைவிட்டு அகலா

நயனம் ஒன்று சொல்ல நாவொன்று சொல்லின் விஷயம் அறிந்தவன் நயன மொழிகளையே நம்புவான்.

திருக்கப் பார்க்கின்றன. இனி எனக்குச் சாங்காலம்வர நாட்படாது. விண்ணுலகடைந்தும் மண்ணுலகில் தேடிக்காணாத மனோசுகம் எனக்குக் காணியாட்சி யாகுமென்றும், இங்கெனக்குக் கிட்டாத சுத்த குணம் எளிதில் அமையுமென்றும் மனங்குளிர நம்புகிறேன்." என்பது. இந்தக் கதையைக் கேட்பதற்குத்தானா கிழவனிடம் ஓடினேன்? எங்கும் ஒரு குறையா? எவரிடமும் ஒரு குறையா? துறையில்லாத நிறைவாழ்க்கை தூவலயத்தில் உண்டா, இல்லையா? அதையேனும் நிச்சயமாய்த் தெரிந்துகொள்ள இதோ நடக்கிறேன். உங்களை வினவுகிறேன்—இன்பம் எங்கே யிருக்கிறது?

***

பிரசித்த பண்டிதரொருவரைக்கண்டு, 'இன்பநிலை எங்குளது?' என்று வினவினேன். அவர் சொன்ன அதிசயத்தைக் கேளுங்கள்:—"உலகப் பரப்பில் உமது கண்ணுக்கு எதிரே தோன்றும் பேதா பேதமான நிலைகள் அநேகம். அவற்றுள் எதாயினும் ஒன்றைச் சுட்டி, இதுவே மேலானதென்று உமக்கு உணர்த்த நான் வல்லவனல்லேன். நான் மேன்மையானதென்று ஒரு நிலையைக் கைக்கொண்டு ஏமாறிப் போனேன். இதுவே நான் சொல்ல மாட்டுவேன். என் வாழ்நாளெல்லாம் அநுபவமின்றி ஏட்டுக் கல்வி கற்றுக் கொண்டு வந்தேன். பெரும்பாலும் மனிதருக்குக் கைமேல் உதவாத கல்வித் துறைகளைக் கற்றுத்தேர்ந்தேன். உலகத்தில் நால்வர்க்கும் பொதுவான சுகமனத்தையும் விலை கட்டிக் கொடுத்து விட்டுக் கல்விப் பொருளை வாங்கினேன். பெண்பலார் உறவு என்னும் மனதிற்கினிய நாகரிகம் அறியேன். நெஞ்சை உருக்கும் குடும்ப ஐக்கிய வியாபாரச் சுகமறியேன். வேறு பண்டிதர்களுக்குக்கிட்டாத விசேஷ அதிகாரம் எதுவும் அடைந்தேனானால், அதனுடன் அச்சமும், அலைச்சலும், ஐயமும் சேர்ந்திருக்கின்றன. நான்கு பேர்களைக் கண்டு கலந்து உறவாடி லௌகிகம் அறிய அறிய, என் நினைவு பல துறைகளில் செல்லுகின்றது. சென்றபின் அவ் வதிகாரங்கள் எவையானாலுஞ் சரி, உண்மை யல்லவென்று என் மனம் ஐயுறுகின்றது. மனதிற்கினிய துறைகளில் என் சிந்தனை சிலநாள்வரையில் சிதறி யிருக்கும்பொழுதெல்லாம், என் விசார ஞானம் தப்பாய் முடிந்ததென்றும், அளவுகடந்து நான் பட்ட பாடனைத்தும் வீண்பாடாய்ப் போயினவென்றும் என்மனம் எண்ணுகிறது"—என்றார். கேட்டீர்களா? எல்லோரும் பாடிய பல்லவியைத் தான் இவரும் பாடுகிறார்! ஐயோ! நான் இன்பந்தேடி இளைத்ததுதானா மிச்சம்? கடைசியாக நான் தெரிந்துகொண்டதுதான் என்ன? 'இவ்வுலகில் இன்பமே அநுபவித்த எவருமில்லை,' 'ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு துறையுண்டு' என்பதைத் தானா? இன்பங்கண்டோன் துன்பங்காண்பதும், துன்பமநுபவித்தோன் இன்பமநுபவிப்பதும் இவ்வுலகில் இயற்கையேதானோ? இதை யறியவா நான் இத்தனை பாடுபட்டேன். என் நெஞ்சம் நிம்மதி கொள்ளவில்லையே! இன்னுங் கேட்கிறேன்—இன்பம் எங்கே யிருக்கிறது?

[இது ஜான்ஸன் பண்டிதர் இயற்றியுள்ள ராஸிலஸ் (Johnson's Rasselas) என்னும் அருமை நூலிலிருந்து சாரமாகத் திரட்டி அழகுற அமைத்ததாகும்.]

---

எந்தக் காரியமும் தவறாயிருப்பதால் நம்மை இழிவாக்கி விடுவதில்லை; இழிவாக்குவதாலேயே தவறாய் விடுகின்றது.

# "கேகயர் கோமகள் இழைத்த கைதவம்"

(தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், பி. ஏ.)

இராமகாதையை அறிந்த அறிஞர் அனைவரும் தண்ணளி மிகுந்த தயரதன் மனைவியாய் அமைந்த மூவருள், கைகேயியை இராக்கமற்ற அறக்கொடியாள் என்றே குறிப்பாராயினர். கேகயர் கோமகள் இழைத்த கைதவத்தால், இராமன் நாடு நீங்கிக் காடு போகவும், அங்குத் துயர் பல உறவும், காதற்றிருமகனைப் பிரிந்த துயர் பொறுக்க ஆற்றாது மன்னர் மன்னன் உயிர் துறக்கவும், அரசனையும் அண்ணலையும் ஒருங்கே இழந்த பங்கமில் குணத்துப் பரதன் தவக்கோலம் பூண்டு அயிர்த்து நோக்கினும் தென்திசையன்றி வேறறியாதவனாய் வாழவும் அமைந்த காரணங்களால் கைகேயியை இரக்கமற்ற அறக்கொடியாள் என்றும் வன்கட் கயத்தி என்றும் பலரும் கூற அமைந்தது. ஆனால் கம்பர் இவளையும் இவளது உள்ள நிலையையும்பற்றிக் கொண்டுள்ள கருத்தென்ன என்று பார்ப்பாம்.

இன்னல்செய் இராவணன் இழைத்த தீமையெல்லாம் திரண்டுரு வெடுத்த கிழக்கூனி தன் னரசியை அணுகி இராமன் கோமுடிசூடுவன் நாளை என்றும், அதனால்

"வீழ்ந்தது நின்னலம் திருவும் வீய்ந்தது
வாழ்ந்தனள் கோசலை மதியினால்"

என்றும் கூறியபொழுது, உவகைமிக் கடைந்தவளாய்க் கைகேயி சுடர்க்கெலாம் நாயக மனையதோர் மாலையை அவளுரைத்த நற்செய்திக்குப் பரிசாக நல்குகின்றாள். இவள் இராமன்பால் கொண்டுள்ள ஆழ்ந்த அன்பை அறிந்த கூனி தான் சூழ்ந்த வினை பயன் பெறாததுகண்டு அதனால் வெகுண்டவளாய் அவள் தன் கைத்தந்த மாலையை நிலங்குழிய எறிந்து, இராமன் அரச பட்ட மெய்துவதால் கைகேயியும் அவள் மகன் பரதனும் பின்னர் தாழ்ந்த நிலையே எய்துவர் என்று பலதரம் இடித்துக் கூறியும் "இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ" என்று கேகயர் கோமகள் அவள் கூறியவற்றை யெல்லாம் தடுத்துப் பின்னும்

"எனக்கு நல்லையு மல்லை நீ யென் மகன் பரதன்
தனக்கு நல்லையு மல்லை அத்தருமமே நோக்கில்
உனக்கு நல்லையு மல்லை வந்தூழ்வினை தூண்ட
நினக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்!"

உன் புன்புலைச் சிந்தையாலென் சொன்னாய்? நின் புன்பொறி நாவைச் சேதி

---

"செல்வம்"—போதுமான அளவானால் உன்னை அது தூக்கிச் செல்லும். அதிகமான அளவாய்விட்டால் நீதான் அதைத் தூக்கிச் செல்லவேண்டும்.

யாது உன் முதுமை கருதி பொறுத் தருளுகிறேன். அறிவிலி! அடங்குதி! என்று தன் கண் சிவப்புறக் கடிந்து கூறுகின்றான். இவ் வெவ்வுரைகளுக் கெல்லாம் அஞ்சி அகலாத மந்தரையும் கடைசியாக,

"கெடுத் தொழிந்தனை உனக் கரும்புதல்வனைக் கிளர்நீர்
உடுத்த பாரக முடையவன் ஒரு மகற்கெனவே
கொடுத்த பேரரசு அவன்குலக் கோமைந்தர் தமக்கும்
அடுத்த தம்பிக்கும் ஆம் பிறர்க்கு ஆகுமோ" என்றாள்.

இதுவரை அறநெறி பிறழாது உண்மையில் உறுதியாய் நிலைத்த தெய்வக் கற்பினளது தூயசிந்தையும் தீய மந்தரை இவ்வுரை செப்பலும் திரிந்தது என்று அழகொழுக எழுதி அமைக்கின்றார் கவியரசர். "அயோத்தியை யாளும் தயரத மன்னன் அவன்றன் ஒப்பற்ற திருமகனான இராமனுக்குக் கொடுக்க விருக்கும் இறைமையாக்கம், அதைப் பெறும் இராமனுக்கும் அவன் வழிப் பிறக்கும் மக்களுக்கும் அவனை யடுத்து நிற்கும் தம்பி இலக்குவனுக்கும் உதவுவதல்லாமல் பரதன் முதலாய பிறர்க்கு உதவுதல் இல்லை. ஆதலின் உன்னுடைய கையறவால் உன்னரும் புதல்வன் பரதனுக்கே கேடு சூழ்கின்றாய்" என்ற முறையிலேயே இச் செய்யுளுக்குப் பலர் பொருள் கொள்ளக் கேட்கின்றோம். இவ்வாறு பொருள் கொண்டால் இதுவரை கூனி சொன்ன "இராமன் கோமுடிசூடுவன் நாளை" "பேரிடர் பிணிக்க நண்ணவும் உணங்குவா யல்லை உறங்குவாய்" என்று சொல்லிய உரைகளுக்கும் இவ் வுரைக்கும் வேற்றுமை ஒரு சிறிதும் இல்லாதிருக்க இவ்வுரையால்மட்டும் கேகயர் கோமகள் தூயசிந்தை திரிவானேன்? என்பது கேள்வியாக எழுகின்றது. கேகயர் கோமகளோ, தன் மக்கள் எனவும் மாற்றார் மக்கள் எனவும் வேற்றுமை காணாத செவ்விய உள்ளத்தாள்

"தெவ்வடு சிலைக்கை என் சிறுவர் செவ்வியர்
அவ்வவர் துறைதொறும் அறந்திறம்பலர் ஆதலின்
எவ்விடர் எனக்குவந் தடுப்பது"

என்றும் "இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ" என்றும் செம்மைசான்ற மொழிகளில் தன் மனநிலையை விளக்குகின்றாள். இத்தகைய தொருதாய் இராமன் நாடாளப் போகின்றான், அதனால் பரதன் நலமிழந்து நலிவான் என்று ஒரு கிழக்கூனி கூறக்கேட்ட காலத்துச் சிந்தை திரிந்து சற்றும் அயர்வாளோ என்பது ஐயமே யன்றோ? ஆதலின் இச்செய்யுளில் ஒழிந்து கிடக்கும் மறைபொருள் ஒன்று உள்ளது. அப்பொருளையே கம்பர் கவிதையுணர்ந்த பெருமக்கள் ஏற்றுக்கொள்வர். அப்பொருள் கண்டு குறிப்பதே முறையாகும்.

இவ்விடத்து இராமகாதை முதன் முதல் எழுதிய வான்மீகர் சுட்டும் சுல்க வரலாற்றைக் குறிப்பது அவசியமாகும். கோசல நாட்டு மன்னனாய் விளங்கிய தயரதன் கைகேயியை விரும்பி மணம் பேசுங்காலையில் அயோத்தி

ஒருவனுக்கு ஆகாரம் அளிப்பதைவிட அதைத் தானே தேடிக்கொள்ள வழி காட்டுவதே முக்கியம். உதவி செய்வதைவிடப் பிறர்க்கு உதவி செய்யக் கற்றுக் கொடுப்பதே நலம்.



யின் அரசப் பட்டத்தையே கன்யாசுல்கமாகத் தந்து மணம் முடிக்கின்றான் என்பர் வான்மீகர். இம்முறையில் அயோத்தி அரசு கேகயர் கோமகளின் பரியப் பொருளாகி அவளுக்கும் அவள் வயிற்றில் தோன்றும் தநயனுக்கும் அவன் மைந்தருக்குமே வரன்முறை வழக்கால் உரிமையுடையதாகும். அவளுக்கும் சந்ததியற்ற காலையில் அயோத்தி யரசு அவளுடன் பிறந்த கேகய நாட்டு அரச குமாரனான யுதாஜித்துக்கு உரித்தா மல்லாமல் தயரத குலத்தாரெவர்க்கும் இல்லை. நீதியின் நிலையமாய பரதனை கேகயர் கோமகள் பயந்த பிறகு அயோத்தி யரசுக்குத் தயரதன் உடையவனுமல்லை, அதை யவன் கோசலை மகனான இராமனுக்குக் கொடுக்கும் உரிமையுடையவனுமில்லை; இக் கருத்தைச் சுட்டாது சுட்டிக் கூறும் கம்பர் கவிநலம் அழகுடையதேயாகும். இக்கருத்தை நம்மனத்தகத்தே கொண்டு "கெடுத் தொழிந்தனை" என்று தொடங்கும் செய்யுளுக்கு உரை காணப் புகுந்தால் உண்மை காண்போம். "உன்னுடைய அருமை மைந்தன் தன்னுரிமை யிழந்து தவிக்குமாறு கெடுத்தவளும் நீயேயாகின்றாய்; முன்னரே சுல்கமாகக் கொடுத்த அயோத்தியரசு உன் மகனான பரதனுக்கும் அவன் கால்வழி வரும் மைந்தர்தமக்கும் அவனும் அவன் வழித் தோன்றினோரும் இல்வழி அடுத்த சுல்கக் கிரம வாரிசான உன் தம்பிக்கும் உரியதல்லாமல் பிறர்க்கு ஆவது அறமாமோ ஆதலால் பரதனுரிமையைப் பாதுகாத்து அரசன் அருளிய வாக்கைக் காத்து அவனை அறத்துறையில் நிறுத்துங் கடன் நின்னதேயாகும்" என்று கூனி அறிவூட்டும் மாற்றமாக இப் பொருள் தெளியுங்கால் கம்பர் கவியின் செம்பொருள் இன்பம் விளங்கக் காணலாகும்.

ஆகவே தன்னல விருப்பாலேனும், தன்னொரு மகன் அரசெய்தி வாழ வேண்டும் என்னும் ஆசையாலேனும் கைகேயி இராமன் முடிசூடுதலைத் தடுக்கத் துணிந்தனள் அல்லள். தானடையும் நலங்களையெல்லாம் கூனி எடுத்துக் கூறியும் அதற்கு ஒரு சிறிதும் இசையாத உத்தமி கடைசியாகத் தன் காதலன் அறநெறி பிறழ்ந்து தீவினை நயந்து செய்கின்றான் என்பதை அறிந்த காலையில் அவனை அறநெறி நிறுத்தல் தன் கடன் எனக் கொண்டு அதற்காகத் தான் ஏற்கவேண்டிய பெரும் பழியையும் அஞ்சாது எதிர் செல்கின்றாள். தான் வறிதே யிருப்பின் தசரதன் தன் காதல் மைந்தன் இராமன்மேல் கொண்ட காதலால் முன்னர் கேகயர் கோமகனுக்குக் கொடுத்த சூளறம் தவறிப் பாவமும் பழியும் எய்துவன், அதனால் தன்தலைவன் சொல்லறங்காத்து அறநெறி யோம்புதலே கற்புடைப் பெண்டிர் கடன் எனக்கொண்ட கைகேயி அம்முடிசூட்டை இடைநின்று தடுக்கத் துணிகின்றாள். இவ்வாறு துணிந்து வந்த கைகேயியும் தயரதனிடம் சுல்கச் சூளைச் சுட்டிக் கேட்க விரும்பினாளில்லை. சுல்கச் சூளைச் சுட்டிக்கேட்டு அதனால் அரசன் அமைத்துள்ள முடி

ஒருபொழுதும் சோம்பலாய் இராதே. எப்பொழுதும் உபயோகமான காரியம் எதையேனும் செய்துகொண்டே இரு. எப்பொழுது வேலையின்றி இருக்கிறோமோ அப்பொழுது காமம் எளிதில் புகுந்துவிடும். தேகசுகம் உள்ளவன் சோம்பலாயும் சுகஜீவியாயும் இருந்துவிட்டால் அவன் கற்புடையவனாயிருத்தல் ஒருநாளும் இயலாது. காமம் என்னும் பேயைத் துரத்தற்கேற்ற வேலை சீர வேலையேயாகும். அதைப்போல் உபயோகமானதும் பலனளிப்பதும் வேறொன்று மில்லை.

சூட்டலை நிறுத்தினால், தன்னளிமிருந்த தயரதமன்னன், தன் சொல்லறமறந்து நெறிதுறந்து முறையிறந்தான் என்னும் பழியினின்றும் தப்புமாறில்லை என்பதை உணர்ந்த கேகயர் கோமகள் அவன் அப்பழி யெய்தாத முறையில் அவனை அறநெறி நிறுத்த நினைக்கின்றாள். தன் காதற் கிழவனுக்கு எவ்வகை ஏதமுமின்றி அவன்றன் புகழ் காத்தலையே தன் கடனெனக் கொண்ட தெய்வக் கற்பின் பேர்மகளான கைகேயி தான் முன்னர் சம்பராசுர யுத்தத்தில் தயரதனுக்கு உடனிருந்து உதவி அவன் உவகையால் தந்த வரங்களிரண்டையும் கேட்டு, ஒரு வரத்தால் பரதன் அரசாளவும், மற்றொரு வரத்தால் இராமன் பதினான்காண்டு காடெய்தி வாழவும் வேண்டுமென இறைஞ்சுகின்றாள். இவ்வாறு சமயமறிந்து வரங்கேட்டதை உணர்ந்த மாந்தர் பலரும் தன்னை அறக்கொடியார் என்று தூற்றியபோதிலும், தன் கணவன், தன் காதலன்-தன் தலைவன் பழியெய்துமாறில்லை என்பதை உணர்ந்த மங்கை உவகை மிக்கடைகின்றாள். அரசன் தனக்குரிய பழி யெய்தாததுடன் அமையாமல், எக்காலத்தும், எவ்விடத்தும் சொற்காத்த வீரனாகப் புகழப்படுவான் என்ற ஓர் எண்ணமே அவனை அவன் கொண்ட கருமத்தில் ஊக்கியதாகும். என்னே! கேகயர் கோமகள் இழைத்த பேரறம்! இதுவோ கைதவம்! அன்று அன்று இதுவே பேரறம்!

அன்பர்காள்! இவ்விடம் ஓர் ஐயம் எழுகின்றது. 'சுல்கச் சூளால் பரதன் நாடு பெற வேண்டுவதுதான் இன்றியமையாதது. இராமன் காடு போக வேண்டியது அவசியமின்றே எனினும் அவ்வாறு விரும்பிய கேகயர் கோமகளின் உள்ளக் கருத்தென்னை என்னும் கேள்வி எழலாம். கைகேயி இராமன்பால் இறவாத காதல் மிகவுடையாள் என்பது நாமறியாததொன்றன்று. இத்தகையதொரு தாய் இராமனைக் காடுபோக்கக் கருத்துக் கொண்டதும் தன் காதலன் புகழ் நிறுவக் கருதியேயாகும் என்று கூறினால் அது ஒரு சிறிதும் மிகையாகாது. பரதன் நாடெய்தி அரசான அவனுக்கு முன்னவனான இராமன் அவ்வரசிலேயே வறிதேயிருக்க நேருமாயின் அதனால் இராமன்பால் அன்புபூண்டொழுகும் பலரும் உண்மை உணராது ஏதம் பல விளைப்பர். அதனால் அரசன் அறநெறி தவறிய ஒரு செயலை வெளிப்படையாய் உணர்த்த நேரிடினும் நேரிடலாம். அவ்வாறமைந்தால் தான் இதுவரை எடுத்த முயற்சிகள் பலவும் பயனற்றுப் போகும். இராமனும் எக்காலத்தும் காட்டில் உறைந்து வருந்தவேண்டிய அவசியமின்று. பதினான்காண்டு காட்டில் வதிந்து வந்தானானால், அவன்மேல் அளவிலா அன்பு பூண்டொழுகியவரும் நாளாவட்டத்தில் பரதனது ஆட்சியில் அடைந்த நலங்கருதி வறிதே யிருப்பர். ஆதலின் கொஞ்சகாலத்திற்கு இராமன் அயோத்தியை விட்டுப் பிரிந்து இருத்தல் அவசியம் என்பதை உணர்ந்த மங்கை அவ்வாறே பணிக்கின்றாள் "இராமா! நீபோய், தாங்கரும் தவமேற்கொண்டு,

---

மனிதன் ஒரு நாணலே யாவன். உலகில் பலவீனத்திலும் பலவீனம் உள்ளவன். ஆனால் அவன் "யோசிக்கும் நாண"லாவான். அவனை அழிக்க அண்டம் அனைத்தும் திரண்டு வரவேண்டியதில்லை. ஒரு துளி நீர் போதும். ஆனால் உலகமே அவனை அழிக்க நேர்ந்தாலும் அவனே உலகத்தைவிட உயர்ந்தவனாவான். ஏனெனின் அவன் தான் இறப்பதாய் அறிவான். உலகமோ அவனை அழிக்கும்பொழுதுகூட தன் ஆற்றலை அறியாது.



பூழிவெங்கானம் நண்ணிப் புண்ணியத்துறைகளாடி ஏழிரண்டாண்டில் வா" என்று இயம்பிய சொற்களில் மங்கையின் நிறைந்த உள்ளம் கனிந்து விளங்கக்காணலாம் ஆதலின், கொடியதொரு எண்ணத்தாலாவது அன்றி இராமன்பால் கொண்டுள்ள ஓர் வன்கண்மையாலாவது இராமனை வனம் போக்க விரும்பினாளில்லை என்பதும், சுல்கச் சூளறத்தால் நாடுபெற்ற பரதனது அரசு ஏதமின்றி இயங்கவும், மன்னர் மன்னவன் சொல்லறம் சோர்விலாது நிலைநிற்கவும் விரும்பியே மன்னவன் மனைவி இராமனை வனம்போக்கக் கருத்துக் கொண்டாள் என்பது ஊன்றி ஆராயும் எவர்க்கும் புலனாகும்.

இனி, "கன்யா சுல்கம்" இந்நாட்டினர்க்கு உடன்பாடன்று என்று கருதுபவரும் சிலர் உளர். இப்பாரத நாட்டிடையே, நளனும், தருமனும் தம்தம் நாட்டையே பணயம் வைத்துச் சூதாடித் தோற்றதும், மாவலியும் அரிச்சந்திரனும் தமை யடுத்த வாமனர், விசுவாமித்திரர்களுக்கு முறையே தம்தம் நாட்டையே நல்கியதும் அறிந்த பெருமக்கள் அரசர்கட்கு அவர் தம் தேயத்தின் முழு உரிமை உண்டென்பதை உணர்வர். குரிசிலர் நாட்டில் கொடையுரிமை கோடல் வான் முறைவந்த வழக்கறமாகும். இவ்விடத்து தயரத மன்னன் தான் மணக்க விரும்பிய பெண்ணிற்குப் பரிசமாகத் தன் நாட்டையே கொடுத்தனன் என்பது முறையோ அன்றோ என்று அன்பர்கள் ஆராய்வார்களாக. இவ்வாறு தயரதன் தன் நாட்டைப் பெண்ணின் பரிசமாகக் கொடுத்ததை இராமன் அறியாதிருந்தான் என்று சொல்வதற்கு இடனில்லை.

"வானில் உந்தைசொல் மரபினால் உடைத்
தாரணிநின்ன தென்றியைந்த தன்மையால்
ஊனில் நீ பிறந்துரிமை யாதலால்
அரசு நின்னதே யாள்க"

என்று பரதனிடம் இராமன் கூறும் செஞ்சொற்கள் கவிஞர் உள்ளத்தைத் தெள்ளிதில் விளக்குவதாகும். "உந்தை சொல் மரபினால்" "நீ பிறந்துரிமை யாதலால்" என்னும் சொற்றொடர்கள், சுல்கவரலாற்றைச் சுட்டாது சுட்டுகின்றன என்று கூறுதல் மிகையாது. "பார் என்னதாகில் யானின்று தந்தனன் மன்னா! போதி நீ மகுடஞ்சூடு" என அன்பின் மிகுதியால் பரதன் நெகிழ்ந்து கூறிய காலத்தும் இராமன்,

"எந்தையேவ ஆண்டு ஏழொடு ஏழனை
வந்தகாலம் நான் வனத்துள் வைக நீ
தந்தபாரகம் தன்னை மெய்ம்மையால்
அந்தநாளெல்லாம் ஆள் என் ஆணையால்"

என்றே கூறுகின்றான். கோசலநாடும் அயோத்தியரசும், இராமனுக்கு எக்காலத்தும் உரிமையுடைய தன்று என்பதும் பரதன் தந்நாட்டையே பதி

---

எல்லோரும் நேரமில்லை என்று குறை கூறுகின்றோம். ஆனால் நாம் என்ன செய்வதென்று அறியாத அளவிற்கும் அதிகமாகவே உடையோம். நாம் நம் வாழ்வை ஒன்றும் செய்யாதிருப்பதில் அல்லது உபயோகமுள்ளதைச் செய்யாதிருப்பதில் அல்லது செய்யவேண்டியதைச் செய்யாதிருப்பதில் கழிக்கின்றோம்.

ளுன்காண்டு கழிந்து பரிபாலிக்கப் புகுந்தனன் இராமன் என்பதும் "நீ தந்த பாரகம்" என்று இராமன் கூறும் செஞ்சொற்களால் இனிதே விளங்கும்.

இனி கைகேயியைப்பற்றிக் கம்பர் குறிக்குமிடமெல்லாம் "தூயவள்," "தெய்வக்கற்பினள்" "தெய்வக்கற்பின் பேர்மகள்" என்றே குறிப்பாராயி னர். பாத்திரங்கள் வாயிலாய் அவரவர் கருத்திற்கேற்பப் பழித்தும் கூறும் இடங்களைவிடுத்துக் கவிக்கூற்றாக ஆரோய்வோமாயின்

"சுடுமயா னத்திடைதன் துணைஏகத் தோன்றல்துயர்க் கடலின் ஏகக்
கடுமையார் கானகத்துக் கருணைஆர் கலியேகக் கழற்கால் மாயன்
நெடுமையால் அன்றளந்த உலகெலாம் தன்மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையால் அளந்தாளை யாரிவரென்று உரையென்னக் குரிசில் கூறும்"

என்ற செய்யுளில், கைகேயியைத் திண்ணமாகக் கொடியவள் என்றே கரு தும்படி கவியாற்றுகின்றார் கவியரசர் என மயங்குவோர் பலர் உளர். மாவலி யினது ஆட்சியிலிருந்த மண்ணையும் விண்ணையும் ஈரடியால் அளந்து மூன்றாம் அடியால் மாவலியை ஆட்கொண்ட திருமாலின் நெடுமை தோற்றத்தில் கொடுமையாயும் உண்மையில் மாவலியைத் தன்னடிக்கீழ் அமைத்த ஒரு பெரும் அருளாயும் இருப்பதுபோல, இராமனை வனம் போக்கி அது காரண மாய் மன்னன் உயிர்குடித்த மங்கை இயற்றிய கைதவம், தன் தலைவன் புகழ் காத்த போறமாயும் இராமன் பிரதாபம் உலகறியச் செய்த ஒரு திறமாயும் அமைந்தது என்று கொள்வோமேயானால் கம்பர் தம் கவிநலம் கைவரப் பெற் றவராவேம் என்பதே எம்முடைய தாழ்ந்த கருத்தாகும் என்று கூறி என் பணி முடிக்கின்றேன்.

குறிப்பு:—[இக்கட்டுரைக் கருத்துக்கள் மதுரை வழக்கறிஞர் திருவாளர் ச. சோமசுந்தர பாரதியார் B. A. B.L. அவர்களியற்றிய "தயரதன் குறையும் கைகேயி நிறையும்" என்னும் புத்தகத்தினின்றும் எடுத்தாளப்பட்டுள்ளன.]

## உங்களைத் தேடிவந்தால்

தமிழ் மக்களுக்கு ஆனந்தங் கொடுப்பதையே தன் முதற் பெருங் கடமையாகக் கொண்டுள்ள "ஆனந்தபோதினி" உங்களைத் தேடிவந்தால் ஏதோ வழி தவறித் தெரியாமல் வந்துவிட்டதென்று நினைத்துவிடாதீர்கள். உங்கள் வாழ்க்கை நலத்தில் சிரத்தைகொண்டே உங்களைத் தேடி வருகிறது என்று நினையுங்கள். உங்கள் உதவி எல்லாம் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒரே ரூபாய்தான்.

கடைசிச் சோதனை யாது? நாம் எவ்வளவு உடையோம் என்பதன்று. நாம் எவ்வளவு முயன்றோம் என்பதே யாகும். வாழ்வில் ஜயம் அடையத் தகுதி யுடையவரா யிருந்தோமா என்பதேயாகும்.

# மாட்டின் ஜீவிய சரித்திரம்

(ஒரு அநுபவஸ்தர்.)

(1) கன்றுக் காலம்.
(2) பக்குவ காலம்.
(3) பருவ காலம்.
(4) விருப்ப காலம்.
(5) கன்று படுங்காலம்.
(6) கன்று போடுங்காலம்.
(7) கன்று போடுதல்.
(8) நோய்கள்.
(9) மாட்டின் உணவு.

(1) கன்றுக்காலம்:—இக்காலத்தில் சிலர் கன்றுக்குத் தாய்ப் பாலூட்டி வளர்க்கின்றனர். சிலர் கன்று பிறந்தவுடன் தாயைக் காணாது மறைத்துக் கட்டிக் கன்றின் மேலுள்ள பசையைத் தமது கைகளில் துடைத்து, பின்னர் தாய்க்கு நக்கக் கொடுக்க அம்மணத்தால் தாய் பால் சுரக்கும். அக்கன்றுக்கு ஏற்ற உணவு கொடுப்பார்கள். ஆங்கிலேயர் ரப்பராலாக்கிய மூலைகளில் பால் விட்டுக் கன்றைக் குடிக்கச்செய்து வளர்ப்பார்கள்.

(2) பக்குவ காலம்.—நமது தேசத்து மாடுகள் ஏறக்குறைய $2\frac{1}{2}$ அல் லது 3-வருஷங்களிலும், ஆங்கிலதேச மாடுகள் 1-வருஷம் 10-மாசங்களி லும் பக்குவமடையும். தமிழருடைய மாடுகளை $3\frac{1}{2}$-வருடத்திலும், ஆங்கி லேயருடைய மாட்டை $2\frac{1}{2}$-வருடத்திலும் விடுவது ஏற்றது.

(3) பருவ காலம்:—6-வயது தொடங்கி 12வயது வரையுமுள்ள காலம். வயதை மாட்டின் பற்களால் அறியலாம்.

(4) விருப்ப காலம்:—நல்ல உணவு கொடுத்தால் நல்ல கன்றுபோடும். பக்குவம் அடைந்தபின் நாம்பனைத் தேடும். அழகு உற்சாகம் தோற்றப்படும். அழும். 3-கிழமைக்கு விடவேண்டும். பால் குறைதலும் விருப்ப காலத்துக்கு அறிகுறியாம்.

(5) கன்று படுங்காலம்:—அறிகுறிகள்: சாந்தகுணம் இருத்தல், தேகம் மினுமினுப்பா யிருத்தல், வலப்பக்கத்து வயிறு பெருத்திருத்தல், வாலை ஒரு பக்கத்துக்கு சாய்த்திருத்தல், பால் நரம்பு தடித்திருத்தல், மடியிலிருந்து கிழுவம் பால்போல் வடிதல், 6-கிழமைக்குள் மடி இறங்குதல், குழுகுழுப்பா யிருத்தல், வயிறு இடிந்து கீழே யிறங்கி இருத்தல், உணவில் விருப்பமின்மை, மெல்ல நடத்தல் முதலியனவாம்.

(6) கன்று போடுங்காலம்:—கன்று ஈன 9மீ 10-நாட் செல்லும். இதற்கு முன் ஈனின் நாம்பன் கன்றும், பின்ஈனின் நாகு கன்றும் ஈனும். போடும் நேரத்தில் குறி பருத்தகன்று இருக்கும்; அடிக்கடி படுத்தெழும்; ஒரு வேதனைப் பார்வை பார்க்கும்; அடிக்கடி சாணமும் சலமும் போடும்; வலப்

ஆரோக்கியத்திற்கு உயர்ந்த ஐஸ்வரியம் இல்லை. மனக்களிப்பிற்கு உயர்ந்த மகிழ்ச்சி இல்லை.

பக்க வயிற்றை நக்கும்; அமைதியான இடத்தைத் தேடும்; சாணம் கழியத் தொடங்கும்; பொய்நோய் மெய்நோய் உண்டாகும்; பொய்நோய் இரண்டு மூன்று நாட்களுக்கு முன் உடம்பு விரிவதாலுண்டாகிறது. மெய்நோய் தொப்புளிலுள்ள 100-காய்களிலும் அறுபடுவதற்குண்டாகிறது. பன்னீர்க்குடத்து நீரிலே கன்று மிதக்கும்.

(7) கன்று போடுதல்:—முதன் முதல் வெளிப்படுவது பன்னீர்க்குடம், பின்னர் முன் கால் தலை உடம்பு முதுகு வெளியே வரும். கன்று நிலத்தில் விழுந்து 24—மணிக்குள் இளங்கொடி விழவேண்டும். இளங்கொடி விழாத போது இழுத்தல் வேண்டும். கன்று பிறந்தவுடன் மாடு நக்கவேண்டும். இதனால் இரத்த ஓட்டம் நன்றாயிருக்கும். கன்று பிறந்தபின்பே மூச்சுவிடும். கன்றுகள் கட்டுமிடங்களுக்கு சுண்ணாம்புத் தண்ணீர் தெளிக்க வேண்டும்; சாம்பலும் நல்லது. கன்றுக்குக் கடும்புப்பால் நல்லது. உப்புப் பதார்த்தம் கடும்புப்பாலிலதிகம்; வெண்கருப்புப் பதார்த்தம் 16-வீதமுண்டு. 11-நாளுக்கு தவிடும் கஞ்சியும் வைக்கோலும் வைத்தல் வேண்டும். 2-மாதம் வரை பால் பெருகும். 6-ம் மாதம் பால் குறையும். 5-ம் மாதம் நாம்பனுக்கு விட வேண்டும். நல்ல மாடாயின் 15-மாதத்துக்கு ஒரு முறை கன்று போட வேண்டும். பாலில் சுய இடை 1·035 பால் மிக விசேஷ உணவு. பால் வியாதிக் கிருமிக்கு உறைவிடமானது. பால் பாவிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். பால் அடிக்கடி கறப்பதில் கொழுப்பதிகம். கெதியாயும் கிரமமாயும் கறப்பதாலும், முன்மடி வலக்காம்பையும் பின்மடி இடக்காம்பையும் கறப்பதாலும் பாலதிகம்.

(8) நோய்கள்:—முன்னடைப்பன் பின்னடைப்பன், மூச்சுவிட இயலாமை, வயிற்றுப் பொருமல், வயிற்றுக் கழிச்சல், வயிற்றுளைவு, மாட்டுப் பேதி, வாய்நோய், கால்நோய், கசம், மடிவியாதி, செங்கமாரி முதலிய நோய்களாம்.

(9) உணவு:—சத்துப் பதார்த்தம்—பச்சைப்புல்

உப்புப் பதார்த்தம்—தவிடு விதை கோதுமை பிண்ணாக்கு வகை. மாப் பதார்த்தம்—வைக்கோல்.

தசைப்பகுதி:—பிண்ணாக்கு, பருத்திக் கொட்டை, கோதுமைத் தவிடு உழுந்து, பாசிப்பயறு, எள்ளுப் பிண்ணாக்கு என்பனவாம். தாதுபுஷ்டிக்கு உழுந்து. வேலை செய்யும் மாடுகளுக்கு கொள்ளு, தவிடு, பருத்திக்கொட்டை. வருத்தம் உள்ள மாடுகளுக்கு வெந்தயம் சேர்க்க வேண்டும். வயப்பிழையான மாடுகளுக்கு 3-இரு. வேப்பெண்ணெயும் 3-இரு. நெய்யும் சேர்த்துக் கொஞ்சங் கொஞ்சமாய்க் கொடுத்து வைக்கோலும் தண்ணீரும் வைக்கவேண்டும்.

இத்துடன் இக்கட்டுரை இவ்வளவில் நிறுத்துகிறேன். மறு கட்டுரையில் பால் மாடு தெரிதலைப்பற்றி ஆராயப்படும்.

---

இன்பமாயிருக்க மட்டும் விரும்பினால் அது எளிதில் முடியக்கூடிய காரியம். ஆனால் நாம் பிறரைவிட அதிக இன்பம் பெறவே விரும்புகின்றோம். அது எப்பொழுதும் கடினம். ஏனெனில் நாம் அவர்கள் உண்மையிலேயே அனுபவிக்கும் இன்பத்தைவிட அதிகமாய் அனுபவிப்பதாக நம்பிக் கொள்கின்றோம்.

## சந்தேகப் பேயின் விடுதலை




ஒரு கணவன் பட்டபாட்டைக் கூர்ந்து நோக்கி மகிழுங்கள்.




## எலுமிச்சம் பழத்தின் உபயோகம்.

(டர்பன் சரஸ்வதி சபைத் தலைவர் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை)

**கா**ய்ந்த எலுமிச்சம்பழத் தோல்களை தணலில்போட்டுப் புகைத்தால் அறையிலுள்ள துர்நாற்றம் நீங்கும். ரத்தக் காயத்திற்கு எலுமிச்சம்பழ ரசத்தை நனைத்து கட்டினால் ரத்தம் நிற்கும். பழரசத்தை ஜலத்துடன் கலந்து பல்துலக்கும்போது உபயோகித்தால், பல்லெயிறு பலமடையும், துர்நாற்றம் நீங்கும். எழுது மைக்கறை, பழக்கறை, துரு முலிய கறைகளுக்கு உப்பும் ரசமும் கலந்து தேய்த்தால் அவை நீங்கும். [illegible]லை யும் உப்பையும் கலந்து பாத்திரசுத்தி செய்யலாம். சாதம் கொதிக்கும்போது சிறிதளவு ரசத்தைக் கலந்தால் சாதம் வெண்மையாயும், ருசியாயுமிருக்கும். பூச்சிக்கடி எரிச்சலுக்கு ரசத்தைத் தடவலாம். ரசத்தைக் காலையில் ஜலத்துடன் கலந்து சாப்பிட்டால் பித்தக்கோளாறு நீங்கும். ரசமும் சர்க்கரையும் சேர உபயோகித்தால் தொண்டைக்கட்டு நீங்கும். அதைக்கொண்டு தொண்டையில் படும்படி கொப்பளித்தால் தொண்டைப்புண் நிவர்த்தியாகும். நரம்பு பலவீனத்தால் ஏற்பட்ட தலைவலிக்குச் சூடான தேயிலை கஷாயத்தில் இரண்டு பழத்துண்டுகளைப் போட்டுக் குடிக்க வலி நிற்கும். காலையில் கொத்தமல்லியை அரைத்து, ஜலத்துடன் இஞ்சிச்சாறும், எலுமிச்சம்பழச் சாறும் சர்க்கரையும் கலந்து உபயோகித்தால் வயிற்றுவலி, அஜீரணம் இவைகளைக் கண்டிக்கும். பழையது சாப்பிட்டபின் உண்டாகும் தூக்கம் சோம்பல் முதலியவைகளையும் நிவர்த்தி செய்யும். இப்படிப் பலவிதமான காரியங்களுக்கு உபயோகப் படக்கூடிய எலுமிச்சம்பழத்தை, நாம் பெரும்பாலும் ஊறுகாய்க்குமட்டும் உபயோகப்படுத்தி வருகிறோம்.

---

எந்தச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உதவியாயும், எப்பொழுதும் வாழ்நாளில் இன்பம் தருவதாயும், துன்பங்களுக்கெல்லாம் ஒரு கேடயமாயும் இருக்கும் ஒரு சுவையை நான் வேண்டிப் பிரார்த்திப்பதானால் "நூல் கற்கும் சுவை"யையே விரும்புவேன். ஒருவனுக்கு இந்தச் சுவை கிடைத்து அதை அனுபவிக்க வேண்டிய சாதனங்களும் பெற்றுவிட்டால் அவன் ஆனந்தமாயிருக்க ஒரு நாளும் தவறான்.




## கலைமகள் வழிபாடு.

(ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ. பி. எல்.)

**க**லைமகள் வழிபாடு இந்நாட்டில் தொன்றுதொட்டு நிகழ்ந்து வருகின்றது. வெள்ளைக்கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கும் தெய்வமாக ஓவியப்புலவர் கலைமாதின் வடிவத்தை அழகுற எழுதி யமைத்தார். கவிபாடுந் திறம்பெற்ற புலவர் பாமாலை புனைந்து கலைமகளைப் பரவிப் பணிந்தார்கள். கற்றவர் விழுங்கும் கற்பகக்கனியாய் அமைந்த கலைமாதின் பெருமையைப் புகழப்போந்த குமரகுருபர அடிகள், "தெள்ளமுதுண்ணும் வெள்ளை அன்ன"மாக, கலாவல்லியை அழகொழுக எழுதிப் பார்த்து ஆனந்திப்பா ராயினர். இவ்வாறு நல்லியற் கவிஞர் பலரும் போற்றிப் புகழ்ந்த வல்லியின் பெருமையை பாரதியார் வாயார வாழ்த்தும் முறை அறிந்து மகிழதற்குரியதாகும். முன்னோர் மொழிந்த பொருளைப் பொன்னே போற்போற்றும் பண்புவாய்ந்த பாரதியார்,

"வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள் வீணைசெய்யும் ஒலியிலிருப்பாள்
கொள்ளையின்பம் குலவு கவிதை கூறுபாவலர் உள்ளத்திருப்பாள்
உள்ளதாம் பொருள்தேடி உணர்ந்தே ஓதும்வேதத்தின் உண்ணின்
[றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள்கூறும் கருணை வாசகத்துட் பொருளாவாள்

என்று கலைமகள் உறையும் கோவிலைக் கவிநயம் சான்ற இனியமொழிகளால் எழுதி யமைத்தார். வெண்டாமரையில் வீற்றிருக்கும் வல்லி, வீணை யிழற்றும் ஒலியில் இருப்பாள்; உண்மை ஒளிவீசும் கவிஞரது உள்ளத்திருப்பாள்; நிறைமொழி மாந்தர் அருளும் மறைமொழியில் இருப்பாள் என்று பாரதியார் கூறும் முறை புதியதோர் இன்பம் அளிப்பதாகும். இவ்வாறு வெள்ளை மலரி

---

வயிறு உபதேசம் ஒன்றிற்கும் செவி சாய்ப்பதில்லை. அது கெஞ்சும், கூச்சலிடும். ஆயினும் அது கல் நெஞ்சுள்ள கடன் கொடுத்தவனை ஒப்பதன்று. அதற்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்துவிட்டால் போதும். கொடுக்கக்கூடியதை எல்லாம் கொடுக்க வேண்டுமென்பதில்லை. சிறு தொகையைப் பெற்றும் திருப்தி அடைந்துவிடும்.

லும், வீணை ஒலியிலும், கவிஞர் மனத்திலும் முனிவர் மொழியினும் களித் திலங்கும் தெய்வம்,

"மதர் தீங்குரல் பாட்டிலிருப்பாள் மக்கள்பேசும் மழலையில் உள்ளாள்
கீதம்பாடும் குயிலின் குரலை கிளியின்நாவை இருப்பிடங் கொண்டாள்
கோதகன்ற தொழிலுடைத்தாகி குலவுசித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை உற்றாள் இன்பமே வடிவாகிடப் பெற்றாள்"

என்று எழுதி யமைத்த செஞ்சொல் ஓவியம் கற்போர் கருத்தைக் கவர்வ தாகும். மழலைமொழி பேசும் மக்கள் நாவிலும், பண்ணார்ந்த பாட்டிசைக்கும் பாவையர் நாவிலும், கீதம்பாடும் குயிலின் குரலினும் கனிந்த மொழி பேசும் கிளியின் நாவிலும், கலைமாதின் நலம் திகழக் காணலாம். இன்னும் கோவில் களிலமைந்த அழகிய ஓவியங்களிலும், கோபுரங்களிலும், கலைமாதின் ஒளியே விளங்கித் தோன்றுவதாகும். ஆகவே கண்ணுக்கினிய சிற்பமும் சித்திரமும், காதுக்கினிய குயிலின் குரலும், கிளியின் நாவும், கலைமாதின் இருப்பிட மாகு மென்று பாரதியார் பண்புறக் கூறிப் போந்தார்.

இத்தகைய இனிய தெய்வத்தை நம்முன்னோர் மனமொழி மெய்களால் வழிபட்டார்கள். கலைமணம் கமழும் ஏடுகளை அணியணியாக எடுத்தடுக்கி நறுமலர் மாலை புனைந்து நறும்புகை யெடுத்தார்கள். வண்ணமும் சுண்ணமும் வாரி இறைத்தார்கள். மந்திரமொழிகளால் வந்தித்தார்கள்.

"செந்தமிழ் மணிநாட்டிடை யுள்ளீர்
சேர்ந்து இத்தேவை வணங்குவம் வாரீர்
வந்தனம் இவட்கே செய்வதென்றால்
வாழிஅஃது இங்கெளிதன்று கண்டீர்
மந்திரத்தை முணுமுணுத்து ஏட்டை
வரிசையாக அடுக்கிய தன்மேல்
சந்தனத்தை மலரை இடுவோர்
சாத்திரம் இவள் பூசனை அன்றாம்"

என்று பாரதியார் இசைத்த கவியில் இப்பூசனையின் சிறப்பின்மை இனிது தோன்றுவதாகும். அறிவினுக் கறிவாய் விளங்கும் அருங்கலைத் தெய்வம் மலரையும் மந்திரத்தையும் பொருளாகக் கருதி அவற்றால் மகிழ்ந்து அருள் செய்ய மாட்டாதென்று இக்கவிஞர் கருதுகின்றார். பின் அத்தெய்வத்தைப் போற்றும் முறைதான் யாதோ எனின்,

"வீடுதோறுங் கலையின் விளக்கம்
வீதிதோறு இரண்டொரு பள்ளி
நாடுமுற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்களெங்கும் பலபல பள்ளி

அனுமதேயமாய்ப் பிறரைப் பழிப்பவன் ஒருவரும் அறியாத தன் சொந் தப் பெயரை ஒவ்வொருவரும் சூட்டும் "கோழை" என்னும் பெயராய் மாற் றிக் கொள்கின்றான்.



தேடுகல்வி யிலாத தோரூரைத்
தீயினுக் கிரையாக மடுத்தல்
கேடுதீர்க்கும் அமுதம் என்அன்னை
கேண்மைகொள்ள வழியிவை கண்டீர்"

என்று கலைமாதின் மனத்தை மகிழ்விக்கும் வழிகளைக் கவிஞர் விரைத் துரைக்கின்றார். வீடுதோறும் கல்வியின் மணம் கமழவேண்டும். வீதிதோறும் இரண்டொரு கல்லூரி இலங்கவேண்டும். நகர்தோறும் பல கலாசாலைகள் நிலவவேண்டும். நாடெங்கும் கலையின் ஒளி வீசவேண்டும். கலைமண மில்லா நாடு காடாதலால் அதனை எரியினுக் கிரையாக்கவேண்டும். அதுவே நாமகள் விரும்பும் நல்ல வழிபாடாகும் என்று கவிஞர் கூறும் மொழிகள் அறிந்து போற்றத் தக்கனவாம். அஞ்ஞானமென்னும் இருளில் ஆழ்ந்து கிடக்கும் நாடு நகரங்களைக்கண்டு இக்கவிஞர் உள்ளம் எரிகின்றது. புத்தகத்தி லமைந்த பொருளைத் தேர்ந்தும் வகை யறியாத புன்மக்கள், கலைமகளுக்குரிய திருநாளில் பழைய ஏடுகளை எடுத்தடுக்கி, பொருளறியா மந்திரங்களை முணு முணுத்து, பூச்சொரிந்து பொங்கலிட்டுப் போற்றும் பேதைமையை நினைந்து, கவிஞர் உள்ளம் புழுங்குகின்றது. அமிழ்தினும் இனிய தமிழ்மொழி நிலவும் திருநாட்டிற் பிறக்கும் பேறுபெற்ற மாந்தர், பாமரராய் விலங்குகளாய்ப் பான்மைகெட்டு வாழும் வாழ்க்கையை நினைந்து கவிஞர் உள்ளம் வருந்து கின்றது. கல்வியிற்பெரிய கம்பன் பிறந்தநாட்டில் கல்லாக் கயவர் களித் துத் திரிதல் ஆகுமோ? தெள்ளமுதனைய திருமறை கிளந்த வள்ளுவர் பிறந்த நாட்டில், உள்ளத்தில் இருள் செறிந்து, ஊமையராய்க் குருடர்களாய் வாழும் மக்கள் உலாவித் திரிதலாகுமோ? சிலம்பின் கதையெழுந்த செம்மை சான்ற தமிழ்நாட்டில் விலங்கினம் போன்ற கீழோர் புலம்பித் திரிதலாகுமோ? என்று கவிஞர் கூறும் மொழிகளில் வேகம் அமைந்து விளங்கக் காணலாம். பூவும் நீரும் கொண்டு பூசனை புரிவதிலும், நாடெங்கும் கலையொளி பரப்புதலே நாமகளுக்குரிய சிறந்த வழிபாடாகுமென்று கவிஞர் அருளிய பொருளுரை பொன்போற் போற்றத் தக்கதாகும்.

"இன்னருங்கனிச் சோலைகள் செய்தல்
இனியநீர்த் தண்சுனைக ளியற்றல்
அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோரேழைக் கெழுத்தறிவித்தல்

என்று பாரதியார் அருளிய கவியில் அவர் அகத்து நிறைந்து நின்ற ஆர்வம் அழகுற இலங்கக் காணலாம். அன்னசாலைகள் அமைத்தலும், ஆலயங்கள்

நம்மிடமுள்ளதாக நாம் பாசாங்கு செய்யும் குணங்களைப்போல், நம்மிட முண்மையாகவே யுள்ள குணங்கள் ஒரு பொழுதும் நம்மை நகைப்பிற் கிட மாக்குவதில.

எடுத்தலும், சாலைகள் வகுத்தலும், சோலைகள் வளர்த்தலும், சிறந்த அறங்களே யாயினும், மாக்களை மக்களாக்கும் கல்லூரிகள் நிறுவுதலே தலையாய அறம் என்று கவிஞர் திறம்பட எடுத்துரைத்தார். உடம்பை வளர்க்கும் அன்னசாலையினும் உயிரைவளர்க்கும் கல்விச்சாலை சிறந்ததென்று சொல்லவும் வேண்டுமோ? படமாடுங் கோயிலைப் பழுது பார்த்தலினும் நடமாடுங் கோயிலில் நல்விளக்கேற்றுதல் நன்றென்று நவிலவும் வேண்டுமோ? கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன் என்னும் முதுமொழி உண்மையாயின் ஆலயங்கள் அமைப்பதின் முன்னரே அறிவை வளர்க்கும் கலாசாலைகள் அமைய வேண்டும் என்னும் உண்மை இனிது விளங்கு மன்றோ? இதனாலேயே கண்கு[illegible]ருந்தும் குருடராய், காதிருந்துஞ் செவிடராய், மக்கள்போல் வாழும் பசுமாக்களுக்கு எழுத்தறிவித்தல் ஏனைய அறங்களுள் எல்லாம் சிறந்த [illegible]யே கவிஞர் எடுத்துரைப்பா ராயினர்.

இத்தகைய கல்விச் சாலைகள் அமைத்துக் கலைமகளைப் போற்றுதற்கு எல்லோரும் முன்வர வேண்டுமென்று பாரதியார் பறைசாற்றுகின்றார்.

> "நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்
> நிதிகுறைந்தவர் காசுகள் தாரீர்
> அதுவுமற்றவர் வாய்ச்சொல் லருளீர்
> ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்
> மதுரத்தேமொழி மாதர்கள் எல்லாம்
> வாணிபூசைக் குரியன பேசீர்
> எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
> இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்"

என்று பாரதியார் கவிமுரசம் அதிர்கின்றது. நிதிமிகுந்தவரும் நிதிகுறைந்தவரும், அருளாளரும், ஆண்மையாளரும், மாதரும் மற்றையோரும் ஒல்லும் வகையால் உதவிக் கலை வளர்க்கும் பெரும்பணியில் கலந்துழைக்குமாறு பாரதியார் அழைக்கின்றார். பெரும்பொருள் படைத்தவர் அள்ளி அள்ளிக் கொடுக்கலாம்; சிறுபொருள் பெற்றவர் எண்ணி எண்ணிக் கொடுக்கலாம்; வறுமையாளர் வாயினால் வாழ்த்தலாம்; ஊக்கமிகுந்தவர் உழைப்பினை உதவலாம். மதுரமொழி பேசும் மாதர்கள் வாணியை மனமார வாழ்த்தலாம். இவ்வாறு மாந்தர் பல்லோரும் விரைந்து பணிசெய்வராயின் இந்நாட்டில் அறியாமை என்னும் இருளகன்று கலைமகள் களித்து நடம் புரிவாள் என்று கவிஞர் எழுப்பிய பேரொலி இப்பொழுது எங்கும் நிரம்பி நிற்பதாகும்.

சந்தாதாரர்களுக்கு:—சந்தா நெம்பர் தெரியாதவர்கள் மாத மாதம் வரும் சஞ்சிகையின்மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

மங்கையர் நிழலில் மட்டுமே மணந்தரும் மலர் ஒப்பர்.

# மேனாட்டுத் தத்துவம்

(கி. பாலசுப்பிரமணியம், M. A.)

(180-ம் பக்கத் தொடர்ச்சி.)

லைப்னிட்ஜ் உலகத்தில் ஒரு திவ்ய காரணமிருக்கிறது. அக்காரணம் நமக்கு இன்னும் ஏற்படவில்லை. ஏற்படாததால் காரணமில்லையென்று சொல்ல முடியாது. உலகத்தில் நல்லது மிருக்கிறது கெடுதலுமிருக்கிறது. இக்கெடுதலும் நன்மைதானோ வெனில், ஆம், அதையும் ஒரு நன்மையாகவே கொள்ளவேண்டும். துன்பமேயில்லாமல் நன்மையே யிருப்பின் உலகத்திலிருப்போர் யாவரும் கெட்டவரா யிருப்பர். தீமையே மனிதரை நல்லவராக்குகிறது. தீமையை நீக்க அவர்கள் அறிவதற்குத் தீமையிருத்தல் அவசிய மன்றோ! ஆதலின் தீமை யிருப்பதற்கும் ஒரு காரணமிருக்கிற தல்லவா? ஆகவே தீமையும் நன்மை யென்றே சொல்லவேண்டும். மேலும் நாம் சிலவற்றைத் தீமை யென்கிறோம். ஆனால் நமக்கு உலகத்தின் சில வருஷங்களைப்பற்றியே தெரியும். எத்தனைகோடி வருஷங்களாக உலகமிருக்கின்றது. இன்னும் எத்தனைகோடி வருஷங்கள் இருக்கப்போகின்றன. உலகத்தின் முழுச்சரித்திரத்தில் தீமையின் உபயோகம் என்னவென்று நன்றாய்த் தெரியும்.

உலகம் எத்தன்மையதெனக் கண்டோம். அனேக அணுக்களாலாயது. ஒவ்வோரணுவிலும் மனமும் ஜடமும் ஒருங்கே யிருக்கின்றனவென்று கண்டோம். ஒவ்வோர் அணுவும் மற்ற அணுக்களோடு சம்பந்தப்படாமல் ஒரு பெரிய அணுவை பிரதிபலிக்கிறதென்று அறிந்தோம். அணுவும் அனுபவமும் அதனுள்ளேயே அடங்கி யிருக்கின்றன. வித்திலிருந்து செடி உண்டாவதற்கு வித்திலேயே செடியின் அம்சங்கள் அடங்கி யிருப்பதுபோல் அணுவிலேயே அதன் சாராம்சம் அடங்கி யிருக்கிறதென்பது லைப்னிட்ஜின் கொள்கை.

இவருக்குப்பின் தத்துவ ஆராய்ச்சியில் முக்கியமானவர் 'லாக்' (Locke) என்பவர். லாக்கிற்கு லைப்னிட்ஜின் தத்துவம் சரியெனப் புலப்படவில்லை. மனத்திற்கா அவ்வளவு சக்தியென வியந்தார். அப்படி மனத்திற்கு அவ்வளவு சக்தி உண்டாயின், குழந்தைக்கே எல்லா விஷயங்களும் தெரிந்திருக்க வேண்டும். பிறக்கும்போதே மனிதரின் குணாதிசயங்கள், உலகத்தின் வினோதங்கள், தான்பின்னால் அனுபவிக்கப் போகிறவைகள் முதலியன தெரிந்

விலங்குகளுக்கு உணர்ச்சி மட்டுமே உண்டு; மனிதனுக்குமட்டுமே அறிவு உண்டு என்று நாம் பெருமை பேசிக் கொள்கின்றோம். ஆயினும் நாம் பெருமை பேசும் நம் மறிவு மக்கட்குப் பெருக்கியுள்ள இன்பம் எவ்வளவு சிறியதாகும்!

திருக்கவேண்டும். ஆனால் அனுபவத்தில் இப்படியா யிருக்கின்றது? குழந்தைக்கு ஒன்றுமே தெரிவதில்லை. ஒன்றுந் தெரியாத குழந்தையென்று வசனமும் வழங்குகிறது. குழந்தையும் ஒருவஸ்துவைப் பார்த்தவுடன் அது என்னவென்று தெரியாமல் விழிக்கிறது. யாராவது சொன்னால்தான் தெரியும். கருப்புநிறமுள்ள பறவையைக் காண்பித்து "அது காகம்" என்றால் அதுமுதல் காகத்தை எப்போது பார்த்தாலும் காகமெனத் தெரிந்து கொள்ளுகிறது. அப்படியில்லாமல் மனத்தால் தெரிந்து கொள்வதாயின் காக்கையைப் பார்த்தவுடன் "எனக்குத் தெரியுமே, அதுதான் காகம்" என்று சொல்வதில்லை. சூரியனைப் பார்த்தபோது "அதுதான் சூரியன் என்று நாம் சொல்லித்தான் குழந்தைக்கும் தெரியும் "அது என்ன" என்று குழந்தை கேட்பதைப் பார்க்கிறோமே தவிர அதை முன்னமேயே யறிந்ததாகத் தோன்றவில்லை. அதாவது ஒவ்வொரு பொருளை யறிவதற்கு முன் வெளியில் அவ்வஸ்துவை நாம் பார்க்கவேண்டும். இல்லாவிடில் அதை யறியவே முடியாது. ஒரு பூனையைப்பற்றி குழந்தைக்கல்ல, அதை முன்னால் பார்த்திராத பெரியவனுக்கும் எவ்வளவு சொன்னாலும் அதைப் பிரத்தியக்ஷமாகப் பார்த்தது போலாகாது. நான்கு கால்கள், ஒரு வால், உருண்டைமுகம், சிறிய காதுகள், மிருதுவான சரீரம் என்று சொன்னாலும் இவைகளை வைத்துக்கொண்டு பூனையை யறியமுடியாது. அதாவது ஒவ்வொரு விஷயத்தையும் பிரத்தியக்ஷமாகக் காணவேண்டும். மனம் ஒரு சுத்தமான பலகை போன்றது. நாம் காண்பது, கேட்பது, ஸ்பரிசிப்பது, சுவைப்பது, முகருவது ஆகிய அனுபவங்கள் வெளியிலுள்ள வஸ்துக்களிலிருந்து கிளம்பி மனதில் படிகின்றன. இவை மனத்தில் படிவதால்தான் நமக்கு ஞானமுண்டாகிறது. சுவரை வைத்துக்கொண்டல்லவா சித்திரம் எழுதவேண்டும்! இவ்வனுபவங்களில்லையேல் நாம் ஒன்றையும் அறியமுடியாது.

ஆனால் மனத்திற்குச் சக்தியேயில்லை யென்பதில்லை. மனத்தில் படும் அனுபவங்களைத் திரட்டி அவைகளைத் தொகுத்து அர்த்தம் செய்துகொள்ளக் கூடும். இன்னொன்று: சிலகுணங்கள் வஸ்துக்களிலேயே யிருக்கின்றன. கனம், சுற்றளவு, அமைப்பு முதலியன இதுபோல்வன. மற்றபடி வர்ணங்கள், சப்தங்கள், ருசி முதலியன மனத்திலிருக்கின்றன. ஒரு வஸ்துவின் கனமும் சுற்றளவும் அதனுடையவைதாம். அவைகளை அதில் புகுக்க முடியாது. ஆனால் வர்ணம் அப்பொருளிலேயே அவசியம் பதிந்திருப்பதன்று. குதிரை சிவப்பு, கருப்பு, வெள்ளை முதலிய வர்ணங்களாகப் பலவிதமாக விருக்கலாம். மேலும் கண்ணை மூடிக்கொண்டு விட்டால் வர்ணம் நமக்குத் தெரியாது. மூக்கை மூடிக்கொண்டு விட்டால் வாசனை தெரியாது. ஆகையால் வாசனையும் நமது மனதிலிருக்கும் பொருள்.

சில விஷயங்கள் நமக்கு வெளியில் ஒருபொருளு மில்லாமலேயே தெரிய வருகிறது. நாமிருக்கிறோம். நம்முடைய இருப்பை எப்படி அறிகிறோம்? இது நமக்கு இயற்கையிலேயே தெரிய வருகிறது. மனத்திலேயே இவ்வெண்ணம் உதிக்கிறது. கடவுளின் உண்மையை எப்படி யறிகிறோம்? நம்முடைய

---

இறுதியில் லட்சியத்தை அடைவிக்கும் காரியங்களைச் செய்தால் மட்டும் போதாது. செய்யும் ஒவ்வொரு காரியமுமே ஒரு லட்சியமாயிருத்தல் வேண்டும்.



இருப்பை யறிகிறபடியே, ஆதியிலிருந்து ஒரு பரம்பொருள் இருக்கவேண்டுமென்று நமக்குத் தெரிகிறது. இவ்வுலகம் இருப்பதற்கு ஒரு காரணம் வேண்டாமா? உலகம் காரணமில்லாமல் வந்திருக்க முடியாது. ஒவ்வொரு விஷயத்திற்கு ஒரு காரணமுண்டு, உலகத்திற்கும் ஒரு காரண மிருக்கவேண்டும். இதுவே கடவுள்.

மற்ற விஷயங்களை ஸ்பரிசம் முதலியவற்றால் தெரிந்து கொள்ளலாம். தெரிந்துகொண்டு, மனத்தால் அவைகளைத்திரட்டி யறியவேண்டும். அதாவது மனத்திற்கு ஒருவித சக்தியிருக்கிறதென்றாலும், வெளிப் பொருள்களையே அது அறியக்கூடும். வெளிப்பொருள்கள் தனித்தனி குணங்களை மனத்தில் பதியவைக்கின்றன. அக்குணங்களைத் தகுந்த விடங்களில் பொருந்தச்செய்து அறிவது மனத்தின் சக்தி.

(தொடரும்.)


## 'ஆனந்தபோதினி' வாரப் பத்திரிகை.

நமது 'ஆனந்தபோதினி' வாரப் பதிப்பின் மூன்றாவதாண்டு பிறந்துவிட்டது. 16 பக்கங்களுடன் வெளியான நமது பத்திரிகை இவ்வாண்டு முதல் 20 பக்கங்களுடன் வெளியாகின்றது. நம் தேசமக்கள் அரசியல், சமயம், சமூகம், பொருளாதாரம் முதலிய துறைகளில் தக்க அறிவும், அபிவிருத்தியும் பெறுவதற்காகவே பற்பல அறிஞர்களின் அரிய கட்டுரைகள் அதில் வெளியாகின்றன. நம் நாட்டிலும், உலகில் இதர தேசங்களிலும் நடைபெறும் எல்லாச் செய்திகளும் திரட்டி வெளியிடப்படுகின்றன. தினசரிப் பத்திரிகை படிக்கவில்லையே என்னும் கவலையின்றி உலக விஷயம் முழுவதையும் நமது வாரப் பத்திரிகையினின்றும் தெரிந்துகொண்டு மகிழ்ச்சியடையலாம். இதன் வருஷ சந்தா உள் நாட்டுக்கு ரூபா மூன்றுதான். வெளிநாடுகளுக்கு ரூபா நான்கு. உடனே எழுதிக்கொள்ளுங்கள்.

மானேஜர்,
'ஆனந்தபோதினி' ஆபீஸ்,
சௌகார்பேட்டை, மதராஸ்.


---

சரியாய் மெச்சக் கற்றுக்கொள். வாழ்வின் பேரின்பம் அதுவே. பெரியோர் மெச்சுபவைகளைக் கவனி. அவர்கள் பெரிய விஷயங்களை மெச்சுவர். தாழ்ந்தோர் இழிவான விஷயங்களை மெச்சுவர், வணங்குவர்.

# லைப் இன்ஷியூரென்ஸ் பகுதி

(இன்ஷியூரென்ஸ்.)

## வயதுசென்ற மாதின் கதை

I

**சா**யங்காலத்தை யாரே வர்ணிக்க வல்லார்! எத்தனையோ கவிகள் அத்திவ்ய சமயத்தின் வனப்பை கவிரூபமாக மாற்ற முயன்றிருக்கின்றனர். ஆங்கில கவி யொருவர் "வார்த்தைகள் உள்ளேயிருக்கும் ஆத்மாவின் சொரூபத்தைப் பாதி ஒளித்துப் பாதி விளக்குகிறது" என்றார். அப்படியே கவிகள் வெளியிடுவது எவ்வளவு ஆனந்தகரமாக விருந்தாலும் வெளியிடாததே இன்னும் அதிக ஆனந்தமாக விருக்குமென்பதில் சந்தேகமில்லை. இரவி மேற்கடலில் "இன்றைய வேலை முடிந்தது," என்று சந்தோஷத்தோடு புகவும், சந்திரன் "உலகத்தில் எத்தனையோ நல்லோர், பெரியோர் இருக்கின்றனரே அவரைத்தரிசித்தால் என்னுடைய பாவங்கள் நீங்கும்" என்னும் பாவனையாய்க் கீழ்த்திசையில் கிளம்பவும், நக்ஷத்திரங்கள், "நீர் சொல்லும் அப் பெரியார் எங்கே, யாமும் பார்க்க ஆவல் கொண்டிருக்கிறோ" மென்று சொல்வது போல் கண்ணை விழித்து விழித்துப் பார்த்துக் கொண்டும், சர்வ வியாபியான வாயு "நண்பன் சந்திரன் வந்துவிட்டான் இவனோடு விளையாடுவது தண்மையாயிருக்கும்" என்ற ஆனந்தத்தோடு, செடி கொடிகளினூடே புகுந்து சந்திரனை எதிர்கொண் டழைக்கலாகாது, அவன் நம்மைத் தேடட்டும் என்னும் பாவனையாய், அதிக இரைச்சலில்லாமல் மெதுவாக அடித்துக் கொண்டும் இருக்கும் வேளையில் குதூகலமடையாதார் யார்? மனிதரும் வேலை செய்து முடித்து ஆடல் பாடல் முதலிய விளையாட்டுகளில் புத்தி செலுத்தி வருகிறார்கள். அங்கங்கே 'மஹாலக்ஷ்மி வரும்வேளை யென்று, சிறு சிறு விளக்குகள் மின்னிக்கொண்டிருக்கின்றன. பக்ஷிகள் தத்தம் கூடுகளில் பேசிக்கொண்டும் பாடிக்கொண்டுமிருக்கின்றன. "ஈசா! இத்தனை கஷ்டங்களையும் ஒரு நொடியில் மறந்துவிட ஹேதுவாயிருக்கும் இயற்கை விநோதங்களைக் காண்பிக்கும் உமக்கு எவ்வாறு தொண்டு செய்யப்போகிறோம்!" என்று நாஸ்திகரும் வியக்கும்படி யிருக்கும் வேளை யெனக்கு எப்போதும் ஒருவித மனவமைதியைத் தருகின்றது. அவ்வேளையில் நான் உலாவப்போவது வழக்கம். ஒருநாள் உலாவி வரும்போது, சாலையின் ஓரத்திலுள்ள ஒரு கல்லில் ஒரு வயதுசென்ற அம்மை விம்மிவிம்மி யழுது கொண்டிருந்தாள். அதைக் கண்டதும் எனக்கும் பரிதாபமாக விருந்தது. இப்பேர்ப்பட்ட சமயத்தில்-

---

உண்மையான செல்வம் நாம் எதை உடையோம் என்பதில் அன்று; நாம் எதுவாய் இருக்கின்றோம் என்பதிலேயே அடங்கும்.



அனைவரும் தமது துக்கங்களை மறந்திருக்கும் வேளையில் இவ்வம்மை அழுவானேன்? கைம்பெண்ணுமில்லை. நெற்றியில் குங்குமம் தரித்திருந்தாள். "தாயே, தாங்கள் அழக் காரணமென்ன? வீடு செல்ல வழி தெரியவில்லையா, யான் அழைத்துச் செல்கிறேன். எங்கே போகவேண்டு" மென்றேன். அவ்வம்மை அழுகையை நிறுத்தி, "அப்பா வீடு தெரியாமலில்லை. அதோ இருக்கும் வீடு தான் என்னுடையது. என் கஷ்டங்களை நினைத்துக்கொண்டு அழுகிறேன்" என்றாள். நான் அம் மாதுசிரோன்மணியை உற்று நோக்கும்போது, நெற்றியில் இருக்கும் கோடுகள் வயதினால் ஏற்பட்டவையல்ல மன வருத்தத்தினால் என்று அறிந்தேன். "என் தலைமயிர் நரைத்துவிட்டது. ஆனால் வயதினாலல்ல" என்று ஒரு கவி ஆங்கிலத்தில் பாடியிருக்கிறார். இம்மாது வயது சற்றேறக் குறைய 50-இருக்கலாம். ஆயினும் தூரத்திலிருந்து பார்ப்போர் 70 இருக்குமென மதித்திருப்பார்கள். அவ்வம்மை "அப்பா, உன்னை என் மகனாகப் பாவித்து உன்னிடம் என் கஷ்டத்தைச் சொல்கிறேன். அந்த வீட்டில் என் கணவன் படுத்த படுக்கையாய்க் கிடக்கிறார். அவருக்கு வயது 55 ஆகிறது. எங்களை ஏனென்று கேட்பார் இல்லை. அவருக்குச் சிகிச்சை செய்ய என்னிடம் பணமுமில்லை. தேக வலிமையுமில்லை. எனக்கும் அவ்வப்போது தேகம் அசௌக்கியமாய்விடுகிறது. ஆனால் நானும் படுத்துவிட்டால் எப்படியென்று நோயைப் பொருட்படுத்தாமல் இருக்கிறேன்" என்றாள்.

"குழந்தைகள் இல்லைபோலும்" என்றேன்.

அவ்வம்மை நகைத்து, "அப்பா, எனக்கு மூன்று பிள்ளைகளும் இரண்டு பெண்களும் உண்டு-இப்போதும் இருக்கிறார்கள். இருந்தென்ன, இறந்தென்ன, எங்களைக் கவனிப்பதில்லை. நாங்கள் இறந்தாலும் அண்டை அயல்வீட்டார் தான் கிரியைகள் செய்யவேண்டும்போ லிருக்கிறது. மூன்று பிள்ளைகளும் மூன்று பட்டணங்களி லிருக்கிறார்கள். எல்லோருக்கும் கல்வி கற்பித்துத் தகுந்த உத்தியோகங்கள் சம்பாதித்துக் கொடுத்தார் என் கணவர். இப்போது தகப்பனார் அசௌக்கியமாயிருக்கிறார் என்று எத்தனை கடிதங்கள் எழுதியும் ஒருவனாவது திரும்பிப் பார்ப்பதில்லை. பெண்களைக் குறைகூற முடியாது. அவர்கள் வேறு வீடுகளில் புகுந்தபின் அவ்வீட்டு வாசிகளாய் விடுகிறார்கள். பிறகு அவர்களுடைய மாமன் மாமி மனோபாவத்தை யொட்டியே நடக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்."

"அம்மா, உம்முடைய வீட்டுக்காரர் பொருள் சம்பாதிக்கவில்லையா?" என்று நான் கேட்டேன்.

"அப்பா, அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறாய்? என் புருஷன் நல்ல உத்தியோகத்தில்தான் இருந்தார், நிறையப் பொருள் சம்பாதித்தார். அர்பத்நட் பாங்கியில் 10,000-ரூபாய் வைத்திருந்தார். ஐயோ சொல்லவும் நாவெழவில்லையே, எல்லாம் போய்விட்டதே! சொற்ப தொகை வந்தென்ன, வராமலென்ன?"

---

ஆன்மாவிற்கு வெளியே கடவுளைத் தேடினால் கடவுளின் விக்கிரகங்களை மட்டுமே காண்பாய். ஆன்மாவை ஆராய்ந்தால் அங்குள்ள உணர்ச்சிகளும் எண்ணங்களும் ஆண்டவனை அறிவிக்கும்.

"ஆம், ஆம், அந்த விபத்து நேரும்போது நான் சிறு குழந்தையென்றும், அதனால் அனேக குடும்பங்கள் பாழாயின வென்றும் மாத்திரம் பின்னால் கேள்விப்பட்டேன். அது தவிர வேறு ஐவேஜிகளில்லையோ?"

"ஒரு பெரிய மனிதனும், அவனுடைய ஆங்கில உடுப்பும் தலைப்பாகையும் சாமாரியாய்ப் பொழிந்த வார்த்தைகளையும் கேட்டு மயங்கி அவன் புதியதாய் ஏற்படுத்திய கம்பெனிக்கு மூலதனத்தில் பாதியாக 10,000-ரூபாய் கொடுத்திருந்தார். இரண்டு வருஷம் வரையில் இதோ லாபம், அதோ லாபம், என்று சொல்லிவிட்டுக் கடைசியில் வியாபாரம் நடக்கவில்லை, முழுவதும் நஷ்டமாய்விட்டதெனச் சொல்லிவிட்டான்" என்று கண்ணீர்விட்டாள். "அம்மா உங்களுக்கு இவையெல்லாம் சொல்வது துக்கத்தை விளைவிக்கின்றன. வேண்டாம், போனதைப்பற்றிச் சொல்லி என்ன பிரயோஜனம்" என்றேன்.

அவ்வம்மை, "அப்படியல்ல, என் துக்கத்தை இவ்வளவுதானென்று நினையாதே. ஒரு பெரிய வியாபாரிக்குக் கடனாக 5000-ரூபாய் நூற்றுக்கு இரண்டுவட்டி யென்று கொடுத்தோம். அவனும் நாமத்தைப் போட்டான். கடைசியாகப் பிச்சைக் குடியில் சனீஸ்வரன் புகுந்தாற்போல் சென்ற வருஷத்திய வெள்ளப் பெருக்கில் எங்களுடைய நிலங்கள் மண்ணடித்துப் போயின. மனிதரும் கடவுளும் எம்மைச் சோதித்தால் நாங்கள் என்ன செய்வது" என்று அழுதாள். நான் அவளைத் தேற்றி, "அம்மா பொழுது போகிறது, வாருங்கள் வீட்டிற்குச் செல்வோம். நான் உங்களுடைய வீட்டாரைப் பார்க்க ஆவல் கொண்டிருக்கிறேன்" என்றேன். அவ்வம்மையும் ஒருவாறு தன்னைத் தேற்றிக்கொண்டு வந்தாள். வீடு அதிக கிலமாய்க் கிடந்தது. சுவரெல்லாம் இடிந்துவிழும் சமயம். தூண்கள் ஆடிக்கொண்டிருந்தன. கூடத்தில் ஒரு பாய் விரித்திருந்தது. அதில் உடல் மிகமெலிந்த மனிதர் படுத்திருந்தார். அவர் கண்கள் மூடியிருந்தன. சிறிய விளக்கொன்று பக்கத்தில் எரிந்துகொண்டிருந்தது. அம்மை அதைத் தாண்டவே அவர் கண்விழித்து ஈனசுரத்தோடு "ஏன் இவ்வளவு நேரம், வைத்தியர் இல்லையா?" என, அவள் "இருந்தார், மருந்து கொடுத்திருக்கிறார். வழியில் இந்த நண்பர் வந்தார். இவருடன் சற்றுப் பேசிக்கொண்டிருந்தேன்" என்றாள்.

நான் கிழவருக்கு அஞ்சலி செய்து அவர் அருகில் உட்கார்ந்து, "தங்களைப் பார்க்க வேண்டுமெனத் தோன்றிற்று. அதனால்தான் வந்தேன்" என்றேன்.

அவர் புன்சிரிப்புச் சிரித்து, "அப்பா, என்னால் பேச முடியவில்லை, இருந்தாலும் என் மனைவியைக் கேள். அவள் எங்கள் குடும்ப நிலையைப்பற்றி உங்களுக்குச் சொல்வாள்" என்றார்.

நான் "ஆம், சில விஷயங்களை அம்மையார் தெரிவித்தார். வருத்தமாகவிருந்தது. லைப் இன்ஷியூரென்ஸ் முறையைப்பற்றி உங்களுக்குக் கேள்வியில்லையோ" என்றேன்.

அவர் சற்று நிதானித்து, "அன்பனே, அதை ஏன் கேட்கிறாய். இத்தனை முறையில் பணம் செலவழித்ததை அதில் ஒரு சிறிதேனும் போட்டிருந்தால் இப்போது எவ்வளவு அனுகூலமாகவிருக்கும்! அப்போது என்னை இன்ஷியூர் செய்யச் சொன்ன ஏஜண்டுகளை அணுகவொட்டாமல் தடுத்தேன். இப்போது அப்படிச் செய்தாயே, செய்தாயே வென்று மனச்சாக்ஷி என்னை வாட்டுகிறது" என்றார். இவ்வளவும் பேசிய சிரமத்தால் அவர் கண்ணை மூடிக்கொண்டார். நான் மெல்ல எழுந்து அம்மையாரிடம் விடைபெற்றுக்கொண்டு அப்புறம் வருவதாகச் சொல்லி வெளிக்கிளம்பினேன். வழியில் போகும்போது, இங்கிலாந்தில் அரசாண்ட எட்டாம் ஹென்றி என்னும் அரசனின் பிரதம மந்திரியாகவிருந்து கடைசியில் அரசன் கோபத்திற்கு ஆளாகி, ஏனென்று கேட்பாருமில்லாமல், தன் வேலைக்காரனை கிராம்வெல் என்பவனுடன் ஒரு தேவாலயத்தை யடைந்து, அவ்வேலைக்காரன் துடைமேல் தலைவைத்துப் பிரலாபித்த உல்ஸி யென்பவனுடைய ஞாபகம் வந்தது. "ஓ, கிராம்வெல்! கிராம்வெல்! என் அரசனைப் போற்றிய அளவில் ஒரு பாதி அங்கலாப்புடனேனும் என் கடவுளைப் போற்றியிருப்பேனாகில் என்னை இப்படி அனாதரவாக விட்டிருப்பாரா? விட்டிரார்" என்று கதறினான். இக்கிழவன், மற்ற முறைகளில் செலுத்திய தொகையில் ஒரு சிறிதாவது இன்ஷியூரென்ஸுக்குச் செலவழித்திருந்தால் இப்போது ஒரு நிதி யேற்பட்டிருக்கும். அந்நிதியைக் கொண்டு சிகிச்சை செய்து கொண்டிருக்கலாம். அந்நிதியிருந்தால் உற்றார் உறவினரும் மதிப்பர். அதற்கெல்லாமில்லை. ஆஹா! இந்தக் குடும்பத்தைப் போல் தவிக்கும் குடும்பங்கள் நமது தென்னிந்தியாவில் எத்தனையிருக்கின்றனவோ! பிழைக்க வழியிருந்தும் அறியாமல் திரிவதாலல்லவோ இவ்வளவு கஷ்டம்" என்று எனக்குள்ளே சிந்தித்துக்கொண்டே வீட்டிற்குத் திரும்பினேன்.

## II

ஒரு பெரியார் ஓரரசனை வாழ்த்தும்போது "வரப்புயர" என்று சொன்னாராம். அரசனுக்கு அதன் பொருள் விளங்கவில்லை. மறுபடியும் அவரைக் கேட்க அவர் வரப்புயர, நீர் உயர, நீர் உயரப் பயிர்உயர, பயிர் உயரக் குடி உயர, குடி உயரக் கோன் உயர்வான் என்று சொல்லிப் போந்தார் என்று படித்திருக்கிறோம். நிலத்தின் நான்கு மூலைகளும் உயர்ந்தால் எல்லோருக்கும் அனுகூலம். நாம் மாத்திரம் சுகப்படுவதோடில்லை. நமக்குத் தெரிந்தவர் தெரியாதவர் எல்லோரும் சுகமடைவதே நம்மைச் சந்தோஷிக்கச் செய்யும். ஏதோ, நல்ல காரியத்திற்கு நம்முடைய பங்கெனக் கொஞ்சமிருத்தல் அவசியம். ராமருக்குத் தொண்டு செய்ய அணிலும் உதவிற்று என்று கதையிருக்கிறது. அதுபோல் நமது தேசத்திற்குத் தொண்டு செய்ய நம்மையன்றி யார் வருவார்? எனக்குத் தெரிந்த ஆங்கிலப் பிரபு ஒருவர் ஒரு விஷயத்தைக் குறித்துப் பேசும்போது, "நான் தர்மஞ் செய்யவேண்டுமென்றால் என்னுடைய தாய் நாடாகிய இங்கிலாந்தில் எத்தனையோ சங்கங்களிருக்கின்றன. அவைகளைவிட்டு, இந்தியாவில் ஏழைகளுக்கென்று 50-ரூபாய் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். இந்தியர்கள் இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டாமா" வென்றார். தேச சேவைக்கு மாதம் தலைக்கு இரண்டணா சேர்ந்தாலும் நமது தேசத்தில் நாலரைக்கோடி ரூபாய்கள் வசூலாகிவிடும். மாதம்

---

இதுவே நான் சாமர்த்தியத்திற்குக் கூறும் இலக்கணம். ஆண்டவன் அந்தரங்கத்தில் அளித்தது. அதை நாம் அறியாமல் பகிரங்கப்படுத்தி விடுகிறோம்.

ஆன்மாவிற்கு உடல் ஒரு சமயம் தடை, ஒரு சமயம் கருவி, எப்பொழுதும் விட்டுப் பிரியாத தோழன். ஐம்புலன்கள் ஆன்மாவின் சிறையன்று. ஆன்மா உலகத்தோடு உறவாடுதற்கு அமைந்த சாளரமாகும்.

இரண்டணு வென்றால் தினத்திற்குத் தம்பிடியைவிடக் குறைவாக ஆகிறது. அந்த ஜனத்தொகையில் பாதிப்பேர் சம்பாத்தியமில்லாம லிருந்தாலும் மிச்ச முள்ளோர் இரண்டேகால் கோடி சேர்ப்பர். மாதம் இரண்டேகால் கோடியெனில் வருஷத்தில் இருபத்தியேழு கோடிகள் ஆகின்றன. இத்தொகையை வைத்துக்கொண்டு எவ்வளவு அனுகூலங்கள் செய்யலாம் என்று யோசித்துப் பாருங்கள். முதலாவது எல்லோருக்கும் இலவசப் படிப்பு கொடுக்கலாம். நமது தேசத்தில் நூற்றுக்கு ஐந்து பேர்தான் சரஸ்வதியின் அனுக்கிரகம் பெற்றிருக்கின்றனர். மிச்சமுள்ளோருக்குக் கல்வி புகட்டலாம். ஏழைகளுக்கு இலவச வைத்தியம் செய்யலாம். தெருக்களை அகலமாக நிர்மாணித்து அசுத்தமான சேரிகளையும் சந்துகளையும் ஒழிக்கலாம். ஏழைகளுக்குச் சிறிய வீடுகள், சுத்தமான ஜலம் காற்று முதலியன கிடைக்கும்படி ஏற்பாடுகள் செய்யலாம். தெருக்களில் நல்ல விளக்குகள் போடலாம். ஜனங்கள் சாயங்கால வேளையில் உலாவி வரவும், பிள்ளைகள் விளையாடவும் மைதானங்கள் நிர்மாணிக்கலாம். பெரிய வியாபாரங்களைத் தொடங்கி, ஜனங்களுக்குக் குறைந்த விலையில் சாமன்கள் கிடைக்கச் செய்யலாம். அன்னிய தேசங்களை ஒவ்வொன்றிற்கும் நம்பியிராமல் நம்மால் செய்துகொள்ள முடிந்தவற்றை இங்கே செய்து கொள்ளலாம். அமெரிக்காவில் போர்டு என்னும் தனவான் இப்போது விவசாயத்தில் ஒரு பரீக்ஷை செய்துவருவதாகத் தெரிகிறது. 3000-ஏக்கர் நிலத்தைப் பயிரிட்டு அது எத்தனை பேருக்குப் பிழைப்பாகிறது என்று பார்க்கிறாராம். லாபகரமாகவிருந்தால் அமெரிக்கா முழுமையும் அதைப் பரவச் செய்யப் போவதாகக் கேள்வி. நமது நாட்டிலும் இம்மாதிரி செய்யலாம். இம்முறைகளால் ஏழை மக்கள் அனேகருக்கு வேலை கிடைக்கும் என்பது நிச்சயம். ஸ்திரீகளும் சிறு பிள்ளைகளும் வேலை செய்யவேண்டியிராது. தேசமே சுகப்படும். தேசம் நோயற்ற வாழ்வோடும் குறைவற்ற செல்வத்தோடும் இருந்தால் மற்ற மேனாட்டுத் தேசங்களுக்குச் சமானமாக ஆய்விடும். அன்னிய தேசங்களில் பாரத அன்னையின் மக்கள் படும் துயர்களும் ஒழியும்.

இந்நிதிக்கு அழிவு வருமாவென்று கேள்வி. வருஷத்தில் இருபத்தேழு கோடி ரூபாய்கள் சேர்கிறது என்று கணக்கிட்டோம். இத் தொகையை மேற்கூறிய அபிவிருத்தி முறைகளில் உபயோகித்தால் வட்டி வருமானம் நிறையவே யிருக்கும். வட்டிப் பணத்தையும் முதலோடு சேர்த்தே வைப்போம். அடுத்த வருஷம் பின்னும் 27-கோடிகள் சேரும். பத்து வருஷங்களில் 270-கோடிகளும் அத்தொகையுடன் வட்டிக்குமேல் வட்டியும் சேர்ந்தால் எவ்வளவு பெரியநிதி யாகும் என்று யோசித்துப் பாருங்கள். இவ்வளவு பெரியநிதி அழிவானேன்? அழியவே யழியாது. சாஸ்வதமாக விருக்கும். இந்நிதி யாருடையது? உம்முடையதல்ல, என்னுடையதல்ல, நம்முடையது. பொதுப் பணம். பாரத அன்னையின் புதல்வர்களாகிய நம்முடையதுதான். இத்தொகையைச் சேர்க்க ஒன்றுகூடிய நம்மொருவருக்கும் கைம்மாறு என்ன? நம்மில் எவராவது அவஸ்தைப்பட்டால் அவருக்கு உதவியுடனே ஏற்படும். அவரும் நமது குடும்பத்தாரல்லவா?

இப்பேர்ப்பட்ட நிதியை நாமெல்லோரும் ஒருமனப்பட்டுச் சேர்க்க முன் வருவோமா? அவ்வளவு ஒற்றுமை நமக்குண்டா யென்று கேள்வி பிறக்கலாம்.

*ரோஜாச் செடியில் முள் இருக்கின்றது என்று முறையிடாதே. முட்செடியில் மலர் உளதென்று மகிழ்வாயாக.*



ஒற்றுமை யிப்போதில்லாமற் போனால் அவசியம் சீக்கிரத்தில் வருமென்பது திண்ணம், அப்படி வருவதற்காக இப்போது வாளாவிருக்க முடியுமா? முடியாது. இப்போது வழங்கிவரும் இன்ஷியூரென்ஸ் கம்பெனிகள் மேற்சொன்ன சாஸ்வத நிதிகளாக விளங்குகின்றன. மக்கள் சேர்க்கும் பணந்தான் இந் நிதிகள். மக்களுக்கு நன்மை செய்யவே இவை ஏற்பட்டிருக்கின்றன. மக்களில் ஒரு குடும்பத்தாரின் தலைவன் இறந்துவிட்டால் அக் குடும்பத்திற்கு ஆதரவு உண்டாக்குவதே இவைகளின் பொறுப்பு. இறக்காவிட்டாலோ? இறக்காவிட்டால் குடும்பம் தலைவனுள்பட ஒரு பெரிய தொகையை அனுபவிக்கும் ஆனந்தம் உண்டாகிறது. குடும்பத்தலைவன் இருந்தால் இவ்வளவு பெரிய நிதியை எப்படியோ கஷ்டப்பட்டுச் சேர்த்துவிட்டேன். வாருங்கள் சுகமாய் வாழலாம் என்பார். அவர் ஒருகால் இறந்துவிட்டிருந்தால் மற்றோர் "தகப்பன் நம்மோடு இருந்து சுகப்படக் கொடுத்து வைக்கவில்லை. நாமாவது சுகப்படுவோம். நம்மைச் சுகமாக வைக்க அவருக்கு மனம் வந்ததைப்பற்றியும் அச்சுகத்திற்குக் காரணமான நிதியைத்தரும் இன்ஷியூரென்ஸ் முறையொன்று வழங்குவதைப்பற்றியும் கடவுளை மனமார வாழ்த்துவோம் என்பார்கள். பணம் சிறிதுசிறிதாகச் சேர்ப்பதாலல்லவோ இத்துணை அனுகூலம். இன்னும் நமது தேச மக்கள் அனைவருமே இன்ஷியூர் செய்தால் தேசம் எவ்வளவு மேன்மையடையும்? ஆகவே தேசம் மேன்மையடைய வேண்டுமென எண்ணுவோருக்கு ஆசீர்வாதமாகப் பெரியோர் "இன்ஷியூர் செய்க" என்று வாழ்த்துவார்களாக.

[குறிப்பு:—லைப் அஷ்யூரென்ஸைப் பற்றி விவரமாக அறிய விரும்புவோர் "ஆனந்தபோதினி" வாரப்பதிப்பில் வெளியாகும் கட்டுரைகளைப் படிக்கவும். இவ்விஷயத்தில் ஏதேனும் சந்தேகம் தோன்றினால் ஆசிரியருக்கு எழுதலாம். தக்க பதில் அளிக்கப்படும்.]

## ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஊர்களிலும் நமது **'ஆனந்தபோதினி'** மாத, வாரப் பத்திரிகைகளை விற்பதற்கும், சந்தா சேர்த்துக் கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்துக் கொடுப்பதற்கும் தக்க சாமர்த்தியமுள்ள ஏஜண்டுகள் தேவை. விவரம் அறிய விரும்புவோர் எமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். நமது புஸ்தகங்களும் பத்திரிகைகளும் எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள ஹிக்கின்பாத்தம் புஸ்தகசாலைகளில் கிடைக்கும்.

மானேஜர்.

*வீண் சொற்கள் விஷயங்களை வியர்த்தமாக்குகின்றன.*

# கதிர்காம க்ஷேத்திரத்தின் மகிமை.

(கொழும்பு எஸ். டி. மாணிக்க முதலியார், பி.ஏ.)

கதிர்காம க்ஷேத்திரமானது ஸ்ரீ அருணகிரியாரால் பாடப்பெற்றதும், அநேக மகிமையுடையதும், கலியுகத்திற்கே முக்கியமான சக்தி வாய்ந்ததுமான க்ஷேத்திரம்.

இந்த க்ஷேத்திரத்திற்குப் போகவேண்டுமானால் சென்னையிலிருந்து கொழும்புக்கு வந்து கொழும்பிலிருந்து மாத்திரை என்றொரு ரெயில்வே ஸ்டேஷன் இருக்கிறது. அவ்விடத்திலிருந்து தசமாறு என்ற ஒரு கிராமம் 75 மைல் தூரத்திலிருக்கிறது. மாத்திரை ஸ்டேஷனுக்கும் தசமாறுவுக்கும் அநேக மோட்டார் பஸ்கள் போகின்றன. அந்த தசமாறுவிலிருந்து 14 மைல் தூரம் காட்டின் வழியாகக் கதிர்காமம் செல்லவேண்டும். அந்த 14 மைல்களிலும் ஆடி மாதம் அமாவாசை முதல் 15 தினம் வரையில் கதிர்காம க்ஷேத்திரத்தில் உற்சவமானபடியால், வழியில் யாதொருவிதமான பயமுமில்லாமல் அந்த 14 மைல்களிலும் அரோஹரா—அரோஹரா என்று சொல்லிக் கொண்டே போக வேண்டும். இரவு முழுமையுமே அநேக ஆயிரம் ஜனங்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். நாம் சொல்லும் அரோஹரா என்கிற சப்தத்தால் அந்த கதிர்காம க்ஷேத்திரத்தில் வாசம் செய்யும் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியே நம்மை வந்து அழைத்துக்கொண்டு போவதாகத் தெரியும். அந்த 14 மைல் காட்டில் போவது கடவுளுடைய மகிமையால்தான் போகவேண்டுமே தவிர மனிதருடைய பிரயத்தனத்தினால் போவதாகத் தெரியவில்லை.

வீட்டைவிட்டு கதிர்காமம் போகிற சமயத்தில் முதலில் நம்முடைய வீட்டிலிருக்கும் ஒரு பெரிய மனிதரை அழைப்பித்து அவரிடத்தில் விபூதி கொடுத்து அவர் பாதத்தில் விழுந்து நமஸ்காரம் செய்து விபூதியை நெற்றியில் இட்டுக்கொண்டு அரோஹரா என்று சொல்லிக்கொண்டே புறப்படவேண்டும். இந்த மரியாதை முதலில் செய்துவிட்டுத்தான் புறப்படவேண்டும்.

இந்த 14 மைல் தூரம் காட்டில் நடந்துவந்த பிறகு கதிர்காமம் க்ஷேத்திரம் அடைகிறோம். அவ்விடத்தில் ஒரு சிறிய கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலுக்குக் கோபுரம் முதலியவை இல்லை. கோயிலைப் பார்த்தால் கோயிலாகத் தோன்றாது. ஒரு வீடாகத்தான் தோன்றும். ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயிலில் முதல் ஒரு திரையிருக்கிறது. அந்தத் திரையில் ஸ்ரீ சுப்ரமணியர் மயில் வாகனத்திலிருக்கின்றதுபோல் வர்ணத்தில் எழுதியிருக்கிறார்கள். அதன் பின் மற்றொரு திரையிருக்கிறது. அதன் பின்னும் இன்னும்

நமது குறைகளில் சில உடன்பிறந்தவை. பிற கல்வியின் பயன். இவற்றில் எவை அதிக இன்னல் அளிப்பன என்பதே கேள்வி.

ஒரு திரை இருக்கிறது. அந்த மூன்றாவது திரையண்டை ஒரு பெட்டியிருக்கிறது. அந்தப் பெட்டிக்குத்தான் தீபாராதனை நைவேத்தியம் முதலியன நடக்கின்றன. நைவேத்தியம் ஒரு சிறிய பல்லக்கில் சிங்களவர்கள் வாயைக் கட்டிக்கொண்டு அதிக ஜாக்கிரதையுடனும் பயத்துடனும் கொண்டு போய் இரண்டாவது திரையண்டை வைத்துவிட்டு, மறுபடியும் முதல் திரயண்டை வந்து, கடவுளை வணங்கி அவருடைய உத்திரவைப் பெற்றுக் கொண்டு மூன்றாவது திரைக்குப் போய் அந்தப் பெட்டிக்குத்தான் தீபாராதனை செய்கிறார்கள், அப்பெட்டிக்குப் பின்னால் இன்னும் 4 திரைகள் இருக்கின்றனவாம், அங்கு யாருமே போகமுடியாதாம். அந்த ஏழாவது திரைக்குப் பின்னால் என்ன என்ன அதிசயம் உண்டு என்று யாருமே சொல்ல முடியாது. பூசை செய்கிற சமயம் முதல் திரையின் அருகில் நின்று கொண்டு உற்றுக் கவனித்தால் சிங்கள பூசாரிகள் முதல் திரையைக் கொஞ்சம் தூக்கிக்கொண்டு உள்ளே போகிற சமயத்தில் அதன் பின்னால் ஒரு திரையும் அதற்குப் பின்னால் விளக்கு வெளிச்சமும் அந்த இரண்டாவது திரையில் தெரிகிறது. அப்பொழுதுதான் மூன்றாவது திரையில் பெட்டி இருக்கிறதென்று சொல்லமுடிகிறது. அதன் பின்னால் இருக்கும் மற்ற நான்கு திரைக்குள் இருக்கும் அதிசயங்கள் யாருக்குமே தெரியா. அந்த மூன்றாவது திரைக்குப் பின்னால் ஒரு தங்க ஓடு இருக்கிறதென்கிறார்கள். அதற்கு மேல் மண் ஓடுதான் போடப்பட்டிருக்கிறது. அந்த மண் ஓட்டிற்கு அடியில் இருக்கும்படியான தங்க ஓட்டை யாரும் பார்த்ததுகிடையாது. அவ்விடத்தில் 12 வருஷத்திற்கு ஒருதரம் மேற்படி ஓட்டை மாற்றுவது வழக்கமாம். அந்த ஓட்டைப் பிரித்து ஒரே நாளில் மூடிவிடக்கூடிய அவ்வளவு சிறிய கோயில். மேற்படி ஓட்டைப் பிரித்து மூடிவிட்டுக் கீழே இறங்கினால் உடனே அவன் இறந்துவிடுவானாம்; அந்த ஓட்டைப் பிரித்து மூடுகிறவனும் வாயைக் கட்டிக் கொண்டுதான் மூடவேண்டுமாம். அவ்விடத்தில் 12 சிங்கள பூசாரிகள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவருக்குப் பன்னிரண்டு வருஷத்திற்கு ஒரு முறை ஓடுமூட முறைவருமாம். இதுவரையில் ஒவ்வொரு பன்னிரண்டு வருஷத்திற்கு ஒரு முறை கடவுள் கனவில் தோன்றி ஆளை நியமிப்பாராம்; இப்பொழுது ஓடுமூடி 20 வருஷமாகியும் கடவுளுடைய உத்திரவு இல்லையாம். அவ்விடத்தில் நடக்கும்படியான எல்லா விஷயங்களையும் கடவுளுடைய உத்திரவு பெற்றுக் கொண்டுதான் செய்கிறார்கள். ஆனால் கடவுள் அவர்களுக்கு எப்பொழுதுமே காட்சி கொடுத்துக்கொண்டு வருகிறார். ஸ்ரீ கதிரேசர் கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு பிள்ளையார் கோயில் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் ஒரு புத்த கோயிலும், மகாவிஷ்ணு கோயிலும், ஆறுமுக சுவாமி கோயிலும் இருக்கின்றன. இதில் சுண்ணாம்பினால் செய்த விக்கிரகம் வர்ணம் பூசியிருக்கிறது. ஒரு புத்த மதத்தன் இவ்விடத்திலிருக்கிறான்; அவனிடத்தில் ஏதாகிலும் காசு கொடுத்தால் அவ்விடத்திலிருக்கும்படியான ஒரே ஒரு திரையைத் திறந்து காட்டுகிறான். அப்பொழுது மேல் சொன்ன புத்த சுவாமியையும், மகாவிஷ்ணு சுவாமியையும், ஆறுமுக சுவாமியையும் நன்றாகப் பார்க்கலாம்.

இந்தக் கோயிலுக்கு 60 அடி தூரத்தில் ஸ்ரீ தெய்வயானை அம்மன் கோயில் இருக்கிறது. அவ்விடத்திலே மூன்று திரைகள் இருக்கின்றனவாம்.

மது மயக்கம் தானாகத் தேடிக்கொள்ளும் பயித்தியமே தவிர வேறன்று.

முதல் திரையைத் தூக்கிக்கொண்டு அவ்விடத்தில் பூசை செய்பவர் இரண்டாவது திரையில் நாம் கொண்டுபோகும் நைவேத்திய சாமான்களை வாங்கிக்கொண்டு இரண்டாவது திரையண்டையே தீபாராதனை செய்துவிட்டு வருகிறார். அவ்விடத்தில் முதல் திரையில் ஸ்ரீ தெய்வயானை அம்மன் உருவம் வர்ணத்தில் எழுதியிருக்கிறார்கள். அதைத்தான் பார்த்து வணங்கிவிட்டு வர வேண்டும். இவைகள் எல்லாம் ஒரு காம்பவுண்டுக்குள் இருக்கின்றன. பிறகு ரோட்டிற்கு அப்பால் இரண்டு பர்லாங்கு தூரத்தில் ஸ்ரீ வள்ளிநாயகி அம்மன் கோயில் இருக்கிறது. அவ்விடத்திலும் ஸ்ரீ தெய்வயானை அம்மன் கோயில் எப்படி யிருக்கிறதோ அதுபோலவேதான் இருக்கிறது. ஆனால் இதில் முதல் திரையில் ஸ்ரீ வள்ளிநாயகி தினைப்புனத்தில் காவல் செய்வதுபோல் வர்ணத்தில் எழுதியிருக்கிறார்கள். அதைத்தான் பார்த்துவிட்டு வணங்கிவரவேண்டும். இந்தக் கோயிலின் இரு பக்கத்திலும் இரண்டு கோயில்கள் இருக்கின்றன. ஒன்று சிவன் கோயில்; அதிலும் திரைபோட்டிருக்கிறார்கள். அவ்விடத்திலும் ஒன்றும் பார்க்க முடியாது. அந்தத் திரையில் சிவலிங்கம் வர்ணத்தில் எழுதியிருக்கிறார்கள். அதைப் பார்த்துதான் இது சிவன் கோயில் என்று தெரிந்துகொள்ள வேண்டும். மற்ற பக்கத்தில் மகம்மதியருடைய கோயில் இருக்கிறது. அவ்விடத்தில் ஒரு சமாதியுமுண்டு. மற்ற பக்கத்தில் ஒரு அறையில் திரைபோட்டிருக்கிறார்கள். அவ்விடத்தில் எல்லாமே ரகசியமாக இருக்கிறதே தவிர கோயிலில் உள்ளே சுவாமியைப் பார்க்கமுடிவதில்லை. ஆனால் ஸ்ரீ கதிரேசனுடைய பெருமையையும் சக்தியையும் இதில் எழுதமுடியாது. ஆடி மாதம் அமாவாசையிலிருந்து 15 தினத்திற்குப் போகும்படியான யாத்ரீகர் கணக்கிட முடியாது. அவர்களில் பலர் கொழும்புப் பகுதியில் இருப்பவர்களும் யாழ்ப்பாண வாசிகளுமேயாவர். வெறுங் காவடிகளும், பால் காவடிகளும், மச்சக் காவடிகளும் அதிகம்; இக்கோயிலில் மற்றொரு அதிசயமுண்டு. அதாவது யாராவது ஒருவர் அவர்களுடைய நோயோ, அல்லது வேறு எந்தவிதமான வருத்தமோ தீர்ந்துவிட்டால் அவர்கள் கழுத்தை அறுத்துக் கொள்ளுவதாகப் பிரார்த்தனை செய்துகொண்டு அதுபோலவே அவர்களுடைய கோரிக்கை நிறைவேறிய பிறகு பிரார்த்தனை செய்துகொண்டபடி அவர்கள் ஸ்ரீ கதிர்காமப் பெருமான் கோயிலுக்குப் பின்புறத்தில் கழுத்தை வெட்டிக்கொள்ளுவார்களாம். அப்பொழுது கோயிலில் பூசை செய்யும் பூசாரி கொஞ்சம் விபூதியும் ஜலமும் கொண்டுவந்து ஒரு மஞ்சள் துணியைச் சுற்றிக் கொஞ்சம் விபூதியும் ஜலமும் அந்த மஞ்சள் துணியின்மேல் தெளித்துவிட்டு வெள்ளைத் துணியை எடுத்துவிட்டு முழுமையும் மூடி சூடத்தைக் கொளுத்திப் போய்விடுவானும். அதன் பிறகு பிரார்த்தனைக்காரனோடே வந்தவர்களில் ஒருவன் அறுபட்டவன் எழுந்திருக்கிறவரையில் சூடத்தைக் கொளுத்திக்கொண்டே யிருப்பானும். ஒரு நாளோ இரண்டு நாளோ அல்லது மூன்று நாளுக்குள் ஒருவிதமான கஷ்டமில்லாமலும் கழுத்தை அறுத்துக்கொண்ட விடத்தில் யாதொருவிதமான கஷ்டங்கள் இல்லாமலும் எழுந்திருக்கிறானும். இது முக்கியமான அதிசயம்.

உற்சவ காலத்தில் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயிலின் மூன்றாவது திரையண்டை யிருக்கும் பெட்டியை ஒரு பெரிய யானையின் பேரில் வைத்து

---

காது நல்லதைத் தவிர வேறெதையும் அறிவிற் சேர்க்கா வண்ணம் எல்லாவித விஷயங்களையும் கேட்கப் பழகிக்கொள்ளல் நலம்.



ஒன்றாகக் கட்டி அதன் பக்கத்தில் ஒரு சிங்கள பூசாரி வாயைக் கட்டிக்கொண்டு பலகையின் பேரில் உட்கார்ந்துகொண்டு ஊர்வலம் வருவார்கள். அப்பொழுது அவ்விடத்தில் வரும்படியானவர்கள் எல்லாருமே ஒரு சட்டியில் முக்கால் அளவு விபூதி நிரப்பி, அதற்குமேல் சூடத்தைக் கொளுத்திக்கொண்டு அந்த சுவாமிக்கு முன்னால் சுமார் 3000 கற்பூரதீபமும் பின்னால் 2000 கற்பூர தீபமும் காவடிகளும் வரும் காட்சியைப் பார்த்தால் நமக்கு இருக்கும் இரண்டு கண்கள் போதா. அவ்வளவு நேர்த்தியா யிருக்கிறது. தீவட்டி முதலிய விளக்கு வெளிச்சங்களே கிடையா. எல்லாம் கற்பூர வெளிச்சமாகவே இருக்கிறது.

கோயிலுக்குப் பக்கத்தில் மாணிக்க கங்கை என்றொரு நதியிருக்கிறது, அதற்கப்பால் கொஞ்ச தூரத்தில் விபூதி மலை என்ற ஒரு மலையிருக்கிறது. அந்த மலையைக் கொஞ்சம் தோண்டினால் விபூதி வருகிறது. அதற்குக் கொஞ்சம் தூரத்தில் கணேச மலை என்றும், கதிர் மலை என்றும் இரண்டு மலைகள் இருக்கின்றன, கணேச மலையில் ஒரு பிள்ளையார் உருவம் இருக்கிறது. கதிர் மலையில் வேலாயுதம் இருக்கிறது. அந்த வேலாயுதமானது கதிர்காம க்ஷேத்திரம் இந்த இடந்தான் என்று தெரிவிக்கும் பொருட்டு நெடுநாளுக்குமுன் யாரோ ஒரு மகான் அதை மலையின் உச்சியில் நட்டுவித்துவிட்டாராம். அந்த மலை சுமார் 6 மைல் தூரம் இருக்கிறது. அவ்விடத்தில் கொஞ்சம் தூரந்தான் படிகள் இருக்கின்றன. மிகுதி இடம் கொஞ்சம் கஷ்டத்தோடுதான் போக வேண்டும்.

ஸ்ரீ கதிரேசன் கோயிலுக்கு அப்பால் 4 மைல் தூரத்தில் செல்வக் கதிர்காமம் என்று ஒரு இடம் இருக்கிறது. அதில் ஒரு பிள்ளையார் இருக்கிறார். அவ்விடத்திலும் மாணிக்க கங்கை ஓடுகிறது. அந்த நதியில் ஸ்நாநம் செய்து பிள்ளையாரை வணங்கிவிட்டுத்தான் வீடு திரும்பவேண்டும். ஆனால் அங்கு திரைகிடையாது. அவ்விடத்தில் ஓடும்படியான நதியில்தான் மச்சக் காவடிகள் எடுக்கும்படியானவர்கள் மச்சத்தைப் பிடித்துக் காவடி செலுத்தவேண்டியது. அந்தச் செல்வக் கதிர்காமத்திற்கு போகிற வழியில் சூரனுடைய கோட்டை கிலமாக இருக்கிறது. ஆனால் அந்தக் கோட்டையைப் பார்க்குமளவில் சூரர்கள் வாசம் செய்த இடம்போல்தான் தெரிகிறது.

இதுதான் கதிர்காமத்தின் அதிசயம். ஸ்ரீ கதிர்காமத்தில் சுமார் 10 இந்து மடங்களும் 70 சிங்கள வீடுகளும் இருக்கின்றன. இந்த ஆடி உற்சவத்தில் தான் அவ்விடத்தில் இருக்கும் எல்லாரும் ஒரு வருஷத்திற்கு வேண்டிய சாமான்கள் வாங்கிச் சேகரித்துக் கொள்வார்கள். உற்சவ தினத்தில் எல்லா ஊர்களிலிருந்தும் எல்லா தினுசுக் கடைகளும் வரும். என்ன தினுசு சாமான் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம். அவ்விடத்தில் இரண்டு தெருக்கள் தான் இருக்கின்றன. பிறகு எல்லாம் காடுதான். இந்தக் கதிர்காமத்துக்கு அப்பால் ஊரோ கிடையாது.

## கொழும்பு நகரத்தார் கதிரேசன் கோயில்

சுமார் 20-வருஷத்திற்கு முன் புகொழும்பு நகரத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோயிலிலிருந்து வேலை எடுத்துக்கொண்டு போய் கதிர்காம க்ஷேத்திரத்தில் அவர்களுடைய மடத்தில் வைத்து, இந்த

---

எல்லா அம்சங்களிலும் உண்மையான உபதேச மொழிகள் சிலவே.

உற்சவத்திற்கு வரும்படியான எல்லா யாத்ரீகர்களுக்கும் அன்னதானம் செய்வித்து அவ்விடத்திய உற்சவம் கழிந்த பிறகு நகரத்தார் எடுத்துக்கொண்டு போன வேலாயுதத்தை மறுபடியும் கொழும்புக்குக் கொண்டுவருவார்கள். அப்பொழுது போவதற்கு ஒரு மாதம் செல்லுமாம். இப்பொழுது கொழும்பு நகரத்தார் அவ்வளவு தூரம் போவதற்குப் பதிலாக கொழும்புக்கு 3 மைல் தூரத்தில் வெள்ளவத்தை என்கிற இடத்தில் மடம்கட்டிக் கொழும்பு செட்டியார் தெருவிலிருக்கும் அவர்களுடைய ஆலயத்திலிருந்து சுவாமியை நன்றாக அலங்காரம் செய்து ரதத்தின்பேரில் வைத்து எல்லாவிதமான வேடிக்கைகளுடன் அவர்களுடைய சொந்த மடமாகிய வெள்ளவத்தை மடத்துக்குக் கொண்டுபோய் அன்னதானம் முதலியவைகள் நான்கு தினம் செய்வித்து, பிறகு வரும்போது எல்லாவிதமான வாணவேடிக்கைகளுடன் அவர்களுடைய ஆலயத்திற்குக் கொண்டுவந்து சேர்க்கிறார்கள். இது சென்னையில் பவழக்கார தெருவிலிருக்கும்படியான நகரத்தார் புதுக்கோயில் என்றும் பழைய கோயில் என்றும் சொல்லுகிறதுபோலவே இவ்விடத்திலும் இருக்கிறது. ஆனால் சென்னையிலே மாசிமாதத்தில் திருவொற்றியூர் உற்சவத்தில் இந்த நகரத்தாரின் இரண்டு கோயிலிலிருந்தும் சுவாமி ரதத்தில் புறப்பட்டு எப்படி திருவொற்றியூருக்குப்போய் அவர்களுடைய மடத்தில் 4 தினம் தங்கி அவ்விடத்தில் அன்னதானம் முதலியவைகள் செய்து பிறகு வருகிறதோ அதுபோலவே தான் கொழும்பிலும் நடத்துகிறார்கள். ஆனால் சென்னையில் இரண்டு சுவாமிகள் புறப்படுகின்றன. கொழும்பில் இந்த வருஷம் பழைய கதிரேசன் உற்சவம் மறு வருஷம் புதிய கதிரேசன் உற்சவம் இம்மாதிரியாக முறை ஏற்படுத்திக்கொண்டு செய்கிறார்கள்.

கதிர்காம க்ஷேத்திரத்திற்கு வரும்படியானவர்கள் "துணையோடல்லது நெடுவழி ஏகேல்" என்கிற பழமொழிப்படி அது அதிக தூரமானபடியால் ஒரு நல்ல துணையைத் தேடிக்கொண்டுதான் போகவேண்டும்.

## சந்தா நேயர்களுக்கு

நமது "ஆனந்தபோதினி" மாத சஞ்சிகை ஒவ்வொரு தமிழ் மாத முதல் தேதியிலும் எக்காரணத்தை முன்னிட்டும் நிறுத்தப்படாமல் தபாலில் சேர்க்கப்பட்டு வந்தும் சிலர் சஞ்சிகை கிடைக்கவில்லை என்று எமக்கு அடிக்கடி தெரிவிக்கின்றனர். இந்த நண்பர்கள் அந்த அந்த ஊர் போஸ்டு மாஸ்டருக்கு விஷயந் தெரிவித்தால் சஞ்சிகைகள் ஒழுங்காகக் கிடைத்துவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ப-ர்.

நண்பனிடம் அன்பு செலுத்துவது சுவரில் தங்காது திரும்பிவரும் பந்தைப்போலன்றி இலட்சியத்தில் தைக்கும் அம்பைப் போலிருக்கட்டும்.




# ஆதி இங்கிலாந்து.

(T. S. ராஜகோபால ஐயர், A.B., L.T.)

தற்பொழுது நம்மை ஆண்டுவரும் ஆங்கிலேயர்கள் வசிக்கும் நாட்டிற்கு ஆதியில் 'பிரிட்டன்' என்று பெயர் வழங்கியது. அதுபற்றியே ஆங்கிலேயருக்கு 'பிரிட்டானியர்' என்ற மறு பெயர் வழங்குவதும் யாவரும் அறிந்த விஷயம். இங்கிலாந்து என்ற பெயர் காரணப்பெயர் என்பது பின்னர் விளங்கும். ஐரோப்பாக் கண்டத்தின் வடமேற்குப் பாகத்தில் உள்ள இரண்டு தீவுகளில், கீழ்ப்பாகத்தில் உள்ள தீவின் தென் பாதியில் உள்ளது இங்கிலாந்து என்பது. இந்தத் தீவின்மேல் பலதடவைகளில் பல அந்நியர்கள் படையெடுத்தும் குடியேறியும் அவர்கள் எல்லோரும் ஒன்றுபட்டுக் கலந்த ஜனங்களின் பகுதியே தற்காலமுள்ள ஆங்கிலஜாதி.

இங்கிலாந்து சரித்திரக்காரர்கள் தங்கள் தேசத்தின் சரித்திரம் கி. மு. 500-க்கு முன்பிருந்தே தொடங்குகிறதெனச் சொல்லிவந்த போதிலும், உண்மையில் அதன் சரித்திரம் கி. மு. 55-லிருந்து தொடங்குகிறதெனத்தான் கொள்ளவேண்டியிருக்கின்றது. (அதாவது இப்போதைக்குச் சுமார் 2000-வருஷங்களுக்கு முன்பு.) ஏனெனில் கி. மு. முதலாவது நூற்றாண்டில் அப்போதைய உலகத்திலேயே சிறந்த நாகரிக முள்ளவர்களாகவும் சாம்ராஜ்யாதிபதிகளாகவும் இருந்தவர்கள் ரோமானியர்கள். அந்த ரோமானிய தளகர்த்தர்களில் புகழும் கீர்த்தியும் பெற்றவர் ஜூலியஸ் ஸீஸர் என்பவர். அவர் தமது சாம்ராஜ்யத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் திக்கு விஜயம் செய்து "உலகத்தாருக்குத் தெரிந்த ராஜ்யங்கள்" என்று சொல்லப்பட்ட மத்திய தரைக் கடலைச் சுற்றியுள்ள பிரதேசங்களை ஜெயித்துப் புகழடைந்தவர். அவர் தற்பொழுது 'பிரான்ஸ்' என்றும், அப்போது 'கால்' என்றும் வழங்கிய அந் நாட்டு ஜனங்களை வென்று அந்த நாட்டையும் சேர்த்துக்கொண்டு அத்துடன் உலகம் பூராவையும் ஜெயித்ததாக எண்ணி மகிழ்ந்தார்.

அச்சமயம் தாம் முன்பின் கண்டறியாத—உடம்பெல்லாம் நீலச்சாயம் பூசிக்கொண்டிருந்த ஒருவகை நூதன ஜனங்கள் படகுகளில் ஏறி வடக்கு நோக்கிக் கடலில் சென்றதைக் கண்டு திடுக்கிட்டு, அவர்களில்

இறந்தகாலம், எதிர்காலம் இரண்டும் முகம் மூடியிருக்கும். ஆனால் இறந்தகாலம் தரிப்பது விதவையின் முகமூடி. எதிர்காலம் பூண்பது கன்னியினதாகும்.

# தமிழரின் கடவுட் கொள்கை

(பண்டித-ராம சுப்பிரமணிய நாவலர்.)

கடவுள் என்னும் சொல்லைப்பற்றி முதன் முதல் ஆராய்வோம். தமிழர்கட்கு இச் சொல்லே தாம் வழிபடுந் தெய்வத்தைக் குறிப்பதாயிருந்தது. தமிழர்கள் ஆரியர் குடியேற்றத்திற்கு முன்னர்க் கடவுள் வணக்கம், ஒழுக்கம், உயர்வு முதலிய இன்றியும், இருந்தால் அவற்றில் குன்றியும் இருந்தவர்கள் அல்லர் என்பது முன்னை நூல்களில் தெள்ளத் தெளியக் காணக் கிடக்கின்றது. எனவே, தமிழர் தெய்வத்தை எவ்வாறாக வழிபட்டனர் என்பதைக் குறித்து ஆராய்வதும் பொருத்தமே யாகும். கட—உள் என்று பிரிவு செய்யப்படும். கட என்னுஞ் சொல் கடத்தல் என்பதன் முதனிலை. உள் என்பது விகுதி. செய்யுள், இயவுள் முதலியவற்றிலும் 'உள்' விகுதி வருதல் காண்க. எனவே, கடவுள் என்னும் கிளவி கடந்து நிற்பது என்னும் பொருட்டு. அற்றேல், யாவற்றைக் கடந்து யாண்டு நிற்பது எனின், மனம், வாக்கு, பற்று முதலியவற்றைக் கடந்து யாண்டும் இலங்குவது என்க. கடவுள் எல்லாம் கடந்து நிற்பவர் என்பதும் யாண்டும் ஒருப்பட விளங்குபவன் என்பதும் தமிழர் உணர்ந்துகொண்ட கருத்துக்கள் என்பது பெறப்பட்டது. கடவுள் என்பது தனித் தமிழ்ச் சொல்லாகலின், இப் பொருண்மையில் சிறிதும் ஐயமின்று. ஆயின், கடவுளைக் குறித்து நம் முடிபுக்கு வரல் வேண்டுமாயின், தமிழர் கடவுளின் இயல்பை நன்கு ஆராய்ந்தவர்களாதல் வேண்டும். ஒன்றை ஆராய்ந்து உணர்வதற்கு முன்னர் அதைக் குறித்து யாதும் சொல்லவியலாது. எனவே, அங்ஙனம் ஆராய்வழி, தமிழர் கடவுளை நன்கு ஆராய்ந்தவர்கள் என்பது போந்தது. ஆயின், எவ்வாறு அவர்கள் கடவுளை ஆராய்ந்தார்கள்? காணவும் ஒருவர் கூறக் கேட்கவும் படாத கடவுளைக் குறித்து எங்ஙனம் ஆராய்ச்சி இயற்றல் இயலும்? கடவுள் மன வாக்குக்கட்கு எட்டாதவர் என்னும் முடிந்த முடிவை வெளிப்படுத்தத் துணிந்தவர் அக்கடவுளை உணருமுறையான் உணர்ந்தவரா யிருத்தல்வேண்டும். ஆகவே, தமிழர் தம் உட்கருவிகளை அறவே அடக்கித் தனிப்பெரும் அமைதி நிலைமையை எய்தி அதன் வழித்தாகக் கடவுளை உணர்ந்தவர்கள் என்பதில் ஐயப்பாடு இல்லை. நிற்க.

கடவுளை உணர்வது என்றால் என்ன? அதிலும் பல்வேறான கருத்துடையார் உளர். சிலர் சைவ நெறிக்கண் நின்று சிவத்தை அடைவதே கடவுளை அடையும் நெறி என்றும், தமிழர் அம்முறையே கடைப் பிடித்தனர் என்றும் கூறித் தமிழர் சமயம் சைவசமயம் என்று துணிப. ஈண்டு, தமிழர்க்குப் பிறிது சமய மின்றோ எனக் கடாவுகின்றோம். வேதாந்த நெறி தமிழர்க் இல்லை எனச் சிலர் கூறுவர். வேதம் ஆரிய நூல், அந்த வேதத்தின் அந்தத்தைப்பற்றித் தமிழர்க் கென்னை கவலை எனச் சிலர் கழறுவர்.

கடவுளுண்மையைக் கணிதசாஸ்திர நிரூபணத்திலும் அதிகமாய் நிரூபித்துக் காட்ட, பரிபூரண நிலையில் ஆன்மாவிற்குரிய சிறிய அவாவே போதும்.



இவை முதலிய ஒரு தலைப்பட்டவற்றின் தடிப்பால் எழுந்த கருத்துக்கள் என்றே நாம் துணிதும். வேதம் வடமொழியா யிருப்பதனால் அது தமிழர்க் குரித்தல்ல, அது தமிழர் கையாண்டது மல்ல என்று புதுக்கிவிடலாம். ஆயினும், தற்போது வேதாந்தம் என்னும் உயர் நெறியை அவர் மறுத்தனர் என்று கூறவியலாது. தமிழர் சைவ நெறியைக் கொள்ளவில்லை எனலும் பொருந்தாது. மக்கள் எல்லாரும் எப்போதும் ஒரே கருத்துடையரா யிருப்பதில்லை. தற்போது தமிழர்க்குள் சைவ நெறியில் நிற்பாரையும் வேதாந்த நெறியில் நிற்பாரையும் காண்கின்றோம். இஃதேபோன்று தமிழ் மக்கள் அக்காலத்தும் சைவ நெறிக்கண்ணும், வேதாந்த நெறிக்கண்ணும், புத்த நெறிக்கண்ணும், பிற பல நெறிகளினும் நின்று ஒழுகி யிருத்தல் கூடும். ஆரியருடைய சைவ மத நூல்களும், வேதாந்த நூல்களும், புத்தனுடைய பௌத்த நூலும் இவை போன்ற பிறவும் முதலியன வெளிப்போந்த பின்னரே தமிழர் அவ்வந் நெறிகளைக் கடைப்பிடித்தனர் என்பது தவறு. புத்தமதக் கோட்பாடுகளை நூல்களிற் பொறிக்கு முன்னரும் பரப்பு முன்னரும் அவை இல்லாது போகவில்லை. வேதாந்தக் கோட்பாடுகளை ஆரியர் ஈண்டுத் தம் நூல்களிற் பொறிக்கு முன்னர் வேதாந்தம் உலகில் இல்லை என்று சொல்வதும் தவறு. உண்மைகள் எப்போதும் உள. அவற்றைச் சிலர் சில ஞான்று வெளிப்படுப்பதனால் அவை புதியதுபோலத் தோன்றுகின்றன. அதுவே உண்மை. ஈண்டு ஒரு வினா எழலாம். தமிழர்க்கு வேதாந்தம் உடன்பாடாயின் இன்று ஒரு வேதாந்த நூலாயினும் தமிழில் உளதோ? என்பது. இயல்பாகப் பலர், கருத்துக்களை உன்னாது பொருள்களையே நோக்குகின்றமையால்தான் இத்தகைய கேள்விகள் உண்டாகின்றன. சில சைவர்கள் சைவமே தமிழர் சமயம் எனக் கூறுகின்றனர். ஆயின், இன்று தனித் தமிழில் ஏதேனும் சைவநூல் உளதோ எனின், முன்னர் உண்டு இஞ்ஞான்று அவை எங்ஙனமோ ஆரியம் கலந்துளவாயின என்பர். அவ்வாறு நாம் ஈண்டுக்கூற வந்தேமில்லை. ஒரு நாட்டில் அந்நாட்டினர்க்குரிய ஒழுக்க நிலைகள் அந்நாட்டுக்குரிய மொழிகளிலேயே எழுதப்படுமன்றிப் பிற மொழிகளில் எழுதப்படமாட்டா. ஆயினும், பிறமொழிகள் அந்நாட்டில் புகுந்து பரவுமாயின், அவற்றைக் கற்றோர் தந்நாட்டு வழக்க வரலாறுகளைத் தாம் கற்ற பிற மொழிகளிலும் புனைய முற்படுவர். ஒரு சிறு எடுத்துக்காட்டு ஈண்டுத் தருகின்றோம். நம் தமிழ் நாட்டில் வதியும் பண்டைத் தமிழர் குடியிற் பிறந்திலங்குவோர் பலர் இஞ்ஞான்று தம் நாட்டுக்குரிய ஒழுங்க வழக்க வரலாறுகளை ஆங்கிலத்திலும், தெலுங்கிலும், மலையாளத்திலும் பிற பாஷையிலும் வெளியிடுகின்றார்கள். வட நாட்டிலிருப்பவர்களும் தம் கருத்துக்களைத் தம் தாய்மொழியி லன்றி ஆங்கிலம் முதலிய மொழிகளிற் புனைகின்றார்கள். இதன் காரணமென்? அவர்க்குத் தம்தாய் மொழியின்மீதுள்ள பயிற்சிக் குறைவு, பற்றின்மை, தாய் மொழியின்மாட்டு அரசாங்க ஆதரவின்மை முதலியன அதற்குக் காரணமாகலாம். அஃதேபோலத் தமிழருடைய ஒழுகலாறுகளும் பிற்காலத்தும் பல வடமொழி நூல்களிலும், பல வடசொற் கலந்த தமிழ் மொழியிலும் அமைவனவாயின. வேதாந்தம், சைவம் என்னும் இரு நெறிகளும் தமிழர்க்கன்றிப் பிறர்க்கு உடன்பாடில்லை என்று கூறுதலும்

சுவையறிவு இல்லாத கற்பனா சக்தியைப்போலப் பயங்கரமான தொன்றுங் கிடையாது.

பொருந்தாது. ஆதலால் ஆரியரும் சைவம், வேதாந்த முதலிய நெறிகள் பற்றிய நூல்கள் வரைந்திருக்கலாம். அவ்வாறு வரைந்தது தமிழர்க் கிழுக்குமன்று. இஞ்ஞான்று தமிழர் தம் ஒழுகலாறுகள் ஆங்கில நூல்களில் அமைந்து விளங்குகின்றன. இன்னோர் இஞ்ஞான்று அவையெல்லாம் ஆங்கில நூல்கள், அல்லது ஆங்கிலம் கலந்த நூல்கள் எனக்கூறி அவற்றைத் தள்ளிவிடுதல் சீரிதாகாது. அவ்வாறு செய்வது பொறாமையும் அறியாமையுமேயாய் முடியும். அவற்றைத் தமிழ்ப்படுத்துக் கற்கவேண்டும். உடல்கள் போன்ற மொழிகளின் வேற்றுமையைக் கருதி உயிர்கள் போன்ற கருத்துக்களைப் புறக்கணித்தல் சிறிதேனும் அறிவுடைமையன்று. அவ்வாறாயின் தமிழர்களுடைய ஒழுகலாறுகளைச் சொல்கின்ற தனித் தமிழ் நூல் ஒன்றாயினும் இல்லாத தென்ன? எனச் சிலர் வினவலாம். தமிழர்களின் ஒழுகலாறுகளைக் குறிக்கும் பண்டை நூல்கள் இன்றும் சில உள. அவற்றில் அவர் பல சமயத்தாரா யிருந்தனர் என்பதைக் காட்டப் பல தொடர்களும் உள்ளன. நாளடைவில், ஆரியம் புகவே, தமிழ் ஆரியக் கலப்பின்றி இயங்க இயலாதாயிற்று. அதன் பின்னரே, தமிழர்களுடைய மத நூல்களும் ஆரியம் கலந்த தமிழில் அமைக்கப்படலாயின. உற்று நோக்குமிடத்து, அத்தன்மை தமிழ் மொழிக்கு ஓர் குறைவு என்றே கொள்ளத்தகும். இன்னும் சிலநாளில் நம் தமிழ்மொழி ஆரியத்தோடு நில்லாது பிற எம் மொழிகளோ டெல்லாம் கலந்துலாவப் போகின்றதோ நாம் அறியோம்.

தமிழர் கடவுளை வழிபட்டமுறை எப்படி எனச் சிறிதாராய்தல் வேண்டும். சிலர் தமிழர்க்குக் கடவுள் வழிபாடு இயல்பாக இல்லை, எல்லாம் பார்ப்பனர் சூழ்ச்சியால் தமிழர் பிழைபட உணர்ந்த வழிபாட் டொழுக்கங்களே எனப் புகல்கின்றார்கள். இதனால், தமிழர்க்குக் கடவுள் ஒருவர் உண்டு என்ற உண்மையை அறியும் அறிவுகூட இல்லை என்று அவர்கள் முடிவுகட்டிவிட்டனர். தமிழர்க்கு உயர்வுகூற முற்பட்டுப் பழிபகரும் திறத்தினரை நாம் கூறுவது யாதுமில்லை. கோயில்களில் பார்ப்பனர் புகுந்தமையால் அவை பார்ப்பனச் சூழ்ச்சியால் கட்டப்பட்டன என்பது உண்மையாகாது. ஆண்டுச் 'சிவா' என வடமொழி விளம்புவதால் இறைவன் பார்ப்பனருடைமையு மல்லன். சிவலிங்கம் என்பது வடசொல் லாகலின் தமிழர் அதனை வழிபடல் தவறுமன்று. இவைபோல்வன வெல்லாம் கால வேறுபாட்டால் உண்டான மாறுதல்களே. தமிழ் நாட்டிற் கட்டப்பட்ட கோவில்கள் தமிழர்களின் உடைமையே. ஆனால் இறைவனிடத்தும் கடவுள் வழிபாட்டினிடத்தும் யார்க்கும் ஒத்த உரிமையுண்டு. சிவம், சிவலிங்கம், சுப்பிரமணியன், கணபதி முதலிய ஆரியச் சொற்கள் தமிழர் ஆரியரை ஆதரிக்கத் தொடங்கிய பின்னர் ஈண்டுப் புகுந்தனவேயாம். அதன் முன்னர் அவற்றிற்குப் பதிலான தமிழ்ச் சொற்கள் இருந்திருக்கலாம். இல்லை என யாரும் வரையறை கூறுதல் இயைபு அன்று.

தமிழர் ஆரியரை ஆதரிக்கத் தொடங்கியதுகொண்டு ஆரியர் தமிழரை இழிவாகக் கருதுதல் ஆகாது. ஆரியர் தம்மால் ஆதரிக்கப்பட்டமைகொண்டு தமிழர் ஆரியரை உயர்வாகக் கருதுதலும் வேண்டுவதில்லை. ஆரிய நூல்கள் பலவற்றில் உலகநெறிக்குப் பொருந்தாத ஒழுக்கங்கள் புகலப்பட்டுள்ளன.

சிலர் தங்கள் வாழ்நாள் முழுவதும் படிக்கின்றனர். இறப்பதற்குள் எல்லாவற்றையும் கற்றுத் தீர்த்துவிடுகின்றனர்—யோசனை செய்வதைத் தவிர.



அவை அக்காலத்துக்குப் பொருத்தமாயுள்ளன என்று தற்கால ஆரியர் உரைக்கின்றனர். அவை எக்காலத்துக்கும் பொருத்தமன்று என்பதே எமது கொள்கை. அத்தகைய கீழான கொள்கைகள் தமிழர் தம் மேலான கொள்கைகளுக்குச் சிறிதேனும் ஈடாமோ? எனினும், ஆரியர் தமிழரால் ஆதரிக்கப்பட்டமை நோக்க, ஆரியர் தமிழருடைய சேர்க்கையால் தமது இழிந்த ஒழுக்கங்கள் பலவற்றை அகற்றிக் கொண்டதாகத் தெரிகின்றது. தமிழர் தம் சீரிய ஒழுக்கத்தோடு ஒத்த பார்ப்பனர்க்கே சிறிது ஆதரவளித்தனரன்றி மற்றை ஆரியர்க்கல்ல. தமிழர் எப்பார்ப்பனர்க்கு ஆதரவளித்தனர்? என்பது ஓர் வினா. பார்ப்பனர், ஆரியர், பிராமணர் முதலிய சொற்கள் அனைத்தும் ஒரு தரத்தார்க்கே உரியனவல்ல. ஒழுகலாறு கருதியே அவை அமைக்கத்தகும். தற்போதைய பார்ப்பனருள் எத்துணையோபேர் பள்ளர், பறையரினும் இழிவாக நடக்கின்றார்கள். அவருள் பலர் உண்மை அந்தணராகவும் ஒழுகுகின்றனர். ஆகலின், பெயர் உண்மையா, ஒழுக்கம் உண்மையா என்பது ஈண்டு ஆராயத்தக்கது. உண்மையான பிராமணனல்லாதவன் பிராமணன் என்னும் பெயரை விரும்புவானேன்? உண்மையான சூத்திரனல்லாதவன் சூத்திரன் என்னும் பெயரை விரும்புவானேன்? உண்மை அந்தணனைப் பிராமணன் என்றும் உண்மைச் சூத்திரனைச் சூத்திரன் என்றும் அழைத்தால் என்ன? ஒழுக்கத்திற்குரிய சிறப்பு அளித்தே தீர்தல் வேண்டும். உண்மைப் பார்ப்பனனைப் பாப்பனன் என்று கூறத் தற்காலத் தமிழர் பின்னிடைவார்கள் போலும். அது பொறாமையே. யார் யாராயினும் அவரவர்க்குரிய பெருமையை அளித்தலே மாண்பும் பெருந்தன்மையுமாம்.

இப் பெருண்மைபற்றிய பிறவற்றை மேல் ஆராய்வோம். இதுகாறும் ஆராய்ந்தவாற்றான் முடிவுபோகிய பொருள்களை வாசகர்கள் ஒவ்வொருவரும் உள்ளூற உணர்ந்து வேற்றுமையின்றி ஒன்றுபட்ட வாழ்வெய்த முயற்சிப்பார்களாக.

## வீண் செலவு.

ஏழை இந்திய மக்களின் தலையில் வரிப்பளுவைச் சுமத்தி வசூலிக்கும் பணத்தை அரசாங்கத்தார் எப்படிச் செலவு செய்கின்றனர் என்பதைப் பாருங்கள்.

| | கோடி |
|---|---|
| இராணுவ இலாகாச் செலவு | 55 |
| மற்ற சிவில் இலாகாக்களில் உத்தியோகஸ்தர் சம்பளம்—படி முதலியவை | 70 |
| கட்டிடங்கள் | 16 |
| சர்க்காரால் வாங்கப்பட்ட கடன்களுக்கு வட்டி | 20 |

ஜனங்களின் நன்மைக்கான துறைகளில் செலவு செய்யும் தொகை மிகவும் சொற்பம். வீண்செலவுதான் அதிகம்.

—ச. ரா.

மொழிகள் எண்ணங்களுக்கு எப்படியோ அப்படியே நற்குணத்திற்கு உபசாரம்.




# திலகரின் தீரமொழிகள்

(டர்பன், சரஸ்வதி சபைத்தலைவர். திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.)

சுதந்தரம் எனது பிறப்புரிமை. அவ்வுணர்ச்சி என்னிடத்திலிருக்கும் வரை நான் கிழவனல்லன். எந்த ஆயுதமும் என் சுதந்தர உணர்ச்சியைச் சிதைவு படுத்தாது. எந்த நெருப்பும் அதை எரிக்காது. எந்த நீரும் அதை அவிக்காது. எந்தக் காற்றும் அதை உலர்த்தாது.

கடவுள் ஆணை பெரிது. மனிதனுடைய முயற்சியினால் அவன் ஆத்மா விகசிக்குமென்று அவர் திட்டம் செய்திருக்கின்றார். ஆகவே எல்லா முயற்சிகளினாலும், மனிதன் முன்னேற்றம் பெறவேண்டும். ஆகவே மனிதர்கள் பொறாமை யற்றவர்களாகவும், சுயநல மற்றவர்களாகவும் இருந்து காரியங்கள் செய்யவேண்டும்.

நான் என் வாலிபப்பருவத்தை வீணாக்க விரும்பமாட்டேன். அது எனக்கு சிரேஷ்டமானது. தேசசேவைக்குச் செலவழியாத அந்த வாலிபப் பருவ மிருந்தென்ன ? போயென்ன ? ஆகவே வாலிபர்களே எழுந்து சேவை செய்ய முற்படுங்கள்!

அடிமை வாழ்வை விரும்புகிறவர்களுக்கும் சோம்பேறி வாழ்க்கையில் மூழ்கி யிருப்பவர்களுக்கும், சுதந்தரவாழ்க்கை லாயக்கல்ல. அவர்களுக்குக் கடவுள் உதவி செய்யமாட்டார். எந்தச் சமூகம் நிமிர்ந்து நடந்து சுதந்தர வாழ்கையில் பிரியப்படுகின்றதோ அந்தச் சமூகம் ஒன்றே கடவுளின் ஆசீர்வாதத்தைப் பெறும். அந்தச் சமூகம் ஒன்றே உயிர்பெற்று வாழ யோக்கியதை யுடையது.

இந்திய சமூகத்தின் ஜீவநாடி தளர்ந்து போகாமல், பாதுகாக்க வேண்டுவது இந்தியத்தலைவர்களுடைய கடமையாகும். தலைவர்கள் விருப்பு வெறுப்பில்லாமல் தேசசேவை செய்வது அவசியம். இந்தியர்களின் உரிமைகளைப் பாதுகாத்து வருங்கால், சந்ததியார்களை ஆண்மைத்தன முள்ளவர்களாகச் செய்வது அவர்களது முக்கிய கடமைகளாக இருக்கவேண்டும்.

இந்தியா சுயராஜ்யதாகம் கொண்டிருக்கின்றது. சுயராஜ்யதாகம் சீக்கிரம் தணிய வேண்டுமானால், இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர்கள் ஒற்றுமை

---

உன் தகுதி பிறர்க்குத் தெரியவேண்டுமானால் பிறர் தகுதியை நீ அங்கீகாரம் செய்.



யாகவும், உறுதியாகவும், ஒன்றுபட்டு வாழவேண்டும். இந்தச் சூட்சமத்தை இந்து முஸ்லீம் கிறிஸ்தவர்களுக்குத் தெரிவிக்க வேண்டியது தேசியப்பத்திரிகைகளின் முக்கிய கடமையாகும்.

இந்தியர்கள் சுயராஜ்யப் போராட்டத்தில், தளர்ச்சி யடைவதற்குக் காரண மென்ன? அவர்களுக்குத் தத்தம், மதப்படிப்பும், மதபோதனையும், மத வைராக்கியமும் இல்லாததேயாகும். இந்தியர்கள் அவரவர் மதங்களின் திட்டப் பிரகாரம், வாழ்க்கையை அமைத்துக்கொண்டு தேசசேவையில் ஈடுபட்டால், சுயராஜ்யப் போராட்டம் தளர்ச்சிபெறா தென்பது நிச்சயம்.

தைரியமும், ஊக்கமும், உண்மை பேசும் தன்மையும், உறுதியும் இல்லாதவர்கள் சுயராஜ்யப் போராட்டத்தில் தீவிரமாக இறங்கி வேலை செய்யாம லிருப்பது உத்தமம். அக்குணங்களுக்கு மாறாக விருப்பவர்கள் சுயராஜ்யப் போராட்டத்தில் இறங்கி விட்டால் எல்லாம் கெட்டு, விடும். தேசத்திற்குக் கெட்டபேர்தான். ஆகவே தலைவர்கள் ஜாக்கிரதையாக விருக்கவேண்டும்.


"ஆனந்தபோதினி" மாத சஞ்சிகை

தெலுங்குப் பதிப்பு.

——(0)——

நமது "ஆனந்தபோதினி" தமிழ்மொழியில் மாதப் பதிப்பும், வாரப்பதிப்பும் வெளிவந்து தொண்டாற்றி வரும் விஷயம் எல்லாரும் நன்கு அறிந்ததே. "ஆனந்த போதினி" தெலுங்கு மொழியிலும் ஒவ்வொரு இங்கிலீஷ் மாத முதல் தேதியில் வெளிவருகின்றது. இப்பொழுது அதற்கு இரண்டாவதாண்டு நடைபெறுகிறது. தமிழ் நேயர்கள் தங்களுக்குத் தெரிந்த தெலுங்குப் பயிற்சியுள்ள நண்பர்களுக்கு இவ்விஷயத்தைத் தெரிவித்துச் சந்தாதாரர்களாகச் சேரும்படி தூண்டுமாறு வேண்டுகின்றோம். மாதிரி காபி இனும்

வருட சந்தா தபாற்கூலி உள்பட

உள் நாடுகளுக்கு ... ரூபா 1—0—0

வெளி நாடுகளுக்கு ... ,, 1—4—0

மானேஜர்.


---

உத்தம செயல்களை மனமுவந்து போற்றுதல் ஓரளவு அவைகளை நம்முடைய சொந்தமாக்கிக் கொள்வதாகும்.

# அழிப்பான் கதைத் திரட்டு.


(பி. என். சுப்பனுச்சாரி.)

1. கல்லிலே மலரும்பூ, காசிநீர் ஆடும்பூ, எல்லோரு முடிக்கும்பூ என்னபூ?
2. ஒரு வாலுள்ள பக்ஷி இரையெடுக்கும் இரை தின்னுது.
3. காலாறு சிறகு இரண்டு கழுத்து மயில் கூழை மேலாடிப் பறக்கும் பக்ஷி என்ன பக்ஷி?
4. செக்கச் செவந்திருக்கும்,செவ்வாழைபோலிருக்கும், வாலு முளைத்திருக்கும், வந்திருக்கும் சந்தையிலே.
5. கொத்துக் கொத்து மாம்பழம், கோடாலி மாம்பழம், மதுரைக்கும் போனுலும் வாடாத மாம்பழம்.
6. கரையிலேபோகிற கன்னிமார் பெண்களுக்கு முதுகிலே மூன்று சுழி.
7. செங்கலடுக்கச் செவந்திபூக்க—இரத்தினம் பதிக்கப் பெட்டிதிறக்க.
8. முட்டையிடும், குஞ்சு பொறிக்கும், மூந்நூறு நாள் அடைகாக்கும், சட்டை சுழற்றும், தலை சுழற்றும் சங்கரன் கோயில் பாம்புமில்லை.
9. ஆனை அசைந்துவர, ஐமினகு சிந்திவர, கோட்டாற்றுப் பெண்களெல்லாம் கூடிக்குலவையிட.
10. கிணற்றைச் சுற்றிச் சிற்றகத்தி.
11. காடெல்லாம் மேய்ந்துவரும் கண்டலப் பசு, கண்ட நீர் குடியாத வெண்டலப் பசு.
12. கட்டிக் காளை, கிட்டிக் கொம்பு, கிட்டப்போனுல் முட்டித்தள்ளும்.
13. கருத்த சட்டைக்காரன் காவலுக்குக் கெட்டிக்காரன்.
14. இராசகிரிதேசகிரி வாசல் பதினுயிரம், துரைமார் வீட்டில் தூண் பதினுயிரம், போகத் தெரியும் வரத் தெரியாது.
15. அத்துவானக் காட்டில் அத்தான் குடைபிடித்து நிற்கிறுர்.
16. மண்ணுக்குள்ளிருக்கும் மாயாண்டி உரிக்க உரிக்கத் தோலாண்டி.
17. கத்திபோல இலைதளிர்க்கும், கவரிபோல் பூப்பூக்கும், தின்னப் பழம் பழுக்கும், தின்னுத காய்காய்க்கும்.
18. அங்கேயு மிங்கேயும் சிலுப்புவான் கதவிற்குப் புறத்தே கிடப்பான்.
19. ஆயிரம் சரக்கில் அக்கா என்கிற சரக்கு என்ன சரக்கு?
20. ஏழேழும் பதினுலு சிறகிரண்டாட, இருபுறமும் எண்ணிறந்த முத்து மயிலாட, வராத பெண்களெல்லாம் வந்து விளையாட.
21. ஓடோடும் சங்கலி, உருண்டோடும் சங்கிலி, பள்ளத்தைக் கண்டால் பாய்ந்தோடும் சங்கலி.
22. ஒரு நெல்லுக் குத்தி ஊரெங்கும் உமி.

187514




"அநுதாபம்"



நண்பர்:—"உனது கார் ஒரு மரத்தில் மோதி நொறுங்கிவிட்டதாகக் கேள்விப்பட்டேன், உண்மைதானு?"

மற்றவர்:—"துண்டு இரண்டாகி விட்டது! நான் தப்பிக்கொண்டது தெய்வச்செயல்!"

நண்பர்:—"அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன்."

* * *

பிச்சைக்காரன்:—"ஐயா! தயவு செய்யவேணும்! நானும் நல்ல காலத்தைப் பார்த்தவன். நன்ருய் அநுபவித்தவன்!"

பிரபு:—"இப்பொழுது காலத்தின் சீதோஷ்ண நிலைமைகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்க எனக்கு நேரமில்லை."

* * *

எஜமானன்:—(புதிய வேலைக்காரப் பையனை நோக்கி) "யாராவது என்னைக் கேட்டால் நான் உள்ளே இல்லை என்று சொல்லிவிடு! ஜாக்கிரதை! (அரைமணி நேரத்திற்குப் பிறகு) ஏண்டா மடையா? நான் மணி அடித்தது உன் காதில் விழவில்லையா?"

பையன்:—"விழுந்தது எஜமான்! நீங்கள் உள்ளே இல்லை என்று நினைத்துவிட்டேன்.

* * *

சிறு பையன்:—"என்ன அம்மா! நம்ம குழந்தைக்கு உன்னுடைய கண்களும் அப்பாவின் மூக்கும் பொருந்திவிட்டன என்று சொன்னுயே—இல்லையா?"


தாய்:—"ஆமாம் கண்ணே! அதற்கென்ன இப்போது?"

சிறுபையன்:—"நீ நன்ருய்க் கவனி! நம்ம தாத்தாவின் பல் அதற்கு இப்பொழுது முளைத்திருக்கிறது."

---

ஒருவன் மனப்பூர்வமாகக் கடவுளை நேசித்து, தன் அண்டை அயலாரைத் தன்னைப்போலவே கருதிவந்தால் அவன் தன் கடமைகளையெல்லாம் பூர்த்தி செய்தவனுவான்.

### அதிர்ஷ்டம்.



"நேற்றைய குதிரைப் பந்தயத்தில் உனக்கு நல்ல அதிர்ஷ்டந்தானா ?"

"நான் அதிர்ஷ்டசாலி என்றே தான் சொல்லிக்கொள்ளவேணும். கடைசிப் பந்தயம் முடிந்தவுடன் ஜேபியைத் தேடினேன்—ஆறணாக் கிடந்தது. அதனால் நான் நடந்துவரவேண்டிய துரதிர்ஷ்டம் நேரவில்லை."


* * *

புருஷன்:—"இன்றைக்குத் தேதி 15. என் கடிதத்தில் 20-ம் தேதி போட்டிருக்கிறாய்?"

மனைவி:—"உங்களிடம் கொடுத்துத் தபாலில் போடச் சொல்லலாம் என்று எண்ணி அப்படிச் செய்தேன்."

* * *

### "மணி"



திருடன்:—(ஒரு தனிமையான வழியில்) "இப்பொழுது மணி என்ன ஆயிற்று ஐயா?"

ஒருவர்:—(தங்க வாட்சைப் பார்த்துவிட்டு) "மணி ஆறரை"

திருடன்:—"அது எனக்கு ஞாபகம் இருக்காது—தயவுசெய்து அதை என் கையில் கொடுத்துவிடுங்கள்"

* * *

தகப்பனார்:—"ஏண்டா லக்ஷ்மியின் தலைமயிரைப் பிடித்து இழுத்தாய் ?"

பையன்:—"நான் இழுக்கவில்லை அப்பா! நான் பிடித்துக்கொண்டிருந்தேன்—அவள்தான் இழுத்துக்கொண்டாள்"

* * *

பேச்சுக்கு விலை இல்லை—ஒரு வக்கீலிடம் மாத்திரம் போகாதிருந்தால்.

* * *

மாஜிஸ்ட்ரேட்:—"திருடனது கை உமது ஜேபிக்குள் நுழையும்போது உமக்குத் தெரியவில்லையா ?"


மறதியுள்ள ஆசிரியர்:—"தெரிந்தது !—ஆனால் அது எனது கை என்று நினைத்து விட்டேன்."

---

சத்தியம் என்பது ஒன்றுதான். ஆண்டவன் அதைக் காலத்திற்கும் தேசத்திற்கும் ஏற்றவாறு வழங்குகிறார்.



### "வியாபார ரகஸியம்"



ஜட்ஜு:—"அந்த வீட்டில் எப்படித் திருடினாய் என்பதைச் சொல் பார்க்கலாம்."

திருடன்:—"நான் சொல்லமாட்டேன் எஜமான்! அது ஒரு பெரிய வியாபார ரகஸியம் !"

* * *

"நம் கண்ணபிரான் இன்னும் வெகு காலம் ஆஸ்பத்திரியிலேயே இருக்க வேணுமாம்"

"ஏன் ? நீ டாக்டரைப் பார்த்தாயா?"

"இல்லை ! நர்ஸைப் பார்த்தேன். அவள்தான் சொன்னாள். வேறு யாரும் ஒன்றும் சொல்லவில்லை"

* * *

"குழந்தை அழுதால் நீ ஏன் தாலாட்டிப் பாடக்கூடாது ?"

"பாடினேனே ! ஆனால் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் குழந்தை அழுவதையே சகித்துக் கொள்கிறோம்—உன் பாட்டை நிறுத்திவிடு என்றார்கள்."

* * *

ஒருவன்:—"காதல் விஷயத்தில் நல்ல அதிர்ஷ்டம் உள்ளவனை நீ என்ன என்று அழைப்பாய் ?"

மற்றவன்:—"பிரம்மச்சாரி"

* * *

ஒருவன்:—(சினிமாவில்) "அதோ அந்த நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் பெண் அரைமணி நேரமாய் என்மேல் போட்ட கண்ணை எடுக்கவில்லை—கூர்மையாகப் பார்த்துக்கொண்டே இருக்கிறாள்."

நண்பன்:—"அது உனக்கு எப்படித் தெரிந்தது ?"

* * *

"உனது பெண்டாட்டி மிகுந்த யோசனை உள்ளவள் என்று தெரிகிறது"

"சந்தேகம் இல்லை. நான் வீட்டைவிட்டு வெளிக்கிளம்பினால் போதும்—எல்லாவிதமான யோசனைகளும் அவளுக்குத் திடீர் திடீரென்று கிளம்பி விடுகின்றன."

* * *

குற்றவாளி:—"என்னைக் கோயமுத்தூர் ஜெயிலுக்கு அனுப்பிவிடுங்கள்"

ஜட்ஜு:—"ஏன் ?"

குற்றவாளி:—"என் தகப்பனார் அங்கே இருக்கிறார்"

---

அகங்காரம் அஸ்தமித்துவிட்டால் அன்பு தானே உதயமாகிறது.

## "துக்கம்"



பழகியவர்:—" அம்மா! ஊரில் உன் மாமியார் இறந்து போனதாகக் கேள்விப்பட்டு வருத்தப்படுகிறேன்"

மருமகள்:—("அதிக ஆச்சரியத்துடன்—ஆனால் மனதுக்குள் மிகுந்த குதூகலத்துடன்) ஐயோ! என் மாமியாரா?" எப்போது? யார் சொன்னார்கள்?

பழகியவர்:—"நேற்றுத்தான் என் வீட்டுக்காரி சொன்னாள். உன் மாமியாரின் பேர் பார்வதிதானே?"

மருமகள்:—(அதிக ஏமாற்றத்துடனும் வருத்தத்துடனும்) இல்லையே. அவர்கள் பெயர் பரமாயி அல்லவா?"

***

முதலியார்:—"எங்களோடு கூட உட்கார்ந்து நீங்கள் எப்பொழுது சாப்பிடப்போகிறீர்கள்?"

செட்டியார்:—"உங்களுக்கு ஆக்ஷேபணை இல்லையானால் இப்போதே சாப்பிடுகிறேன்."

***

மனைவி:—"நீங்கள் குடிக்கிற காப்பி விஷம்போலவே வேலை செய்கிறது."

புருஷன்:—"அப்படியானால் பாவாயில்லை! இனி எனக்கு ஒன்றும் தொந்தரவே இல்லை."

***

பிரசங்கியார்:—"நாம் யாருக்கேனும் ஒன்றைத் தானம் செய்தால், நமக்கு இருமடங்கு திரும்பி வருகிறது, உண்மைதானே?"

சபையில் ஒருவர்:—"உண்மைதான் ஐயா. என் மகளை மாமியார் வீட்டுக்கு அனுப்பினேன். இப்பொழுது மகளும் மருமகனும் வந்து என் வீட்டிலேயே குடியிருக்கிறார்கள்."

***

குப்பன்:—"நான் தோற்றுப்போனால் என் தலையையே உடைத்துக் கொள்ளுகிறேன்."

சுப்பன்:—"நான் தோற்றுப்போனால் எனது பையையே கொடுத்துவிடுகிறேன்."

குப்பன்:—"உன் பையில் ஒன்றும் இல்லையே."

சுப்பன்:—"உன் தலையிலும் ஒன்றும் இல்லையே."

---

மோட்ச உலகத்துத் தயையானது, உயர்ந்தவரென்றும் தாழ்ந்தவரென்றும் வேற்றுமை பாராட்டுவதில்லை. அது நித்தியமாயும் எங்கும் நிறைந்ததாயும் இருக்கிறது.

# மாதர் உலகம்



## எனது தொண்டு.

(ஓர் நாட்டுப்புறச் சகோதரி.)

நான் வெகு நாளாக நமது பாரத அன்னையின் அன்பிற்குரிய ஓர் புத்திரி ஆகவேண்டுமென்னும் விருப்பமுள்ளவளாகவே இருந்து வந்தும், அதற்கு இதுவரையிலும் எனது மடமை இடந்தராது தடுத்து வந்தது. இப்பொழுது அன்னையின் கிருபையால் எனது கோழைத்தனத்தையும் அநாவசியமான வெட்கத்தையும் சிறிது அகற்றி, அவளுடைய தொண்டியற்றத் துணிந்து விட்டேன். என்னை இவ்வளவு நாட்களாக அன்னையின் தொண்டுசெய்ய இடந்தராது அமுக்கி வந்துகொண்டிருந்த எனது மடமையையும் வீண் அபிமானம் அல்லது ஆடம்பரப் பித்தத்தையும் இப்பொழுது முற்றிலும் வெருட்டிவிட்டேன். ஆனால் நான் என்னமோ பெரிய ஆச்சரியப்படத்தக்கதான தொண்டு செய்து கொண்டிருக்கிறேன் என்று எனது பிரிய சகோதரிகள் நினைக்கவேண்டியதில்லை. அதுவோ வெகு சிறிது, லேசானது, எல்லோரும் சாதாரணமாகச் செய்யக்கூடியது—செய்துகொண்டு வருவதும்தான். அதுவே எனக்கு இவ்வளவு நாள்வரை சாத்தியமாகாது இருந்துவந்தது. காரணம் வேறு ஒன்றும் கிடையாது—அதைச் சொல்வதென்றால் எனக்கே வெட்கமாக இருக்கிறது. அன்னையின் அன்பிற்குரிய புத்திரிகள் என் காரணத்தைக் கேட்டால் என்னை எள்ளி நகையாடுவார்கள். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள். அவர்கள் மதியூகிகள். அவர்களை தியாகிகள் என்றும் சொல்லலாமன்றோ? ஆகையால் அவர்கள் என் விஷயத்தில் இரக்கமும் பிரியமுமே கொள்வார்கள். இவ்வளவிற்கும் எனது தொண்டு வெகு சிறிதே. இச் சிறிய தொண்டியற்றவும் எனக்கு இதுநாள் வரையிலும் மனதிற்கு திடம் வரவில்லை. அதற்கும் எனது கல்வி யறிவின்மையே காரணமென்று முக்காலும் எண்ணுகிறேன். கல்வி யறிவுடைய சகோதரிகள் என்போன்ற அநாவசியமான வெட்கமும் பயமும் கொள்ளார்களென்று நம்புகிறேன். நான் நினைப்பது சரியானதோ தப்பானதோ?

இனி நான் அன்னைக்கியற்றும் தொண்டு இன்னதென்று சொல்லுகிறேன்! கதர் கட்டத் தொடங்கி விட்டேன். ராட்டினமும் தினம் நான்

---

தேசத்தின் அபிவிருத்தியானது, தனிப்பட்ட நபர்களின் அபிவிருத்தியின் முடிவேயாகும்.

தவறாது சுற்றி வருகிறேன். எனது தொண்டு இதுவே யாகும். பகட்டுப் புடவை—பட்டுப் புடவை இவைகளை நிராகரித்துவிட்டேன். கதரையே பிரியமான ஆடையாகக் கட்ட ஆரம்பித்துவிட்டேன். பகட்டுத் துணிகளின் மிரட்டல் இனிமேல் என்னிடம் சாயாது. வெகுநாளாக என்னிடம் குடி கொண்டிருந்த வீணான ஆடம்பர அபிமானத்திற்கு இனிமேல் கடுகளவாவது என்மனதில் இடம்கிடையாது. அது வேறு இடங்களைத் தேடி அலையட்டும். பிரிய சகோதரிகள் யாருமே அந்தப் பிசாசிற்கு மனதில் இடம் கொடாதீர்கள். அது வெகு சாமர்த்தியமாக நம்மிடம் குடிகொள்ள இடம் தேடிவிடுகிறது. நாம் ஒவ்வொருவரும் அதற்கு எப்படியோ நம்முடைய மனதில் குடிகொள்ள இடம் கொடுத்து விடுகிறோம். ஆனால் பிறகு அதைப் போகச் செய்யும் பாடு கொஞ்ச நஞ்சமன்று. பிரியமாகக் கதரை ஆதரித்து உடுத்துவோம். கதர் பகட்டுத் தனமுள்ள வேசி அன்று. அது குல ஸ்திரீ போன்றது. அதை நாம் ஆதரியாம லிருந்தால் அது நம்மைத் தேடி வராது. உத்தமமான ஓர் குடும்ப ஸ்திரீ போன்றது. கௌரவிக்கத் தகுந்தது. அநேக காரியங்களை அநாயாஸமாகச் செய்துமுடிக்கும் வல்லமையுடையது. சாந்தத்தைக் கொடுக்கும் ஸ்வபாவம் உடையது. சத்திய நெறியில் மக்களை வைக்கக் கங்கணம் கட்டிக்கொண் டிருப்பது.

ஆனால் கிராமங்களிலுள்ள என்போன்ற சகோதரிகளுக்கு இந்த விஷயத்தில், அதாவது, கதர் உடுத்து ராட்டினம் சுற்றும் விஷயத்தில் அநேக தடங்கல்கள் இருக்கின்றன. ஏன் எனிலோ, நம் விஷயத்தில் கல்வி யறிவு அவ்வளவுதான். நாம் பத்திரிகைகளைக் கையாலும் தொடுவதில்லை—கண்ணாலும் பார்ப்பதில்லை. உலக விஷயங்கள் யாராவது சொல்லக் கேட்டால் உண்டு-அவ்வளவுதான். போதாக் குறைக்கு கண்ணைக் கவரும் பகட்டுத் துணிகள் சொற்ப விலைக்கு மூட்டை மூட்டையாக மூலை முடுக்குகளிலும் வந்து அலைகின்றன. அதைப் பார்த்தால் கதர் கண்ணுக்குப் பிடிப்பதில்லை என்று மட்டுமன்று, விலை அதைவிட கதருக்கு இரண்டு மடங்கு அதிகமாகவும் கொடுக்க வேண்டி யிருக்கிறது. ஏழைச் சகோதரிகள்—பட்டிக்காட்டுச் சகோதரிகள்—கிராமாந்திரச் சகோதரிகள்—வேலை ஓய்வில்லாச் சகோதரிகள்—படிப்பில்லா என்போன்ற வருந்தத்தக்க சகோதரிகள் டாம்பீகக் காற்றும் ஆடம்பரத் தீயும் மும்முரமாகப் பற்றி எரியும் இந்த நாட்களில் அதில் அகப்படாது தப்புவதும் அசாத்தியமே. நான் பட்டபாடு கொஞ்ச நஞ்சமன்று. ஆனால் எல்லாம் நம்முடைய மனதைப் பொறுத்ததுதான் என்ற விஷயம் எனக்கு இப்பொழுதே தெரியவந்தது. இருந்தாலும் நம்முடைய சொந்த மனம்போல் நடப்பதற்கும் எவ்வளவோ இடைஞ்சல்கள் உண்டு. கொஞ்சம் தைரியத்தை மட்டும் விடாமலிருந்தோமானால் எல்லாம் விரைவில் கைகூடு மென்பதில் சந்தேகமில்லை. வீணாக நம்மைப் பரிகாசம் செய்கிறவர்களையும்—நாம் இது விஷயமாகச் செலவிடும் சமயம் வீண் என்று நம்மைக் கோபிப்பவர்களையும் முதலில் சமாதானம் செய்யவேண்டும். நம்முடைய சொந்த வேலைகளை நாம் எவ்வளவு முக்கியமாகவும் கவலையுடனும் செய்து வருகிறோமோ அது

---

ஒரு மகானின் வாழ்க்கை, தொடர்ந்து நடைபெறும் ஒரு பெரும் போராட்டமேயாகும். அவருடைய இலட்சியமானது நிறைவேறினால்தான் அவர் போராட்டம் நிற்கிறது.



போலவே ராட்டினம் சுற்றுவதும் ஒன்று என்பதையும் நினைத்து அதற்கும் சிறிது சமயத்தை மீத்து வைத்துக்கொள்ள வேண்டும். தினமும் ஒரு மணி சாவகாசமாவது ராட்டினம் சுற்றவேண்டும். அதை நாம் முக்கியமான கௌரவமான ஓர் வேலையாகக் கருதவேண்டும். தினம் ஒருமணி நேரம் ராட்டினம் சுற்றுவது எனது கடமை என்று நான் முடிவு செய்துவிட்டேன். அதற்குச் சில நாட்களில் பகலில் சமயம் கிடைப்பதில்லை யாகையால் இரவு படுக்கப் போகுமுன் விளக்கை வைத்துக்கொண்டு ஒருமணி சாவகாசம் நூல் நூற்றுவிட்டே படுப்பேன். என் விஷயத்தில் இதில் இவ்வளவு சிரமம் இருப்பதால்தான் இச் சிறு விஷயத்தையும் எனது தொண்டு என்று பெருமையாக நான் சொல்லவந்தது. இது விஷயத்தில் என்போன்ற மற்ற சகோதரிகளும் ஊக்கம் கொள்ளவேண்டுமென்றே இதை ஆனந்தனில் எழுதவும் துணிந்தேன். சகோதரிகள் எல்லோரும் சிறிது கவலை எடுத்துக்கொண்டு விட்டால் நம் நாட்டில் பஞ்சம் பறக்கும்! செஞ்சம் களிக்கும்! பாரத அன்னை அருள்புரிவாளாக.

நூலாசிரியர்:—நான் காலஞ்சென்ற பின்னர்தான் நான் எப்பேர்ப்பட்டவன் என்று உலகம் அறியும்."


நண்பர்:—"ஆமாம்! அப்போது உங்களை எவ்வளவு வைதாலும் உங்களுக்குத் தெரியாது. அடிக்க எண்ணினாலும் அடிக்கமாட்டார்கள்."

## அழிப்பான் கதைத் திரட்டின் விடை.

1. சுண்ணாம்பு
2. அகப்பை
3. ஈ
4. மிளகாய்வற்றல்
5. பாம்படம்
6. அணில்
7. மாதுளம்பழம்
8. தென்னைமரம்
9. மழை பெய்தல்
10. கண்ணிமை
11. மிதியடி
12. மூள்
13. பூட்டு
14. எள்
15. மீன்வலை
16. காளான்
17. ஈருள்ளி
18. துடைப்பக்கட்டை
19. சீயக்கா
20. பல்லாங்குழி
21. தண்ணீர்
22. விளக்கு

---

உண்மையாகத் தேடுகிறவர்கள் பெறுகிறார்கள்; உண்மையாகக் கண்டு பிடிக்கிறவர்கள் அடைகிறார்கள். பிரார்த்தனைத் தத்துவமானது அசைக்க முடியாதது.




# கும்பிடுக்கும் கூலியா? ஆச்சாரிய லக்ஷணம்.

(பண்டித. பூ. ஸ்ரீநிவாசன்.)

இந்துக்களனைவரும் பொதுவாக இந்தியர்களே—தங்கள் சமயத்தினிடத்து மிக்க நம்பிக்கை யுடையவர்கள். சமயத்தின் பேரை—கடவுள் பெயரை—சொல்லாமல் அவர்கள் எக்காரியத்திற்கும் சம்மதப்படுவதில்லை. சமயமே அவர்களுக்கு உயிர் நாடியாகும். சமயத்திற்கு நம்பிக்கை அத்தியாவசியமாய் வேண்டற்பாலதே. நம்பிக்கையாகிய கடைகாலின் பேரில்தான் மதமாகிய மாளிகை மாண்புடன் மிளிரும். இது சர்வ சமய சம்மதமான விஷயம். இந்த நம்பிக்கை விஷயத்தில் இந்துக்கள் மிகப் பிரசித்தி பெற்றவர்கள். ஏன்? அளவுகடந்தும் சென்றவர்கள். எவ்வளவு பெரிய படிப்பாளியாயினும்—எல்லா நூல்களையும்—மேல்நாட்டு விஞ்ஞான சாஸ்திரங்களையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தோ னும் மத நம்பிக்கையில் அவர்கள் இளங்குழவிகளாகவே இருப்பது ணகூடு. புராணங்களோ வேறெந் நூல்களோ என்ன சொன்னாலும் சரி. இது இப்படியு மிருக்குமாவெனச் சந்தேகங் கொள்வதே இல்லை. அனைத்தையும் நம்பிவிடுவார்கள்.

நம்பிக்கை சிறந்ததுதான். 'நம்பிக் கெட்டவரில்லை' யென்று ஆன்றோர் அறைந்திருக்கின்றனர். ஆனால் இதற்கும் ஓரளவு வேண்டும். ஒருவன் பெரிய வண்டியில் புளிமூட்டைகளை நிறைய ஏற்றிக்கொண்டு மாடுகளுக்குப் பதிலாகப் பூனைகளைப் பூட்டி யோட்டிச் சென்றானென்றால் அதை நம்பிவிடுவதா? இத்தகைய நம்பிக்கையை மூடநம்பிக்கை யென்பர். மூடநம்பிக்கை மத விஷயத்திலும் முழுவதும் நன்மை பயப்பதில்லை. பல சமயங்களில் ஆபத்தை விளைக்கும். ஒரு வகுப்பார் கோவிலுக்குட் பிரவேசிக்கலாகாது, அவர்கள் தீண்டத்தகாதவர்கள், சண்டாளர்கள்' என்றிப்படிச் சில நூல்கள் செப்புமாயின், அதனை அப்படியே நம்பிவிடலாமா? 'ஏன் அவர்கள் ஆலயப் பிரவேசஞ் செய்யலாகாது? அத்தகைய குற்றம் அவர்கள் மாட்டு என்னவிருக்கிறது? நம்மிடத்து அக்குற்றமிலதோ? அவர்களைத் தீண்டுவதால் பாவமெப்

---

ஆண்டவனே! உன்னால் வெளியிடப்பட்டதாகக் கூறும் மொழிகளைப் படித்தேன். ஆனால் உன் இரகசியங்களை எனக்கு வெளியிடுவாயா?



படிச் சம்பவிக்கும்? பிறப்பால் உயர்வு தாழ்வு உண்டாகுமோ?' என்று ஆலோசிக்க வேண்டாமா? 'ஓரரசன் மேகங்களைப் பிடித்து விலங்கு பூட்டிச் சிறையிலடைத்து வைத்தான்' எனப் புராணங் கூறுகின்றது. 'மேகத்தைப் பிடிப்பதெப்படி? விலங்கிடுவது எவ்வாறு சாத்தியமாகும்?' என யோசிக்க வேண்டாமா? ஆராய்ச்சி யறிவை மதம் இழந்துவிட வேண்டுமென்று இயம்புகின்றது? மதம் ஆராய்ச்சிக் குரியதே யன்றோ?' மதவாராய்ச்சி' எனவும் பெரியோர் வழங்குகின்றனரே.

ஆனால், நம்பிக்கையின்றேல் மதமில்லை யென முன்னே மொழிந்ததன் கருத்து யாது? எனெனின், கடவுள் நிச்சயத்திற்குத்தான் அவ்வாறு நம்பிக்கை வேண்டுமென்று கூறப்படுகின்றது. உலக காரணராகிய கடவுள் பிரத்தியக்ஷம் முதலிய பிரமாணங்களா லறியப்படாதவராகலின் ஆகமப் பிரமாணத்தால் மாத்திரம் அறிதல் வேண்டும். இங்குத்தான் ஆகமப் பிரமாணத்தினிடத்து நம்பிக்கை வேண்டியதாகின்றது. பேரறிவும் பேராற்றலுமுடைய அப் பரம்பொருளின் செயல்கள் நமது சிற்றறிவிற் கெட்டக்கூடியவை யன்றாகலின், அவற்றினிடத்துச் சந்தேகங் கொள்ளாமல் நம்புதல் வேண்டும். உதாரணமாகச் சர்வேசுவரர் தம் சங்கற்ப மாத்திரத்தினாலே சகத்தைப் படைத்தார். 'சிவபெருமான் சிரித்துப் புரங்களை யெரித்தார்' என்பன போன்றவை ஈசுவரச் செயல்களாகலின், 'அது எப்படிப் படைக்க முடியும்? எவ்வாறெரிக்க முடியும்?' என வினவி இடர்ப்படலாகாது. இங்கு நம்பிக்கை வேண்டும். இவ்வித விஷயங்களுக்கே நம்பிக்கை அவசியமாகும். நம்பத்தகாத விடங்கள் பலவுண்டு. இத்தகைய விஷயங்களில் சுருதி யுக்தி அனுபவங்களுக்குப் பொருந்தியவையா யிருக்கின்றனவாவென யாராய்த லத்தியாவசியமாகும். பொருந்தாவிடங்களில் ஐயம் நிகழுங்கால், மறைபொருள்கள் புதைபொருள்கள்போல் பொதிந்து கிடக்குமாகலின், அவற்றைத் தக்க கல்விமான்களைக் கேட்டு சந்தேக நிவர்த்தி செய்து கொள்ளுதல் வேண்டும். முழுவதும் தள்ளத் தக்க விடங்களும் பலவுள வென்பதையும் ஒருவரும் மறுக்க முடியாது. சந்தேகாஸ்பதமான விஷயங்களெல்லாம் புராணங்கள் இதிகாசங்கள் ஸ்மிருதிகள் முதலியவற்றில்தான் காணப்படும். அவற்றின் லக்ஷணம் அம்மட்டேயாகலின் அவற்றைக் குறை கூறலாகாது. நீரொழியப் பாலுண்குருகுபோல் தெரிந்து, தெள்ளிதின் ஆராய்ந்து அமைவுடையவைகளைக் கற்பது' கல்வியாளர் கடமையாம்.

மூட நம்பிக்கையின் காரணமாக இந்து மதத்தில் நேர்ந்துள்ள அனர்த்தங்க ளனந்தம். அவ்வனர்த்தம் அவர்களோடு போகவில்லை. மதத்தின் மேன்மைக்கே மாசுண்டாக்குகின்றது. ஏன்? உண்டாக்கியும் விட்டது. அம் மாசைத் துடைத்து அதன் இயல்பான மேன்மையிலிருத்துவது மதாபிமானிகளின் கடமையல்லவா? மதத்திற்கு மாசளிக்கும் குறைகளு ளொன்றினை ஈண்டெடுத்துக் காட்டுகின்றோம்.

கடவுளிடம் பக்திபூண்டொழுகுவது போலவே உலகப் பற்றனைத்தையும் துறந்து கடவுளை யடையுநெறி கண்ட பெரியார்களிடத்தும், அத்தகைய உயர்நிலை யெய்தமுடியாது உலக வாழ்க்கையி லழுன்று உய்யுநெறி காணாது

---

அன்பு பலஹீனமான பொருளன்று. பூவுலகிலும் வானுலகிலும் அதை விடச் சிறந்த பலமான பொருள் ஒன்றுமே கிடையாது.

தவிக்கும் மாந்தர் பக்திபூண்டொழுக வேண்டியது அவசியமாமன்றோ? இது எம்மதத்தினர்க்கும் உடன்பாடான விஷயமே யாகும். எண்டிசையும் துதிக்கும் மண்டலாதிபரும் அவர்களைக் கொண்டாடி வணங்குவர். அப்பெரியோர் ஒன்றும் வேண்டாதவராயினும் அவர்மாட்டு அன்புடைய மாந்தர் பலர் அன்புமேலீட்டால் தாமாகவே அப்பெரியோர்க்கு இடவசதி போசனவசதிகளை வற்புறுத்தி அமைத்துத்தருவர். மோக்ஷாபேக்ஷை யுடையோர் பலர் அவர்களுக்குத் தொண்டு பூண்டு அவர்தம் கிருபையை எதிர்பார்த்து ஆவலாயுடனுறைவர். இயல்பாகவே அமைந்துள்ள அருட்பெருக்கால் அப்பெரியோர்கள் தம்மை நாடிவந்த நன்மாணுக்கர் பக்குவர்கள்தாமாவென்பதைப் பலமுறையும் பரிசோதித்துப் பக்குவ நிலையிலுள்ளோர்க்குச் செம்பொருள் காணும் செந்நெறியைப் போதிப்பர். அவ்வாறு போதிப்பதோடு நில்லாது அவர்களுடனிருந்து அப்போதைக்கப்போது அவர்களுக்குண்டாகும் சங்கைகளை யெல்லாம் பரிகரித்து அவர்களைச் சுவானுபூதிச் செல்வர்களாக்குவர். 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாது வேறொன்றறி'யாத மகான்களன்றோ அவர்கள்? 'உலகுபகாரம் ஞானிகள் விவகாரம்' என்றபடி உலகோபகாரமான அவர்கள் காரியங்கள் என்றும் இடையூறின்றி இனிது நடைபெறும் பொருட்டு, அரசர்களும் செல்வரும் முமுட்சுக்களுக்குப் போசனம் முதலிய சௌகரியங்களுக்காக நிலபுலங்களைத் தந்துதவினர். 'இல்வாழ்வானென்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றினின்ற துணை' என்னும் திருமொழியைக் கடைபிடித்தொழுகல் அவர்தம் கடமையன்றோ? நாளாவர்த்தியில் தருமச் சொத்துக்கள் பல பலவிடங்களினின்றும் வந்துசேரும். கூட்டவும் பெருக்கவும் ஆள்கள் சேருவர். சுவாமிகளுக்குப் பாலுக்காகப் பசுக்களும், போக்குவரவு சாதனமாகிய வண்டிவாகனங்களும், அவற்றிற்கு ஆட்களும், இவையனைத்தையும் மேல்பார்த்து ஒழுங்குபடுத்தக் காரியஸ்தர்களும், காரிய நிர்வாகிகளும், வரவு செலவு கணக்குகளும் பெருகிவிடும் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. கடைசியில் எல்லாம் தர்பார்தான். சமஸ்தானமும் இதற்கு நிகராகா தென்னும் நிலை சொல்லாமலே நேர்ந்துவிடும். 'எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே' என்றபடி, அப்பெரியார் எதிலும் பற்றற்றே இருந்து காலங்கழித்து விடுவர். அவருக்குப் பின் அவற்றின் கதியென்ன? அவரைப்போலவே இருந்து சாஸ்திர ஆராய்ச்சி செய்தல் சற்சீடருக்கு உபதேசஞ் செய்தல் தம்மிடத்து வருவார்க்குச் சன்மார்க்க போதஞ் செய்தல் முதலிய மதாபிவிருத்தி பாஷாபிவிருத்தி தேசாபிவிருத்திகளுக்கேற்ற காரியங்களைத் தொடர்ந்து நடத்தும் பொருட்டு, அவர்தம் சீடர்களுள் கல்வியறிவொழுக்க முடையவரை வேண்டிக் கொள்வதோடு அப்படியே பரம்பரையாக நடத்தி வரவேண்டுமென்று அதற்கான ஏற்பாடுகளையும் செய்வர். இவ்வாறு பல்வேறிடங்களிலும் நிகழும், அவைகளே இக்காலத் தெங்கும் காணப்படும் மடங்களின் சரித்திரம்.

காலக்கிரமத்தில் (தற்காலத்தில்) அம்மடங்கள் எந்நிலையிலிருக்கின்றன? எவரும் எள்ளி நகையாடத்தக்க நிலையிலிருக்கின்றன வென்பதை எவரும் மறுக்கத் துணிவு கொள்ளார். இரண்டொன்று தம் பண்டைப் பெருமையைப் பெருக்கி வருகின்றன வென்பது முண்மையே. எனினும், பெரும்

ஒருவன் பொன்னாலும் வெள்ளியாலும் உபகாரஞ் செய்வதைவிட, அநுதாபத்துடன் ஒரு துளி கண்ணீர் விடுவது எவ்வளவோ சிறந்தது.



பான்மையன பாழ்நிலை யடைந்து நாறிக் கிடக்கின்றன. மடமும் அதைச் சேர்ந்த சொத்துக்களும் மடத்தலைவராகிய சுவாமிகளின் ஆதீனத்தில் வந்துவிடவே அவர்கள் பிரியம்போல் செலவிட ஏதுவாயிற்று. அனைவரும் பிரபஞ்ச மாயையோ டெதிர்த்துப் போராடி அதனை வெல்லும் வல்லமை பெற்றவராய் விடுவரென்பது எதிர்பார்க்கக்கூடிய காரியமாமோ! அவர்கள் துறவிகளே, சன்னியாசிகளே எனினும், உலக (சம்சார) வியவகாரங்களோடு பழகும்போது அவை அவர்களைப் பற்றாதொழியுமோ? தீயானது தன்னை யடுத்துள்ள வைக்கோலை அது எவ்வளவு ஈரமுடையதாயினும் அவ்வீரத்தைச் சிறிதேனும் வற்றச் செய்யாது விடுமோ? பணம் கையில் நடமாட நடமாட, யாவரும் பெருமையாய்க் கருதி வணங்க வணங்க, அதிகாரம் வளர வளர, அவற்றின் வழியாகவே உலக மாயை அவர்கள் மனத்தைக் கலக்கத் தொடங்குகின்றது; அவர்களும் அதன் வயப்பட்டு அகங்காரம், பெருமை, டம்பம் முதலியவற்றைப் படைத்து, தம் கடமையை அறவே மறந்துவிடுகின்றனர். இஷ்டப் பிரகாரம் உண்பதும் உடுப்பதும்—காவியுடையும் பட்டாலும் பீதாம்பரத்தாலுமானது—உறங்குவதுமே அவர்கள் தொழிலாய்க் கொண்டுவிட்டனர். சிலர் சாஸ்திரங்களை நன்கு கற்றவர்களாயிருக்கலாம். ஆனால் கல்வி வேறு ஒழுக்கம் வேறு. அவர்தம் வேடம் கல்விக் குரியதன்று. துறவிற்கு—தியாகத்திற்கு உரியது, "ஒரு பெண்வேண்டாமென்று கொள்வார் சன்யாசம்—ஊரிலுள்ள பெண்கள் மீதெல்லாம் நேசம்" என்ற பாட்டிற்கிலக்காவது கஷ்டமான காரிமாகாது. இது சகஜந்தானே. இதுபற்றியன்றோ ஒருநாளைக்கு மேல் ஓரிடத்தி லிருக்கலாகாது; இருந்தால் பந்தம் உடனே பற்றிக்கொள்ளும் எனப் பெரியோர் விதிகளை வகுத்தனர்.

அவர்களிடம் வயிற்றுப்பாட்டை எதிர்நோக்கி நிற்கும் சீடர்கள்—இத்தகைய கூடாவொழுக்க முடையோரிடத்து வேறெதைத்தான் எதிர்பார்க்க முடியும்?—வேறொன்றை (மோக்ஷத்தை) எதிர்பார்ப்பவர்களுக்கு அங்கென்ன வேலை?—சிஷ்யகோடிகள் யாவரும் அவருக்கு அடங்கி நடக்க வேண்டியவர்களாதலினாலும், அவருக்குப் பின் அந்த ஸ்தானத்திற்கு வரவேண்டுமென்னும் விருப்பமுடையவர்களாதலாலும், அவருக்குப் பிரியமானபடி நடந்துகொள்ள வேண்டியவர்களா யிருக்கின்றனர். எல்லாம் இரகசியம்—கரவடம்—கள்ளம். அவ்வளவுதான் சொல்ல முடியும். சிலவிடங்களில் கொலைபாதகங்களும் நடைபெற்றிருக்கின்றன வென்பதை மறைக்க முடியாது. உலகமறிந்த விஷயத்தை மறைத்துப் பயனென்ன? இப்படிச் சில மடங்கள். மடாதிபதி—மகா சன்னிதானம்—ஜீயர்—ஆச்சாரியார் என்பன போன்ற பட்டங்கள் பெற்றுவிட்ட இவர்கள் 'தனமேற மதமேறும்' என்னும் வாக்கியத்திற் கிசைய, பெரிய சமஸ்தானாதிபதிகளாகத் தம்மைப் பாவித்துக் கொள்கின்றனர் போலும்! பல்லக்கின்றி வெளிப்படுவதில்லை. சத்திரங்களும் சாமரங்களும் கொடிகளும் யானைகளும் குதிரைகளும் ஒட்டகங்களும் மேளங்களும் தாளங்களும் பரிவாரங்களும் அட்டகாசம் பண்ணுகின்றன. சம்சாரம் பலத்துவிட்டது. துறவு—சன்யாசம்—எவ்வளவு அழகாயிருக்கின்றது பார்த்தீர்களா!

"வனத்தில் ஓர் பர்ணசாலையில் ஓர் சன்னியாசி வசித்து வந்தார். இரண்டு கௌபீனமே அவருடைய சொத்து. ஒன்றைத் தரித்துக்கொள்வார்.

நம் மனதிலே புகும் ஒவ்வோர் உண்மையும் ஆண்டவன் வார்த்தையாகும்.

மற்றொன்றை ஓரிடத்தில் வைத்திருப்பார். அதை எலிகடித்து விடும். எலியின் உபத்திரவத்திற்காகப் பூனையொன்று வேண்டியதாயிருந்தது. தேடிக் கொணர்ந்து பன்னசாலையில் விட்டார். அதற்குப்பால் வேண்டுமே. அதற்கென்ன செய்வது? கஷ்டப்பட்டு ஒரு பசு வாங்கினார். பசுவை மேய்க்க ஓர் சிறுவன் வேண்டாமா? சிறுவனொருவனைத் தேடிப்பிடித்து வந்தார். அவனுக்குச் சோற்றுக் கென்ன வழி? ஒரு சமையற்காரியைச் சம்பாதித்தார். பிறகு சொல்ல வேண்டியதில்லை. கௌபீன சம்ரக்ஷணை நிமித்தம் சன்னியாசி சமுசாரியாய் விட்டார்" என்றோர் கதை வழங்குவதுண்டு. இக்கதை இவர்களுக்குப் பொருத்தமானதா இல்லையாவென்று யோசித்துப் பாருங்கள். இவைகளுக்கு உணவிற்குத் தினப்படி குறைந்தபக்ஷம் நூறு ரூபாயாவது வேண்டாமா? மாதம் பிறந்தால் சம்பளக்காரர்களுக்குச் சம்பளம் ஆயிரம் ரூபாயாவது வேண்டுமே. (இது மிகைபடக் கூறல் எனச் சிலர் நினைக்கலாம். குறைபடக்கூறலேயன்றி மிகைபடக்கூறலாகாது. ஒரு மடாதிபதியின் மேளக்காரர்களுக்கு மாதம் நானூறு ரூபாயென்பதை நேரிற்கண்டறிந்தோம். மேளத்திற்குமாத்திரம் இவ்வளவானால் மற்றவைகளுக்கு எவ்வளவாகும் என்பதை நீங்களே கணக்கிட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள்.) இவற்றிற்கென்ன செய்வது? பண வருவாய்க்கு ஏதேனும்ஒருவழி செய்ய வேண்டுமே! அதற்காக வியாபாரம் செய்யத்தொடங்கி விடுகிறார்கள். என்ன வியாபாரம்! வேஷத்திற்குத் தகுந்த வியாபாரம் செய்யவேண்டும். அதுதான் உபதேச வியாபாரம். வியாபாரிகளுக்குச் சரக்கு வாங்கும் ஆசாமிகளைச் சேர்க்கத்தரகர்களிருப்பதுண்டு. அப்படியே இவர்களிடத்திலும் சிலர் இருப்பர். அவர்கள் மூலம் ஏமாந்த சோணகிரிகள் பலர் உபதேசம் பெறுவதற்குச் சுவாமிகளிடம் போவார்கள். யாருக்கு உபதேசம்? பணக்காரர்களுக்கு, பணம் கொடுப்பவர்களுக்கு. யார் யார் பணங்கொடுக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் உபதேசம். அதற்குமேல், உபதேசம் பெற்றவர்களாயினும் பெறாதவர்களாயினும்—யாவராயினும் ஏதோ சுவாமிகளென்கின்றார்களே, போய்ச் சேவிப்போம் என்று சென்றால் பாதபூசைக்கு நூறு ரூபாய் கட்டளை. நூறு ரூபாய் கொடுக்க முடியாதவன் பாதத்தைப் பூசிக்க விரும்பினால் அவன் கதியென்ன? கும்பிடுக்குங் கூலி கொடுக்க வேண்டுமா? இது ஆச்சாரியனிலக்கண மல்லவே.

“காவிலாத பேரன்பினுக் கெளிவருங்கருணைக் குரவனார்”

எனத் திருவிளையாடற்புராணம் ஆச்சாரியனிலக்கணத்தை எவ்வளவு அழகாக எடுத்துரைக்கின்றது! ‘எளியவரும் கருணை’ யல்லவாசற் குருமாண்பு!

“தாராத வருளெலாந் தந்தருள மௌனியாய்த்
தாயனையகருணை காட்டி”

என்று தாயுமான சுவாமிகள் சாற்றியவாறு தாயனைய கருணைகாட்டுவ தன்றே சதாச்சாரிய னிலக்கணம்!

“அருளுமறிவும் இருள்தீர் பொறையும்
வாய்மையுந் தவமும் தானமாட்சியும்
மன்னுயிர்க் கின்பந் தன்மீக் கூர்தலும்
ஒழுக்கமும் விழுப்பமு மழுக்கா றின்மையும்

---

தேகான்மா அழிய அழிய ஜீவான்மா பிரகாசிக்கத் தொடங்குகிறது.



கண்கால் முதலிய பொறியும் பண்பார்
பூணுந் துகிலும் பாண்விரி பிணையலும்
புண்ணியம் படைத்து மண்மிசை வந்த
தோற்றத்தன்ன வாற்றவெங் குரிசில்
குணப்பொற் குன்றம் வணக்க வாரா
ஐம்புல வேழத்தின் வெந்தொழில் வீயக்
கருணைவீணை காமுறத் தழீஇச்
சாந்தக் கூர்முன் வேந்தின னூறீஇத்
தன்வழிக் கொண்ட சைவசிகாமணி
பரமானந்தத் திருமா முனிவன்”

இதன்பொருள்:—சர்வப் பிராணிகளுடைய சுகதுக்கங்கள் தனக்கு வந்தாற்போலப் பாவிக்கும் கிருபையும், கல்வியினாலாய பொருள் நீதிகளை யறியு ஞானமும், சகித்தற்கரிய வெகுளியும் துன்பமும் வந்த விடத்துங் குற்றமற்ற பொறுமை மேற்கொள்ளலும், பிறர்க்குத் தீங்குண்டாகாவாறு சொல்லும் மெய்வசனமும், இராகத்துவேஷங்களால் பிராணிகளுக்கு வருத்தம் செய்யாமலிருத்தலாகிய தவமும், பக்குவான்மாக்களுக்கு உபகரிக்கும் ஞானதானமும், நித்தியமாகிய ஆன்மாக்களுக்கு யோக மோக்ஷங்கள் தன்னினு மதிகமாக உண்டாக வேண்டுமென்னும் திருவுளமும், சமயாசாரத்தி லொழுகலும், சீர்மையும், பொறாமை யின்மையும், பாசவைராக்கியமும், குருபக்தியும், ஞானசமாதியும் உடையவரே குருவாவார் என ஞானாமிர்தம் ஞானாச்சாரியனியல்பினை நயம்பட நவில்வதுங் காண்க.

அன்பருக் கெளிவந்தருள்பவரன்றோ குருபரனென்னக் கூறப்படுவார்? பாத பூசைக்குப் பணமும் கும்பிடுக்குக் கூலியும் கேட்போர் ஆச்சாரியர் பட்டத்திற் கருகராவரோ? இன்னும் ஓர் வேடிக்கை. ஓர் அன்பன் ஆச்சாரியருக்கு பிக்ஷை (சாப்பாடு) தரவேண்டுமாயின் இருபத்தைந்து ரூபாய் அதற்குச் சட்டணம் தரவேண்டுமாம். இது வெகு நேர்த்தி யல்லவா? இத்தகையோ ரன்றோ கருணாசாகரர்!

செலவிற்குப் பணம் தேடும் இவ்வாச்சாரிய வியாபாரி பணக்காரருக்குத்தான் தரிசனம் தருவது, பணக்காரர்களுக்குத்தான் மரியாதை செய்வது, அவர்களோடுதான் சம்பாஷிப்பது. மடத்தின் நிபந்தனைகள் அவ்வாறிருந்தால் அவர்களென்ன செய்வார்கள் பாவம் எனச் சிலரியம்பலாம். உண்மை ஞானி—உண்மைத்துறவி—உண்மைச் சன்னியாசி—அத்தகைய பந்தத்திலகப்பட்டுக் கொள்வானோ? வெனக் கேட்கின்றோம். பணம் பெற்றுக்கொண்டு உபதேசம் செய்வது எந்தச் சாஸ்திரத்திற்குச் சம்மதமானது? உபதேசமென்றாலென்ன? வியாபாரமா? ஏதோ வோர் வாக்கியத்தைக் காதில் இரகசியமாக—அது எல்லார்க்கும் தெரிந்த வொரு வாக்கியமாகவே யிருக்கும்—சொல்லி விட்டதனாலும் அவன் கேட்டு விட்டதனாலும் அவன் மோக்ஷத்திற் கருகனாய் விடுவானோ? அவனுக்கு அப்பியாசம் வேண்டாமா? சந்தேக நீக்கம் செய்ய வேண்டாமா? இது வெகு லக்ஷணமான உபதேச வியாபாரம்!

---

அநுபவத்துடன் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும், ஏழைகளுக்குச் செய்யும் ஒரு தானமாகும்.

அவர்களெங்ஙனமேனுந் தொலையட்டும். அவர்களைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அவர்களது தன்மையைப் பிறரறிந்து கொள்ளுதற்காகவே அவர் தமியல்பிற் சிறிதளவு காட்டப்பட்டது. அன்னார் தன்மையை யுள்ளபடியோராது மூடநம்பிக்கையால் கெட்டழிவோர்க்கே நாம் கவலைப் படுகிறோம். குருபக்தி அத்யாவசிய மானதே. ஆச்சாரியனருளின்றி எவரும் பிறவிப்பெருங் கடலை நீந்தார். உடல் பொருளாவி மூன்றினையும் குருவிற்கு அர்ப்பணம்செய்தலே நியாயம் என்று நாமும் கூறுகிறோம். ஆனால் எத்தகையோர் குருவாவர்? குருவின் லட்சணமென்ன? என்பவற்றை நன்றா யாராய்ந்தறிதல் வேண்டும். அவர் பணம் வேண்டார், காசுவேண்டார், பணத்தைப் பசாசெனப் பார்ப்பார். அவர் சாதிபேதம் பாரார். சமயவேற்றுமை யுன்னார். பணக்காரனுக்கும் பரமதரித்திரனுக்கும் அவரிடம் பேதம் காணப்படுவதில்லை. உண்மையன்பே அவர் விரும்புவது. பக்குவமே அவர் வேண்டும் பொருள். தாம் துறவி யென்பதையும் ஞானியென்பதையும் ஆச்சாரிய னென்பதையும் பிறர்க்குத் தெரியும்படி வேஷம் முதலியவற்றால் காட்டார்.

"வலங்கொளெழு முகிலூறி யுருமேறு பலவுதிர வழங்கினுலும்
விலங்கலவே ரோடுபறித் தொன்றினையொன் றடரவளி வீசினும்
கலங்கலைப் பாரெழுகடலு நிலைபெயர வுலகநிலை கலங்கினுலும்
நலங்கிளர்த்ந் நிலைபெயரா ருண்ணடுங்காரவைகண்டு நகையாநிற்பார்"

"புகழ்ந்துநறு விரைக்கலவை பூசிடினும் புல்லியரைப்போல நோக்கி
இகழ்ந்துபல பேசிடினும் விருப்புவெறுப் பென்பவவர்க் கென்றுமில்லை
அகழ்ந்த மலக்கிழங்கினராய்ப் பசிவேளை கிடைத்தவற்றை யமுதாத்
[துய்த்துத்
திகழ்ந்திடுவர் சிறிதேனு நாளைக்கு வேண்டுமெனச் சிந்தை செய்யார்"

"விண்ணிடையே குதல்மீளப் பாதலத்திற் புகல்மீட்டுப் புவியின்மேவல்
அண்ணியமல் பரகாயப் பிரவேசம் செயலுறையு மவ்விடத்தே
எண்ணியவெலாம் வரச் செய்திடல் முதற்செய் சித்திகளை யென்றும்
[வேண்டார்
புண்ணியபாதகமிலார் பெருமையிலார் சிறுமையிலார் பொய்மெய்யில்
[லார்."

என்று குசேலோபாக்கியானம் கூறுவதுபோல் அவர்கள் திகழ்வர். அன்னாரை, "அருளுடையோரைத் தவத்தில் குணத்தில் அருளில் அன்பில் இருளறு சொல்லினுங் காணத்தகும்" என்றபடி, செயல்களாலும் குறிப்பாலுமறிந்து வழிபட்டு உய்யும் நெறியைத் தேடல்வேண்டும். ஆச்சாரியர் எத்துணைச் சிறந்தஞானியாயினும் அவரால் நாமடையும் பேறு சிறிது மின்று. முதலில் நம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். விவேகமாதி சாதனங்களை யடைய முயலல்வேண்டும், பொல்லாங் கென்பவையெல்லாந் தவிர்ந்து ஜீவகாருணியம் ஈசவரபக்தி விராகம் முதலியவற்றைப்

மிகுந்த சிரமத்துடன் ஒரு நற்பொருளை அடைந்தால் அதனால் உண்டாகும் இன்பம் அளவுகடந்தது.



பெற்றிருத்தல் வேண்டும். அபக்குவர்களுக்கு சாக்ஷாத் சிவபெருமானே எதிர்தோன்றி உபதேசம் செய்யினும் ஞானமுண்டாகாது. இதனை வலியுறுத்தும் கீழ்வரும் செய்யுளையும் நோக்குக.

"மேலாஞ்சதுட்ட சாதனங்கள் மேவிநிறைந்த பேர்க்குரைக்கின்
மேலாமது நாமெனத்திடமாய் விளங்கு மவையில்லாதவர்க்கு
மேலாம்பரமன் மான்மழுவாய் விளங்கி யுரைத்தும் விளங்காது
மேலாஞ் சாதனங்கள் வரமேவவேண்டும் சாதுசங்கம்"

(அத்துவித வுண்மை.)

ஆகவே, முதலில் தம்மைப் பக்குவப்படுத்திக் கொண்டால் சதாச்சாரியன் தானே பக்குவியைத் தேடி வருவான். அடியார் பக்தியி லீடுபட வேண்டுமாயின் மெய்யடியாரைக்கண்டு—அவர்களைக் காண்பது அரிதினு மரிதன்றோ ?—வழிபடுதல் வேண்டும். அவரை வணங்கிப் பிரார்த்தித்து அன்ன முதலிய வளித்தல் வேண்டும்—அவர் தாமாகவே ஒன்றையும் கேளார். உணவன்றி வேறொன்றையு மேற்கார்-அதனால் நன்மை யுண்டாம். அங்ஙனமின்றிச் கும்பிடுக்கும் கூலிகேட்போர்க்கும், ஆச்சாரியத்தொழிலை ஓர் உத்தியோகமாகவும் வியாபாரமாகவும் பண மோப்பம் பிடித்துத் திரிவோர்க்கும், பணத்தையிறைப்பது பாழுக்கிறைப்பதாமன்றி வேறு பலன் சிறிது மின்று. உபதேசத்தை விலைக்கு வாங்குவது எவ்வளவு மூடத்தனம்.

ஆரம்பத்தில் நல்ல நோக்கத்தோடு அமைக்கப்பட்டன வாயினும் சீர்கேடான நிலையில் தற்போது விளங்கும் மடங்களும் மடாதிபதிகளும் மதாசாரியர்களும் மதத்திற்கு மாசுண்டாக்குவதோடு நாட்டின் செல்வத்தையும் நஷ்டப்படுத்துவோர்களாகவுமிருக்கின்றன ரென்பதை அறிவாளிக ளங்கீகரியாமற் போகார். இருநூறு ரூபாய் கொடுத்துப் பாதபூசை செய்வது மூடத்தன்மையா அன்றா? ஆனால் எண்ணம் புனிதமானதுதான். அதைத்தான் மூடநம்பிக்கையெனச் சொல்லுகிறோம். இந்த மூடநம்பிக்கை முதலில் நாம் சொன்னபடி ஆபத்கரமானதா அல்லவா ? யோசித்துப் பாருங்கள்.

அந்த மடாதிபதிகளும் ஆச்சாரியர்களும் உண்ணும் உணவும் உடுக்குமுடையும் பல பேருடையவை. அவர்களின் கஷ்டார்ஜிதம் சிறிது மில்லை. தேசத்தாரின் சொத்தைச் சாப்பிடு மிவர்கள் தேசநன்மைக்கான காரியங்களை ஏன் செய்யலாகாதெனக் கேட்கின்றோம். கிராமந்தோறும் சென்று மதப் பிரசாரம் ஏன் செய்யலாகாது ? மதுவிலக்குப் பிரசாரமேன் செய்யலாகாது ? இவைகள் தேசநன்மைக்கான செயல்களன்றோ ? அமெரிக்கப் பாதிரிகளைப் பார்த்தேனும் இவர்கள் புத்திகற்றுக்கொள்ளக்கூடாதா ? அக்காலத்தில் சங்கரர் இராமானுஜர் அப்பர் சம்பந்தர் முதலிய பெரியோர்கள் செய்த காரியங்களென்ன ? இவர்களாற்றும் செயல்களென்ன ? என்றுதான் நம்மவர் மூடக்கொள்கைகளையும், மூடப்பழக்க வழக்கங்களையும், மூடநம்பிக்கைகளையும் ஒழித்து உண்மைநெறி காண்பார்களோ அன்றே நமது மதத்தின் மாசுகழியும். மேகத்தினின்று வெளிவந்த சூரியன்போ லொளிரும்.

"ஆனந்தன்" வாசகர்களேனும் மதமாசு துடைக்க முயல்வர்களா ?

ஒரு காரியம் நல்லதென்று உனக்குப் பட்டால் அதை உடனே செய்.

# “ஆனந்தபோதினி” வாழ்த்து.

(தஞ்சைபுரி நேசன் கூறியது.)

பூமகிழ் பொன்னும் நாமகிழ் மின்னும்
ஓவா தென்றும் மேவாநின்றும்
நதிதட நிலைப்பெயர் நாமமும் பெற்ற
பதியெனச் சான்றோர் முதுமொழி புதுக்கிய
செஞ்சொற் புலவரும் விஞ்சிய கலைஞரு
மெஞ்சாச் செல்வரு மிடையறாச் சென்னையில்
ஈரெட் டாண்டுகள் இலங்கித் திகழ்ந்து
பாரொப்ப தாகப் பரவி விளங்கி
வானம் புகழ்ந்திடும் வண்சீர் பெற்ற
ஆனந்த போதினி யாமருங் குழந்தாய்!

நீயும், அருமையும் பெருமையும் வாய்ந்த நின்னதிபரும், கட்டுரை நேயர்களும், சந்தாதாரர்களும் சுக்கிலபட்சத்துச் சோமனென நீடூழி வையத்திலபிவிருத்தியாகி எஞ்ஞான்றும் இனிது வாழவிரும்புகிறேன்.

“எக்குடி பிறப்பினும், யாவரேயாயினும், அக்குடிக் கற்றோரை மேல்வருகென்பர்” என்ற ஆன்றோர் மொழிப்படி, சொன்னோக்கும் பொருணோக்கும், தொடை நோக்கும், நடைநோக்கு முதலிய எந்நோக்கினு மினிது இயைய, அரிய விடயங்களைத் அகத்தடக்கி நீ உல்லாசமாய் உலாவி வருமிடமெல்லாம் மேன்மை பெற்று விளங்குகின்றனை! ஒவ்வோரமயம் நீ காலந்தாழ்ந்துவரின், மனச்சோர்வடைந்து வழிமேல் விழிவைத்துப் பார்த்துப் பார்த் திருகண்களும் பூத்துவிடக் காத்துக்கொண்டிருந்து, நின்னை நோக்கின வாங்கே மலர்களிலுள்ள மதுவினை யுண்ணக் கார்வண்டுகள் ரீங்காரமிட்டுச் செவ்வழிப் பண்பாடி மொய்த்தென மொய்த்து, கூடிக்குழுமி புகழுரைபுரிந்து புன்சிரிப்புடன் குலாவிவருகின்றனர் அன்பர் பலர்.

நீ பரமனருளால் பதினாறுங் கடந்து, பதினேழாமாண்டிற்கு வந்திருப்பதால், முன்னவன் கிருபை சுரந்து முன்னாண்டுகளை விடச் சீரும், சிறப்பும், பேரும், பெருவாழ்வும் மிகப்பெற்றுத் தனக்கொப்பாரு மிக்காருமில்லையெனத் திகழ்ந்து விளங்க, கங்கையுடன் திங்கள் தங்கும் செஞ்சடையுடைய சங்கரன் பாங்கமரும் மங்கையின்றிருவருளை மனமாரச் சிந்தியா நிற்கின்றேன்.

ஆனந்தபோதினி அன்புடன் வாழ்க.

திருநெல்வேலி S. ராஜா பாடியது.

ஆனந்த போதினியைப் படிப்பவர்க்கா னந்தங் கேட்பவர்க் கானந்தம்
ஆனந்த போதினியின் சமாசாரம் சொலச் சொலவா னந்தமாகும்
ஆனந்த போதினியைப் பெற்றவருக் கனந்த மானந்தமாகும்
ஆனந்த போதினியைப் பார்த்தகா லானந்த மமைந்த நாளே.

# ஒரு பெரியாரின் மகிமையைப் பற்றிய ஐயம்.

நமது “ஆனந்தபோதினி” புரட்டாசி மாதச் சஞ்சிகையில் “ஒரு பெரியாரின் மகிமை” என்ற தலைப்பின் கீழ் ஸ்ரீமான் வீ. சங்கர ஐயரவர்கள் எழுதிய விஷயங்களை நேயர்கள் கண்ணுற்றிருக்கலாம். அப்பெரியாரைப் பற்றி அநேகர் பல முரண்பட்ட செய்திகளை எமக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர் அப்பெரியாரைக் காணும் விருப்பங்கொண்டு எமது மூலம் ஸ்ரீமான் சங்கர ஐயரவர்கட்குக் கடிதங்களை எழுதிக்கொண்டிருக்கின்றனர். பக்கீர் மஸ்தான் என்னும் பெரியார் இப்பொழுது அவ்விடத்தில் இல்லை என்று தெரியவருகிறது. இதைப் பற்றி விவரம் தெரிவிக்கவேண்டும் என்று யாம் ஸ்ரீமான் சங்கர ஐயரவர்கட்கு எழுதிக் கேட்க அவர் அடியிற் காணும் நிருபம் வரைந்துள்ளார். அன்பர் ஊன்றிப் படித்து உண்மை உணருமாறு வேண்டுகின்றோம்.—ப-ர்.

இராஜபாளையம்.—27-4-1931.

அன்பார்ந்த ஐயா,

தங்கள் 25–9–1931 கடிதம் கிடைத்தது. என் சொந்தக்காரப் பையன் பைத்தியம் குணமானதையும், 16 வருஷத்திய தீராத வயிற்றுவலி தீர்ந்ததையும், ஒரு குஷ்டரோகி நடக்க ஆரம்பித்ததையும் சரியாகப் பார்த்து நன்றாக நம்பியே நான் என் குடும்பத்துடன் ரூ. 50 வரையிலும் செலவுசெய்து பார்க்கப்போனேன். அதற்கிணங்கத் திரும்ப வரும்பொழுது ஆற்றை மோட்டார் கடந்தது மிகவும் விந்தையே. அதைக் கண்டு எங்கள் மோட்டாரிலிருந்த 8 பேர்களும் ஆச்சரியமடைந்தார்கள். அவர் காரைக்குடிக்குப் போயிருந்தபொழுது அங்கு சென்ற கூட்டத்துக்கும் ஒரு கணக்கில்லை. இது யாவருக்கும் தெரிந்த விஷயமே. இவ்வளவு மேன்மை யேற்பட்டிருப்பவர் என்று அப்பொழுது நான் தெரிந்தமையாலேதான் அக்கட்டுரை எழுதத் துணிந்தேன். ஆனால் நானும் ஒரு விஷயமாகத்தான் சென்றேன். எனக்கு இது வரையிலும் சவுகரியமானபாடில்லை. நானும் என் சொந்தக்காரர்கள் சிலருக்கும் வேறு சிலருக்கும் சீக்குகள் சொஸ்தமானதை நம்பிச் சென்றவனே. மேற்படியார் ரூபாய் ஒருவரிடமும் வாங்கினதாக எனக்குத் தெரியாது. இப்பொழுது 15 நாளாக இவ்விடத்திலும் பலர் மேற்படியாரைப் பற்றிப் பலவிதமாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். நானிருக்குமிடத்திற்கும் நம்புதாளைக்கும் சுமார் 150 மைலுக்குமேலிருக்கிறது. 4 கடிதம் மேற்படியூருக்கு எழுதினேன். ஒன்றுக்குமே நாளது தேதி வரையிலும் பதில் கிடைக்கவில்லை. அதிர்ஷ்டம் நமக்கில்லை—அவர்களுக்கு அதிர்ஷ்டமும் கூடியிருந்தது குணமாயிற்று என்று எண்ணியே இருக்கிறேன். அவர்களுக்கு குணப்படவேண்டிய காலம் நெருங்கிவிட்டபடியால் அங்கு போனதும் குணமாகிவிட்டது. எனக்கு அதற்குள்ள காலம் வரவில்லை என்று சமாதானமாக இருக்கிறேன். நான் பெரியாரைப் பற்றியோ, உலகத்தில் யாரைப் பற்றியுமோ தூஷிக்கத் தயாராக இல்லை. எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதோ யானறியேன். அவரைப் பார்த்தாலே ஒரு ஆனந்தம் உண்டாயிற்று. அதிலிருந்து அவர் பெரியாரென்று நம்பினேன். கூட்டம் கூட்டமாக வந்துகொண்டிருந்த ஆட்களும் ஒரு அத்தாக்ஷியே.

இப்படிக்கு: தங்களன்புள்ள,
(கையொப்பம்) வீ. சங்கர ஐயர்.

# இந்தியாவின் ஜனத்தொகை விவரம்.

இந்தியாவின் மொத்த ஜனத்தொகை 35,29,86,876 மக்கள். இதில் 18,19,21,914 ஆண்மக்கள்; 171,064,962 பெண்மக்கள். சென்ற ஜனகணிதத்தைவிட இவ்வருடம் நூற்றுக்கு 10.6 வீதம் அதிகரித்திருக்கிறது. மொத்த எண்ணிக்கையில் இந்துக்கள் 238,330,912; மகம்மதியர்கள் 77,743,928; சீக்கியர்கள் 4,366,442; கிறிஸ்தவர்கள் 5,961,794.

இதில் பிரிட்டிஷ் இந்தியாவில் 176,934,435 இந்துக்களும், 67,085,510 முஸ்லீம்களும், 3,192,196 சீக்கியர்களும், 3,531,703 கிறிஸ்தவர்களுமிருக்கின்றனர்.

பிரிட்டிஷ் இந்தியாவில் மாகாண வாரி ஜனத்தொகை பின்வருமாறு:—

ஆஜ்மீர் மிர்வாரா:—மொத்தம் 560,292; இதில் இந்துக்கள் 434,509. முஸ்லீம்கள் 97,133, ஜெயினர்கள் 19,497, சீக்கியர்கள் 34, கிறிஸ்தவர்கள் 6,947.

அஸ்ஸாம்:—மொத்தம் 8,622,251; இதில் 4,931,760 இந்துக்கள், சீக்கியர்கள் 2,497. ஜெயினர்கள் 2636, புத்தர்கள் 14955. முஸ்லீம்கள் 2,755,914. கிறிஸ்தவர்கள் 202,586.

வங்காளம்.—மொத்தம் 50,122,550. இதில் இந்துக்கள் 21,537,921, புத்தர்கள் 315,801. முஸ்லீம்கள் 27,530,321. கிறிஸ்தவர்கள் 180,572.

பீகார், ஒரிஸ்ஸா:—மொத்தம் 37,676,576. இதில் இந்துக்கள் 31,010,660. முஸ்லீம்கள் 4;264,776. கிறிஸ்தவர்கள் 341,710.

பம்பாய்:—மொத்தம் 21,854,841. இந்துக்கள் 16,619,866. சீக்கியர்கள் 20,723. ஜெயினர்கள் 1999,979. புத்தர்கள் 18990. ஜொராஸ்டிரியர்கள் 89543. முஸ்லீம்கள் 4,452,133. கிறிஸ்தவர்கள் 317,042. யூதர்கள் 17,443.

பர்மா:—மொத்தம் 14,645,969. இதில் இந்துக்கள் 574,697. ஜெயினர்கள் 77,895. முஸ்லீம்கள் 606,841.

மத்திய மாகாணம், பீரார்:—மொத்தம் 15,507,723. இதில் இந்துக்கள் 13,460,105. முஸ்லீம்கள் 682,854. கிறிஸ்தவர்கள் 59584.

குடகு:—மொத்தம் 163,27. இதில் இந்துக்கள் 146,007. முஸ்லிம்கள் 13,777. கிறிஸ்தவர்கள் 3430.

டில்லி:—மொத்தம் 636,246. இதில் ஹிந்துக்கள் 398.863. சீக்கியர்கள் 6437. ஜெயினர்கள் 5345. முஸ்லீம்கள் 206,960. கிறிஸ்தவர்கள் 16989.

சென்னை:—மொத்தம் 46,575,670. இதில் இந்துக்கள் 40,392,900. முஸ்லீம்கள் 33,16083. கிறிஸ்தவர்கள் 1770328.

வடமேற்கு எல்லைப்புற மாகாணம்:—மொத்தம் 2425076. இந்துக்கள் 142977. சீக்கியர்கள் 42510. முஸ்லீம்கள் 2,227,303. கிறிஸ்தவர்கள் 12,213.

பஞ்சாப்:—மொத்தம் 23,580,852. இதில் இந்துக்கள் 6,32,588. சீக்கியர்கள் 3064144. ஜெயினர்கள் 35284. புத்தர்கள் 5723. முஸ்லிம்கள் 13,352,460. கிறிஸ்தவர்கள் 814738.

ஐக்கிய மாகாணம்:—மொத்தம் 48,408,763. இதில் இந்துக்கள் 40,905,523. சீக்கியர்கள் 46500. ஜெயினர்கள் 67954. முஸ்லீம்கள் 7,181,937. கிறிஸ்தவர்கள் 205,009.

பலுசி ஸ்தானம்:—மொத்தம் 463.508. இதில் இந்துக்கள் 91,433. சீக்கியர்கள் 8368. முஸ்லீம்கள் 405,309. கிறிஸ்தவர்கள் 8044.

## பூணூல் போட்டால் தீண்டாமை போகுமா?

காந்தியடிகள் தீண்டாமைப் பேயைத் தொலைக்க அல்லும் பகலும்-அநவரதமும் அரும்பாடுபட்டு வருகிறார். காங்கிரஸ் தீண்டமையைப் போக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறது. கேரளத்தில் காங்கிரஸ் கமிட்டியார் ஆலயப்பிரவேசச் சத்தியாக்கிரகம் செய்ய ஏற்பாடு செய்வதாகத் தெரிகிறது. நம் தமிழ்நாட்டிலும் தீண்டாமை விலக்குப் பேச்சுத் தீவிரமாய் நடைபெறுகிறது. சென்ற மாதம் முதல் பம்பாய் காங்கிரஸ் கமிட்டியார் தீண்டமையை ஒழிக்கத் தீவிரமான பிரசாரம் செய்யத் தொடங்கியிருக்கின்றனர். இவர்களுடைய நோக்கத்தையும் ஊக்கத்தையும் நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். ஆனால் இவர்கள் தீண்டாமையை ஒழிக்கக் கைக்கொள்ளும் முறை அவ்வளவு சிறந்ததல்ல என்று கூறாமல் இருக்க முடியவில்லை. சென்ற சிராவண காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்கட்குப் பூணூல்கொடுத்து அணியச்செய்ததாக அறிந்து மிகவும் வி பர்தோம். எவ்வாறு பூணூல் தீண்டாமையை ஒழிக்கும் என்று கேட்கின்றோம்? பூணூல் அணியும் வழக்கமுள்ள ஏனைய வகுப்பினர் எவ்வாறு மதிக்கப்படுகின்றனர் என்பது யாருக்குத் தெரியாது? அப்பூணூல் அணியும் ஒரு சில வகுப்பினர் தீண்டாதவராகவே கருதப்படுகின்றனரே. அவர்கட்கு ஆலயப்பிரவேச உரிமையோ ஏனைய உரிமைகளோ இல்லை என்பதும் பிரத்தியக்ஷம். இந்நிலையில் பம்பாய் காங்கிரஸ் கமிட்டியாரின் செய்கை கேலிக்கூத்தாகவே முடியும் என்பதில் ஐயமில்லை. காந்தியடிகளோ-காங்கிரஸோ தீண்டாமையை ஒழிக்கப் பூணூல் போடவேண்டும் என்று கட்டளையிடவில்லை.

---

## தமிழ்நாடு காங்கிரஸ் மண்டபம்.

சென்னை மௌண்ட் ரோட்டுக்கடுத்த ஜெனரல் பாட்டர்ஸ் ரஸ்தாவில் சுமார் அறுபத்துநான்காயிரம் ரூபாய் செலவுசெய்து தமிழ்நாடு காங்கிரஸ் மண்டபம் அழகாக நிருமாணிக்கப்பட்டிருக்கிறது. 16-9-31-ம் தேதியில் மாஜி காங்கிரஸ் தலைவர் சேலம்-சி. விஜயராகவாச்சாரியார் அதன் திறப்புவிழாவை நிகழ்த்தினார். அப்போது ஸ்ரீமான் ஆச்சாரியார் கூறியதாவது:—

"உலக சிரேஷ்டராகிய காந்தியடிகளின் முயற்சியால் காங்கிரஸ் விசேஷ அபிவிருத்தி அடைந்திருக்கிறது. கோடிக்கணக்கான ஜனங்களின் அரசியல் நிலைமையை இக்காங்கிரஸ் உயர்த்தியிருப்பதற்கு அவரே காரணபூதர். இந்தியா சுதந்தரம் பெற்றவுடன் இதே மண்டபத்தில் சுதந்தர தேவியின் உருவச் சிலை ஒன்றை ஸ்தாபித்து மகாத்மாவைக் கொண்டு திறக்கச்செய்யவேண்டும். அமெரிக்க சுதந்திரத்திற்கு உதவிபுரிந்த பிரன்சுக்காரர்களே நமக்கும் அவ்வுருவச் சிலையைத் தரவேண்டும்."

இப்பொருள் பொதிந்த மொழிகளை வெளியிட்ட தமிழ்நாட்டுப் பீஷ்மரை நாம் பாராட்டுகின்றோம். இத்தகைய பேரறிஞர்-தேசபக்தர்களெல்லாரும் பொதுவாழ்வினின்றும் விலகி மூலையில் உட்கார்ந்துகொண்டிருப்பது நம் நாட்டு மக்களின் துரதிர்ஷ்டமே. காந்தியடிகளைப் பின்பற்றவேண்டும் என்று கூறும் ஸ்ரீமான் ஆச்சாரியாரும், இக்காங்கிரஸ் மண்டப நிருமாணத்துக்கு மூலபுருஷரும், மாஜி காங்கிரஸ் தலைவரும், பூரண சுயேச்சை வாதியுமான மயிலை ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசையங்காரும் தகுந்த சந்தர்ப்பத்தில் வெளிவந்து வழிகாட்டியிருந்தால் தமிழகத்தின் அரசியல் மதிப்பு வேறுவிதமாயிருந்திருக்கும் என்பது எமது கருத்து. இப்பொழுதும் ஒன்றும் மூழ்கிவிடவில்லை. இனிமேலேனும் முன்வருவார்களா?

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

**பிரஜோற்பத்தி௵ கார்த்திகைமீ—கலியுகாதி 5033, சாலிவாகனம் 1854, பசலி 1341, கொல்லமாண்டு 1107, ஹிஜிரி 1350, இங்கிலீஷ் 1931௵ நவம்பர்மீ—டிசம்பர்மீ**

| கார்த்திகை | நவம்பர்மீ | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | [நாள்,முடவன் முழுக்கு |
| 1 | 16 | திங் | சப்32-3 | திரு27-0 | அ27-0சி | விருச்சிகரவி நா-4-15, கரி |
| 2 | 17 | செவ் | அஷ்36-15 | அவி31-53 | சி31-53மா | கோவாஷ்டமி |
| 3 | 18 | புதன் | நவ41-53 | சத38-35 | சி38-35அ | அக்ஷய நவமி,8-க்குள் மழை |
| 4 | 19 | வியா | தச48-23 | பூர46-10 | சித்60 | ஏற்றம், கபிலை ஸ்தாபிக்க |
| 5 | 20 | வெ | ஏகா55-10 | உத்54-0 | சி54-0அ | சர்வ, மத்வ ஏகாதசி |
| 6 | 21 | சனி | துவா60 | ரே60 | மா60 | யோகீஸ்வா துவாதசி |
| 7 | 22 | ஞா | துவா1-40 | ரே1-40 | அ1-40சி | சுப முகூர்த்தம் செய்ய |
| 8 | 23 | திங் | திர7-30 | அஸ்8-33 | சித்60 | வைகுந்த சதுர்த்தசி |
| 9 | 24 | செவ் | ச○12-10 | ப✻14-28 | சித்60 | பௌர்ணமி, கிருத்திகை, |
| | | | | | | அண்ணமலையார் தீபம் |
| 10 | 25 | புத | பௌ16-0 | கிரு19-20 | அ19-20சி | கரிநாள், விஷ்ணு தீபம் |
| 11 | 26 | வியா | பிர18-18 | ரோ22-58 | மா60 | கார்த்தீகபகுளம் |
| 12 | 27 | வெ | துதி19-35 | மிரு25-38 | சித்60 | |
| 13 | 28 | சனி | திரி19-53 | திரு27-18 | சித்60 | |
| 14 | 29 | ஞா | சது19-13 | புன28-23 | சித்60 | |
| 15 | 30 | திங் | பஞ்17-38 | பூச27-50 | சித்60 | |
| 16 | 1 | செவ் | சஷ்15-13 | ஆயி26-53 | சித்60 | |
| 17 | 2 | புத | சப்11-50 | மக24-58 | சி24-58அ | |
| 18 | 3 | வியா | அஷ்7-43 | பூர22-15 | சி22-15மா | |
| 19 | 4 | வெ | நவ2-43 | உத்18-45 | சி18-45அ | |
| | | | தச56-58 | | | |
| 20 | 5 | சனி | ஏகா50-33 | அஸ்14-30 | மா60 | |
| 21 | 6 | ஞா | து43-35 | சித்9-48 | சித்60 | |
| 22 | 7 | திங் | திர36-40 | சுவா4-35 | அ4-35மா | பிரதோஷம்,மாசசிவராத்ரி, |
| | | | | விசா59-23 | | இயமதீபா, அவமாகம் |
| 23 | 8 | செவ் | சது29-53 | அனு54-28 | சித்54-28ம | வியாதியஸ்தர் குளிக்க |
| 24 | 9 | புத | அ●23-25 | கே50-15 | சி50-15மா | சர்வத்திர அமாவாசை |
| 25 | 10 | வியா | பிர18-10 | மூல47-15 | சித்60 | சந்திர தரிசனம், 6-க்குள் |
| 26 | 11 | வெ | துதி14-3 | பூரா45-40 | பி45-40சி | கணிதாரம்பம் [மழை |
| 27 | 12 | சனி | திரி11-40 | உத்45-53 | சித்60 | மாச சதுர்த்தி விரதம் |
| 28 | 13 | ஞா | சது11-5 | திரு47-58 | அ47-58ம | சீமந்தம், சர்வ முகூர்த்தம் |
| 29 | 14 | திங் | பஞ்12-40 | அவி52-3 | சித்60 | சஷ்டி, ஸ்காந்த சஷ்டி |
| 30 | 15 | செ | சஷ்16-18 | சத57-48 | மா60 | தனுசரவி நா-39-55, மித்ர |
| | | | | | | சப்தமி, சூரிய விரதம் |

(1931௵ டிசம்பர்மீ)

| | | | |
|---|---|---|---|
| ராகு | | | |
| | 10-தனு-சுக்<br>11-தனு-புத<br>15-தனு-செவ் | | குரு |
| — | | | — |
| சனி | சூ-செ<br>சுக்-பு | | கே |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI ST., MADRAS.



# மாதர் நீதி மஞ்சரி.

(சித்தூர்-தமிழ்ப் பண்டிதர் பூ. ஸ்ரீநிவாசலு நாயுடு அவர்கள் எழுதியது.)

இந்த அரிய நூல் எளிய நடையில் இனிய தமிழில் பல நற்போதங்க ளடங்கி தற்பொழுது வெளிவந்திருக்கிறது. இதில் பெண்டிற்கியல்பாக யிருக்கவேண்டிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நால் வகைக் குணங்களையும் கற்பிலக்கணத்தையும், பெண் கல்வி, மண முறையையும், இல்லற வியலையும், குடித்தனம் நடாத்தும் கிரமத்தையும், கற்பரசிகளின் சரிதைகளும், எழுதப்பட்டிருக்கிறது.

சொற்ப காப்பிகளே அச்சிடப்பட்டிருப்பதால் உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## இதில் அடங்கிய விஷயம்

முன்னுரை.
1 திரௌபதியும், சத்தியபாமையும்
2 கௌசிக வேதியரும் கற்புடைப் பத்தினியும்
3 பெண் கல்வி
4 மகடூஉக் குணம்
5 மாதர் மணம்
6 மாதர் கடமை
7 கற்பிலக்கணம்
8 இல்லற முறை
கற்பரசிகள்.
9 அருந்ததி
10 அனுசூயை
11 கண்ணகி
12 கோப்பெருந் தேவி
13 காந்தாரி
14 காரைக்காலம்மையார்
15 சந்திரமதி
16 சாவித்திரி
17 சீதை
18 தமயந்தி
19 நாராயணி
20 திருவெண்காட்டு நங்கை
21 வல்லாளன் மனைவி
22 வாசுகி யம்மையார்

**விலை அணா 6.** ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30—11—31 வரை அணா 4.

# கைவல்ய நவநீத வசனம்.

(இரண்டாம் பதிப்பு.)

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருளினைத் தழுவிப் பல மகான்கள் பல நூல்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இது எவரும் எளிதில் வாசித்துணரும்படி வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# தத்வசங்க்ரஹ ராமாயணம்

## இரண்டாம் பதிப்பு.

இது ஸமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒருமுறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப்பிறந்த தாம் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட்குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலன நிமித்தம் உலகத்தில் ஸத்யவந்தனுக தசரத பூபதிக்கு ஸ்ரீராமனுக அவதரித்த ஜகத் பிரபுவின் குணதிசயங்களைப்பற்றிப் பேசுவது.



ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனை படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும். இதனைப்படித்தால் அநேக ஞான நூற்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களை விட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன்கண் காணலாம்.

உபந்யாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீராமசரிதையை வாசிப்பதே இகபர நன்மை யளிக்கு மென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

புஸ்தகம் சுமார் 520 பக்கங்கள் கொண்டது. இங்கிலீஷ் கிலேஸ் காகிதத்தில் டபுள்க்ரௌன் 4 பக்க அளவில் அச்சிடப்பட்டு முழுகாலிகோ பைண்டு செய்யப்பட்டது. இதன் விலை ரூபா 4—0—0.

# ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

## (சப்தகாண்டங்கள் அடங்கியது.)

## (மூன்றும் பதிப்பு)    இதன் விலை ரூபா 2.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது. மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

☞ சொற்பக் காப்பிகளே அச்சிடப்பட் டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கோள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக்கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைக்கூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷ முண்டாகும்.

---

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**


# இனும்!    இனும்!!



**முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன் பேனு இனும்.**

எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனு இனுமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 3-15-0. 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

## 22-காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கெடியாரங்கள்



இதிற் கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானுலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடிகாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனுமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்தரவாதம் .ரூ. 4-15-0 வி.பி. வேறு

**கருணைநிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.**

---

# நேர்த்தியான பட்டு அங்கவஸ்திரங்கள்

## எல்லா வர்ணங்களிலும் கிடைக்கும்.



நாகரிகமும் அழகும் வாய்ந்த இந்த நவீனபட்டுக் குட்டைகள் வேண்டியவர்கள் இச்சமயத்தில் நாளைப் போக்காமல் இன்றைக்கே எழுதுங்கள். ஸ்டாக்கிலிருப்பவை செலவழிந்துவிட்டபின் 10 ரூபாய் கொடுத்தாலும் இப்படிப்பட்ட குட்டைகள் கிடைக்கமாட்டாவென்பது உண்மை! உண்மை!! மிகவும் நேர்த்தியான பளபளப்போடு கூடிய பட்டினுல் செய்யப்பட்ட இக்குட்டைகளை சிரசில் சுற்றிக்கொள்ளலாம். கமிஸ், சட்டை, கோட் முதலிய சொக்காய்களின் மேல்போடும் துப்பட்டாக்களாகவும், ஸ்திரீகள் தாவணியாகவும், சிறு பெண்பிள்ளைகள் தாவணியாகவும், அங்கவஸ்திரங்களாகவும் உபயோகிக்கலாம். இவற்றில் பச்சை, வெள்ளை, சிவப்பு, வெண்சிவப்பு, ரோஸ், ஊதா, நீலம், மஞ்சள், மேகவர்ணம் முதலிய பல நிறங்கள் பொருந்தியவை உண்டு. வேண்டுவோர் இன்ன குட்டை வேண்டுமென்று கடிதம் எழுதி அனுப்பவும்.

அங்கவஸ்திரம் 1-க்கு விலை ரூபா 2—4—0.

---

**இராஜலட்சுமீ கம்பெனி, சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.**

## நோய்க் கிடங்கொடேல்

நீங்கள் ஏன் தலைவலிகளுக்கு, ஜலதோஷம், பாரிசவாயு, கீல் வாயு முதலான பலவித நோய்களுக்கு உட்பட்டு அவஸ்தைப்பட வேண்டும்? சூரியனைக் கண்ட பனிபோல் நோய் இருக்கிற இடம் தெரியாமல் இலகுவில் சொஸ்தப்படுத்துவது நிகரற்றதான

# Amrutanjan

# அமிருதாஞ்சன்

### ஸர்வ நோய்களுக்கு ஸித்தௌஷதம்




அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து. விலை அணா 10.

### படைத் தைலம்.

இது எல்லாவிதமான படைகளையும் போக்கும்.

விலை டப்பி 1-க்கு அணா 6.

### மோஹினி தைலம்.

ஸ்த்ரீ புருஷர் உபயோகிப்பதற்கு பிரசித்தமானது. 5 துலாம் எண்ணெய் சீசா 1-க்கு விலை அணா 12.

### தந்த சூரணம்.

பல் துலக்க இது நல்ல தூள். பல் வியாதி, ஈறு வலி முதலிய நோய்கள் நீங்கும்.

விலை டப்பி ஒன்றுக்கு அணா 2.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

## அமிருதாஞ்சன் டிப்போ,


நெ. 6, தம்புசெட்டி தெரு, மதராஸ்.

எமது ஸிலோன் சப் ஏஜென்ஸி :- 16, கீமன்ஸ் கேட், கொளும்பு.



## பூவேலை தைக்கும் கைமெஷீன்

இவ்வாச்சரியமான மெஷீன் பலவித பூச்சித்திர வேலைகளோடு நேர்த்தியாகத் தைப்பதற்கு மிகவும் அவசியமானது. கொஞ்சநாள் அனுபவத்திலேயே ஸ்திரீ புருஷர்கள் யாவரும் இதை எளிதில் அறிந்து கொண்டு



இவற்றின் உதவியால், மெத்தை படுக்கை, படுக்கை உறைகள், தலையணை உறைகள், மேஜை விரிப்புகள், ஜன்னலின் திரைச்சீலைகள், குழந்தைகளின் சொக்காய்கள், ஸ்திரீகளின் கவுன்கள், குல்லாய்கள், இவைகளில் பலவித பூச்சித்திர வேலைகளமைத்து கண்ணைக் கவரும்படி செய்யலாம்; சுவற்றில் களி மண்ணால் பலவிதப் பூச்சித்திர வேலைகள் அமைப்பதற்கும் இது மிகவும் சாதனமானது.

ஒவ்வொரு ஸ்திரீக்கும் தங்கள் ஓய்வு நேரங்களில் இது மிகவும் உற்சாகத்தைத் தந்து தங்கள் மனதிற்கினிய யுக்தியுடன் புதுபுது வேலைப்பாடான பலரக பூஇலை சித்திர வேலைகள் செய்வதற்கு இது மிகவும் அவசியமானது.

வாங்கிப்பார்த்தாலே இதன் அருமை பெருமை விளங்கும். பத்தே நிமிஷத்தில் இதை அறிந்து கொள்ளும்படியான முறையையும் இதனுடன் அனுப்புவோம். பல ஆச்சரியமான வேலைகளைப் பகட்டாகவும் நேர்த்தியாகவும் இதன் உதவியால் செய்து முடிக்கலாம்.

அநேக பள்ளிக்கூடங்களில், மாணவர்களுக்கு இவ்வேலைப்பாடுகளைக் கற்பிக்கும் பொருட்டுத் தருவித்து நல்ல பலனை அடைந்திருக்கிறார்கள்.

இதை உபயோகிக்கும் முறை அடங்கிய புஸ்தகம், இம் மெஷினுடன் கூட பெட்டியில் அடக்கம் செய்து அனுப்பப்படும். விலை ரூ. 2-8-0-தான்.

இராஜலட்சுமி கம்பெனி, நெ. 44, தம்புலையர் தெரு, மதராஸ்.



## G. W. M. REYNOLDS.


### BOLD TYPE EDITIONS.

| | | Rs. | As. | | | Rs. | As. |
|---|---|---|---|---|---|---|---|
| Mysteries of the Court of London | 17 vols. | 17 | 0 | Pope Joan ... | 3 vols. | 1 | 12 |
| Joseph Wilmot | 8 ,, | 5 | 0 | Necromancer | 3 ,, | 2 | 4 |
| Ellen Percy | 8 ,, | 5 | 0 | Wagner, the Wehr Wolf | 3 | 1 | 12 |
| Mary Price | 8 ,, | 5 | 0 | Soldier's Wife | 2 ,, | 1 | 8 |
| Rye House Plot | 4 ,, | 3 | 0 | May Middleton | 2 ,, | 1 | 8 |
| Young Duchess | 4 ,, | 3 | 0 | Faust ... | 2 ,, | 1 | 6 |
| Omar | 4 ,, | 3 | 0 | Leila ... | 3 ,, | 1 | 8 |
| Rosa Lambert | 4 ,, | 3 | 0 | Robert Macaire | 2 ,, | 1 | 4 |
| Margaret ... | 4 ,, | 3 | 0 | Mary Stuart | 2 ,, | 1 | 4 |
| Loves of the Harem | 4 ,, | 3 | 0 | Seamstress | | 1 | 8 |
| Massacre of Glencoe | 4 ,, | 3 | 0 | Alfred ... | | 1 | 0 |
| Virgin's Kiss | 4 ,, | 3 | 0 | Grace Darling | | 0 | 12 |
| Canonbury House | 3 ,, | 2 | 4 | Young Fisherman | | 0 | 10 |
| Mysteries of Old London | 3 ,, | 2 | 4 | Stories Told by a Gendarme | | 0 | 12 |
| | | | | Mysteries of Paris by Eugene Sue | | 1 | 0 |

SUPERIOR WATCH CO., P. B. No. 167, MADRAS.

# இனம் !    இனம் !!    இனம் !!!


அடியிற் குறிப்பிட்டிருக்கிற பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு டேபில் டையம்பீஸ் இனமாகவும், கையில் கட்டும் கெடியாரம் வாங்குபவர்களுக்கு லிவர் பாக்கெட் கெடியாரம் இனமாகவும் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒரு முறை வாங்கிப்பார்த்தால் எம்முடைய உண்மைவிளங்கும்.



நே. 1.


பாக்கெட் லிவர் கெடியாரம் இனம் டேபில் டையம்பீசுடன் விலை ரூபா 4-4-0

A ஷை பொன் கிலிட் கெடியாரம் இனம் டையம்பீசுடன் ரூ. 4-8-0




நே. 2.

பொன் கிலிட் விசித்திர பட்டைகள் தீர்த்த ரிஸ்லெட் கெடியாரம் தங்க டயல் உள்ளது இனம் பாக்கெட் கெடியாரத்துடன் விலை ரூபா 6-12-0



நே. 3.

பொன் கிலிட் 8-மூலை ஷேப் ரிஸ்லெட் இனம் பாக்கெட் கெடியாரத்துடன் விலை ரூபா 6-0-0




நே. 4.

பொன் கிலிட் பீபாய் ஷேப் ரிஸ்லெட் கெடியாரம் தங்க டயல் உள்ளது இனம் பாக்கெட் கடியாரத்துடன்

விலை ரூபா 6-15-0

## ரோல்டு கோல்டு
## "பிடோ" லீவர் கைகெடியாரம்.

எங்கள் ரிஜிஸ்டர் ரோல்டு கோல்டு "பிடோ" லீவர் கைக்கெடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும். சரியான டைம் காட்டும். சிலிண்டர் கெடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குள் நின்று போவதல்ல. 5 வருஷமல்ல பத்து வருஷங்கூட ரிபேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கெடியார கைச்சங்கிலி இனமாகச் சேர்த்து அனுப்பப்படும். வாங்கிக்கொண்ட ஒரு வாரம் வரை சரியாக ஓடவில்லையென்றால் வாபஸ் ஒப்புக்கொள்ளப்படும். 5 வருஷ காரண்டியுடன் அனுப்புகிறோம்.



இனம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ. 5-12-0. ஸ்டாக் கொஞ்சம் உடனே எழுதுங்கள்.

**சுபீரியர் வாட்சு கம்பெனி, கெடியார வியாபாரிகள், மதராஸ்.**


# பாலகலவா என்னும் கம்பளி தொப்பி



பனிக் காலங்களில் சரீரத்தை பாதுகாப்பதற்காக இந்த கம்பளிக் குல்லா ஒவ்வொருவரிடத்திலும் ஒன்று இருத்தல்வேண்டும். அசல் கம்பளி, சிவப்பு, கருப்பு, கிரே, பிரௌன், வெள்ளை முதலிய பல கலர்களில் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| நெ. 1. குல்லா பெரியது ரூ. | 1 | 8 | 0 |
| நெ. 2. நடுத்தரம் ரூபா | 1 | 0 | 0 |
| நெ. 3. சிறியது ரூபா | 0 | 12 | 0 |

# பீஜரோகங்களுக்கு வில் பெல்ட்.



நம்முடைய தேகத்தில் பீஜரோகத்தினால் வருந்துபவரும் இறந்தவர்களும் கணக்கிட முடியாது. ஏனெனில் பீஜரோகமென்று சொல்லப்படும் விரை நோயுள்ளவர்கள் உபயோகிக்கும்படியான இந்த வில் பெல்ட் உள்ளனவென்று கேட்டிருப்பார்களேயொழிய பார்த்திருக்கமாட்டார்கள். ஏனெனில் இந்த பெல்டுகள் சீமை வர்த்தகரிடத்தில் இருந்ததினால் அனேகருக்குக் கிடைக்காதிருந்தது. இப்பொழுதுதான் வரவழைக்கப்பட்டது.

ஒரு பக்கத்திற்கு உபயோகிக்கக்கூடியது விலை ரூபா 3 10 0

இரண்டு பக்கத்திற்கும் உபயோகிக்கக்கூடியது ரூபா 4 0 0

இந்த பெல்ட் வேண்டியவர்கள் வலப்பக்கம் அல்லது இடப்பக்கம் என்று தெரிவிப்பதுடன் எத்தனை இன்ச்சி நீளம் வேண்டுமோ அதையும் விபரமாய் எழுதவேண்டும்.


# 1-கல் போட்டோகிராப் மோதிரம்.



இந்த மோதிரத்தின் பக்கத்தில் கடுகளவு பிரமாணம் வைத்து பூதக் கண்ணாடி அமைத்திருக்கும். அதைப் பார்த்தால் பெரிய உருவங்களாய் லேடிகள், சுவாமிகள், கட்டடங்கள் முதலானதும் வெகு வேடிக்கையாய்த் தெரியும்.

இதன் விலை 1-கல் மோதிரம் 1-க்கு அணா 8.    7-கல் மோதிரம் அணா 10.

## தற்கால நாகரீகத்திற்கு ஏற்றமாதிரி க்ஷவரத்திற்கு அடங்கிய சாமான்கள் செட்.



ஆலோகிரவுண்ட் க்ஷவரக்கத்தி, பிரஷ், ஷேவிங் சோப், முகம் பார்க்கும் கண்ணாடி, தோல் பட்டை, தீட்டுங் கல், எண்ணெய் புட்டி, கத்தரி, ஜலம் வைக்கும் கிண்ணம் இவ்வளவும் அடங்கியிருக்கின்றன.

செட் 1-க்கு விலை ரூபா 4.

**கருணாநிதி டிபோ, 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.**

# சந்திராபாய்

அல்லது

## சங்கரதாஸின் வெற்றி.

ரஸாயன ஆராய்ச்சி, மினசாரம், டெலிபோன், ஆகாயக்கப்பல், வெடிகுண்டு, டார்படோப்படகு முதலானவைகள் தோன்றியிருக்கும் நவீனநாகரீகப்போக்கின் சாதகபாதகங்களை இந்நாவல் வெள்ளிடைமலைபோல் ஆங்காங்கு வெளிப்படுத்துகிறது. இதன் விலை ரூபா 2—0—0.

# கனகபூஷணம் 2-பாகம்.

இதிலுள்ள கதாநாயகிக்கு நேரிடும் ஆபத்துகளை நினைக்கப் படிப்போர் கண்களில் நீர் வடியும். இக்கதையில் சோகரச மொன்றேயன்றி ஏனைய ரசங்களும் பொருந்தியிருக்கின்றன. இதிலுள்ள கதாநாயகி பயங்கரமும் பிராணபத்துமாகிய இக்கட்டுகளில் சிக்கியபோதும், தன் கற்புக்கு அழிவு நேரிடாது அதனைக் காப்பாற்றிக்கொள்வது மிக்க அதிசயமாயிருக்கும். இதில் இலௌகீகத்தில் சம்பவிக்கும் சகல நடவடிக்கைகளும் ஆசாரவொழுக்கங்களும் நமது நாட்டுமாதருக்கு அமைந்திருக்க வேண்டியவண்ணமாகச் செவ்வனே விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. விலை ரூபா 3-8-0.

# மதனும்பாள் 2-பாகம்.

இதில், காளிங்கனாகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன், சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக் கெடுதலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனும்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி, வேலாயுதன் என்பவனைத் தன் மோசச் செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக்கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனும்பாளை ஆதரித்துவந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனும்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச் செய்வதும், பாங்கியில் மகாமாயக் களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன் மேல் சுமத்துவதும் படிப்போர்க்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்.

2 பாகமும் விலை ரூபா 3.

**காமவல்லி** இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயஜாலத்தை விளக்குவது, நீதியைப் போதிப்பது. இதன் விலை அணா 8

# இராஜாமணி

அல்லது

## ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக்கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி பெருந்திருட்டும் மிகுந்த கொலைத்தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்துகொள்வது, அதிசயம் பொருந்திய செயல்களாயும படிப்போர் மனதைக் கவரக்கூடியதாயும் இருக்கும். இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?




அமிர்த சஞ்சீவி லேகியமும், அயக்காந்த செந்தூரமுமே.

முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும் தேகபலத்தைத் தரும் ஔடதம் வேறொன்றுமில்லை.

விளம்பரம்.

இதைக் கண்ணுறும் கனவான்களே !

இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தாக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே இவற்றின் விசேட குணம் நன்கு விளங்கும்.

## இந்த லேகிய சேந்தூரங்களால்
## நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கைகால் முடக்கு, ஓடுவாய்வு, பித்த எப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாது ஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீங்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நரம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்தவிருத்தியைப் பெருக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத்தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவை யென்பதை நாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி யுண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரே தாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாப்ஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகாரார்த்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளிமெடல், பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்பதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரேதரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, தூரப்பியாசத்தினாலாவது, அதிக மனக் கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாவது பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக ஷை லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கைவைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்தமடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி சாப்பிடலாம். மருந்து சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, கறி, மார்க்கண்ட சூப்பு, இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிடல் வேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டு வரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48-நாள் சாப்பிடுவாரேயானால் இவை தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பாவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். இவற்றைப் புருஷன் பெண்சாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால் அவர்க்கு உதிக்கும் மக்கள் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதை அதிகம் எழுதுதல் அநாவசியம். இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ, 1-12-0. போஸ்டேஜ் அணா 6. ஒரே தடவை 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட ரூ. 4.

பினாங்கு, சிங்கப்பூர், ரெட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1-12-0. தபாற்கூலி ரூபா 1-4-0.

48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5-8-0. சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளி நாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

### விலாசம்:—லேகியம் டிபோ,
44, நம்புலையர் தெரு, மதராஸ்.

---

# சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டார்ட் டிரேட் மார்க்)

**பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!**
**இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.**




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை நாள்பட வைத்திருப்பதால் இதன் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாய்க்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்திருப்பது பிரத்தியக்ஷ அனுபவமானதால் இதைப் பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. இது இரண்டுவித மருந்துகளடங்கியது. இதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற்கூலி அணா 4. டஜன் 1-க்கு ரூபா 5. ஏககாலத்தில் 3-பாக்கெட் வாங்குவோருக்குத் தபாற்கூலி இனாம். வியாபாரிகளுக்கு 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும்.

---

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

# நாராயண சஞ்சீவித் தைலம்.

இத்தைலம் முழுவதும் பச்சிலைகளாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்களாலும் ஆயுர்வேத முறைப்படி மிகப் பரிசுத்தமாகத் தயார் செய்யப்பட்டது. இத்தைலத்தில் ஸ்நானம் செய்வதினால் தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, மண்டைக்குத்தல், கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், சாலேஸ்வரம், காதுநோய், தலைப்பாரம், அதிக வெய்யிலினால் உண்டாகும் சிரரோகங்கள், சரீரதாபம், மூளைக் கொதிப்பு முதலியவைகள் ஆச்சரியப்படும் விதமாய்த் தீரும். தொடர்ச்சியாய்ச் செய்து வரும் இதன் ஸ்நானங்களினால் நரைத்தமயிர் கருத்துவிடும். மூளையைக் குளிரப்பண்ணி அறிவையும் திடச் சித்தத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுவதில் இது நிகரற்றது. சாராய சத்து முதலிய ஆங்கில வாசனைகள் இதில் சேர்க்கப்படவில்லை. சுத்தமான பச்சிலை கிழங்கு புல் முதலிய இந்தியவாசனைகளே சேர்க்கப்பட்டிருக்கின்றன. தினம், இதனைத் தலையில் தடவி வாரிவருவதினால் மயிர் கருப்புப்பட்டைபோல் பளபளப்பாகக் கருத்து ஆலம்விழுதுபோல் நீண்டு வளரும். இன்னும் இது, உஷ்ணத்தைத் தணித்து ஞாபக சக்தியையும், முகவசீகரத்தையும் உண்டாக்கும். கஷ்டப்பட்டு வேலை செய்தவர்களும் வெகுதூரம் நடந்தவர்களும் படுக்கும்போது சிறிது தைலத்தை உள்ளங்கை உள்ளங்கால்களில் தேய்த்துக்கொண்டால் காலையில் எழுந்திருக்கும்போது திரேகம் ஆரோக்கியமாய் இருக்கும். 5 பலம் டின் 1-க்கு ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.



# கூந்தல் வளரும் துளி.



இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெயில் கலந்து பிரதிதினம் மயிருக்குப் பூசிவந்தால் கூந்தலானது ஆலம் விழுதுபோல் உண்மையாய் வளரும். அதில் பேன் சேராது; சுண்டு உண்டாகாது; மயிர் உதிராது; வழுக்கைவிழுந்த இடத்திலும் மயிர் முளைக்கும். புட்டி 1-க்கு விலை அணா 12. தபாற்கூலி வேறு.

# கண்நோய் மருந்து.

இது கண்நோய், சண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலை, பீளை கட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும், ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச் சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போட வேண்டியதில்லை. புட்டி 1-க்கு அணா 8. தபாற்கூலி வேறு.



---

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதாராஸ்

# கஸ்தூரி மாத்திரை



சரீரமானது யாதொரு அபாயத்தையும் அடையாதிருக்க விரும்புவோர் பிரதிதினம் ஆகாரத்திற்குப்பின் தாம்பூலத்துடனாவது தனியாகவாவது இதைச் சாப்பிட்டு வந்தால் இது தந்த நோய்களைத் தடுததும், அஜீரணம் பித்தவாய்வு, ஜலதோஷம் இவைகளைக் கண்டித்தும், ஜீரண சக்தியை உண்டாக்கி வாயிலுள்ள அசுத்த நாற்றத்தைப் போக்கி வாய்ப்புண் முதலியவைகளைத் தடுத்தும் சுகமுறச் செய்யும். கர்ப்ப ஸ்திரீகள் இதனை உபயோகித்தால் பிரசவகாலங்களில் உண்டாகும் ஜன்னி முதலிய ரோகங்களினின்றும் தப்பித்துக் கொள்ளுவார்கள்.

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் எப்பருவத்தோர்க்கும் உண்டாகும் ஈளை, இருமல், சுரம், தலைப்பாரம், நெஞ்சில் கொருகொருப்பு. ஜலதோஷம் முதலியவைகளுக்கு வயதுக்குத் தக்கபடி இதில் ஒன்றுமுதல் 4.மாத்திரைகள் கொடுக்கச் சுகமுண்டாகும். இது சர்வ குடும்பங்களிலும் இருக்க வேண்டிய முக்கிய ஔஷதம். இதன் விலை புட்டி 1-க்கு அணா 12.

# காப்கியூர் என்னும் க்ஷய அரி.



கபஇருமல், இரைப்பு, அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவாய் இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான ஈழை இருமல், தொண்டையெரிச்சல், தொண்டைக் கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை நாலுதினத்தில் இது கண்டித்துக் கோழையை வெளியில் தள்ளி நன்றாய் அவ்வியாதிகொண்டிருந்தவரை தூங்கச்செய்யும். புட்டி 1-க்கு விலை ரூபா 1.

# சர்வமேக நிவாரணத் தைலம்.

இந்தப் பிரசித்திபெற்ற இராஜசஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டு வேளைகளிலும் 10-நாட்கள் வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத் தேகத்தில் ஊறிய மேகரோகங்கள், மேகவாய்வு, தனுர்வாதம், முழங்கால்வாதம், குதிக்கால்வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், துடைவாழை படைகள், நகக்கணுநோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சுபோல் போகும். இது அனேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டுபண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும், பேதி, இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை உண்டாக்காமல் சுகமாக்கி வியாதிகளைக் கண்டித்துச் சுகப்படுத்தக் கூடியதுமாகிய உண்மையான மருந்து.




இதன் விலை ரூபா 1-8-0. தபாற்கூலி வேறு.


---

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேசமேஸ்திரி தெரு, மதாராஸ்

# சுகபேதி மாத்திரை.

இந்த மாத்திரையில் 2-முதல் 5-வரை தேக திடமறிந்து மாத்திரையைச் சாப்பிட்டு கொஞ்சம் சலம் சாப்பிடவும். இவ்விதம் சாப்பிட்டால் சுகமாய் பேதியாகிவிடும். மாத்திரையை அனுப்பும்பொழுது உபயோகிக்கும் முறை தெரிந்துக் கொள்ளலாம். 25-மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு அணா 6.

# யூகலிப்டஸ் ஆயில்.




## (சுத்தமான நீலகிரித் தைலம்)

வைத்தியத்தில் கைதேர்ந்த ஒரு அனுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக்வியாதி, தேள் முதலிய விஷ ஜந்துக்களின் கடி, கத்தி வகையறு, வெட்டுக்காயங்கள், நரம்புச் சுளுக்குகள், தீப் புண்கள், வெந்நீர் பட்டு வெந்த புண்கள், பிளவைகள், புரைபோன இரணங்கள், இருமல், கக்குவாய் இருமல், வாய்வுபிடிப்பு, குடைச்சல், வாய்வினால் உண்டாகும் கொடூரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண் எரிச்சல், கண் கட்டி, முதலிய நோய்களுக்குக் கைகண்ட ஔஷதம்.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணா 4.
1 „ 1-டஜன் (12) க்கு ரூ. 2—8—0

# நரைமயிர் கருக்குந் தைலம்.



தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும் பசுமை நிறமாகவும் சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3 நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன்பிருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டுபண்ணும். மேலே கூறியுள்ள விகார குணங்கள் இதில் உண்டாகமாட்டா. இதைப் பூசியபிறகு முக லட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு தெரிவிக்கப்படும். விலை ரூ. 1.

# கள்ள நோய் நிவாரணி

## இது 3-தினத்தில் குணப்படுத்தும்.

மேக உஷ்ணம் என்பது வரம்பற்ற ஸ்திரீ போகத்தினால் தாது கெட மூலத்தில் அக்னி அதிகரிப்பதினால் ஏற்படும் கள்ளநோய். நீரடைப்பு, சதையடைப்பு, பவுத்திரம், அரையாப்பு முதலியன இந்த நோயின் மூலமாய் ஏற்படும். நீர்க்கடுப்பும், குத்தலும், எரிச்சலும் காண்பதுண்டு. இவைகளை நீக்கி நல்ல சுகத்தைக் கொடுக்கக்கூடிய அநுபவ மருந்து இது. பத்தியம் கிடையாது. இதனை உபயோகிக்கும் விவரம் மருந்துடன் அனுப்பப்படும்.

புட்டி 1-க்கு விலை ரூபா 1. தபாற்கூலி வேறு.





# கர்ணபிந்து

காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளாதிருத்தல், காதில் நமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டுவர, காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்.

புட்டி 1-க்கு அணா 4.
வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.

# சர்வபடை சம்மாரன்.



சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய துடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டு பண்ணும் படைகள், ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்.

புட்டி 1-க்கு அணா 4. தபாற்கூலி வேறு.

## நற்சாட்சிப் பத்திரம்.

177, கோட்மேல் ரோட்,
நாவலபிடியா, ஸிலோன், 19-2-31.

ஐயா, பத்து மாதகாலமாக இரண்டு காலிலும் கடுவாய்ப் புண்ணினால் கஷ்டப்பட்ட என்னுடைய ஒன்றரை வயது பையனுக்கு தங்களுடைய சர்வபடை சங்காரன் உபயோகித்ததில் ஆச்சரியமான குணத்தைக்கண்டு நான் மிகுந்த சந்தோஷத்தை அடைந்தேன். இத்தகைய அபூர்வமான ஔடதத்தை காலணா விலைக்குக் கொடுப்பது பெரிதும் போற்றத்தக்கதாகும். இந்த ஔடதத்தை ஓர் குடும்ப ஔடதமாக வைத்துக்கொள்ள விரும்புகிறேன். ஆதலால் 4 புட்டி வி-பி—மூலம் என் விலாசத்திற்கு அனுப்பும்படி விரும்புகிறேன்.

இப்படிக்கு,
P. S. பொன்னுசுவாமி செட்டி.

# ஓட்டோ லீலா.



எல்லோருடைய மனதையும் பிரமிக்கச்செய்து பலர்க்கும் ஆனந்தத்தைத் தந்து இதற்கு நிகரான சுகந்தமான செண்ட் வேறொன்றுமில்லையென்று ஒவ்வொருவரும் எண்ணும்படி செய்யும். இதில் ஆல்கஹால் சாராயம் முதலியவைகளின் சம்பந்தமே கிடையாது. இந்த நீங்காத வாசனைத் திரவத்தை உங்களுடைய கைக்குட்டையிலாவது சொக்காய்களின் புறங்களிலாவது தடவிக்கொண்டால் சிறந்த பல புஷ்ப ஜாதிகளின் வாசனை கமழும். ஒரு நந்தவனத்தின் மத்தியில் நீங்கள் இருந்தால், அங்கு நின்றும் உண்டாகும் சுகந்த மணத்தை எவ்வாறு அனுபவித்துச் சுகிப்பீர்களோ அதனினும் பதின்மடங்கு சுகந்தத்தை இந்த அத்தரை உபயோகிப்பதனால் அனுபவிப்பீர்களென்பது திண்ணம்.

மத்தியம் புட்டி 1-க்கு அணா 10. டை பெரிய புட்டி 1-க்கு ரூபா 1.

# சிவப்பிரகாச பல் பொடி.




இந்தச் சிவப்பிரகாச பல் பொடி மற்ற இதரபல் பொடிகளைப் போலிராமல், அதிக சுகந்தமாகவும் பல் வலி, பல்லில் சொத்தை, ஈறு வளர்ந்திருத்தல், வாய் ரணம், வாய்நாற்றம், பல்லாட்டம் முதலிய வியாதிகளை நீக்குவது மல்லாமல், பல் நன்றாய்த் துலங்கும்படி செய் யும். வாயில் சதா கமகம வென்னும் மணத்தை உண் டாக்கிக்கொண் டிருக்கும். ஒரு மாதத்திற்கு உபயோ கிக்கக்கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணா 2. 6-டப்பிகள் அணா 10.

## நாக்குப் பூச்சியை நாசமாக்கும் பில்லை.

இந்த பில்லைகள் ஒரு வருடத்துக் குழந்தைகட்கு அரை பில்லையும், மற்ற வர்கட்கு 1 அல்லது 2 பில்லைகளும் கொடுத்தால் வயிற்றிலுள்ள சிறு கிருமி கள் யாவற்றும் பந்து பந்தாய் வந்துவிடும். 8-பில்லைகள் விலை அணா 6.

## அயத்தங்கத் திராவகம்.

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாகக் கண்டிக்கக்கூடியது. இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங் கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப்போ யிருக் கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிருத்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கி லேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமை யான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமா யிருக்கும். இருமல் நோய்கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண் டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடை வார்கள். இதனால் உண்டாகக்கூடிய அநேக குணங்களில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.



இது, நரைத்த மயிரைக் கறுப்பாக்கும், உஷ்ணத்தினாலாவது, புழு வெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும்; இதனால் நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச் சல், கைகால் காந்தல் இவை தீரும். இன்னும் இது முகவசீகரத்தை உண் டாக்கும். தேக அசதியை யோட்டும். ஜீரண சக்தியையும், நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும், நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும். க்ஷயரோ கத்தை க்ஷணத்தில் தீர்க்கும். வாத பித்த சிலேத்துமங்களா லுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும். மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் ஆகியவை தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப்பிட்டால் இது இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேக திடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடை யாது. ஒருவன் 40 நாள் மருந்தை உட்கொள்ளும் பக்ஷத்தில் அவனுடைய தேகம் வஜ்ஜிரமே யாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

20-நாள் மருந்து விலை ரூபா 1. 40-நாள் மருந்து விலை ரூபா 1-12-0.

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

# புத்திர சந்தான எண்ணெய்.



ஆண்மலடு சொன்னாலும் சொல்ல லாகும்
அப்பனே பெண்மலடு யாரு மில்லை
ஏன்மலடாய்ப் போவதென்று கேட்பா யாகில்
இயம்புவேன் கருக்குழியில் சோரி சேர்ந்தால்
ஊன்மிருந்தால் புழுதரித்தால் உதிரங் கெட்டால்
ஓங்கார பிராணவத்தில் வாயு சேர்ந்தால்
தான்மதத்து விபரீதச் சேர்க்கை செய்தால்
தலையாட்டுப் பேய்பிணியால் தரியாதென்னே.

ஸ்திரீகளின் கருக்குழியினிடத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தைப் புசித்து விடுவதினாலும், விபரீதச் சேர்க்கையாலும், கருக்குழியினிடத்தில் சதை வளர்ந்து சொறி பற்றி இரத்தங்கட்டி யிருப்பதாலும், கருக்குழி மதத்துக் கொழுத்திருப் பதாலும், மூலச் சுழியில் வாயு பித்தம் தங்கி யிருப்பதனாலும் கருதரிக்காது.

இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டுச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப் பிட்டால் இது கருக்குழியிலிருக்கும் ஷை குற்றங்களை நீக்கி, கருக்குழியைச் சுத்தப்படுத்தி, மறுமாதத்திலேயே கரு தரிக்கும்படி செய்யும். இது அனுபவ மான எண்ணெய். இதற்குக் கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்குக் கரு தரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கியிருந்து திடீ ரென்று உடைந்து போவதுண்டு. இவ்வகைத் தோஷமும் இந்த எண்ணெ யால் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கரு தரிக்கும். இதன் விலை ரூபா 2.

## மதன கோலாகல

# தங்கமாத்திரை

இம்மருந்து தாதுபுஷ்டியைத் தருவதில் நிகரற்றது. இதில் கஞ்சா அபின் முதலிய லாகிரி வஸ்துக்கள் சிறிதும் சேர்க்கப்படவில்லை. வயது முதிர்ந்த காரணத்தாலும், வரம்பற்ற போக நுகர்ச்சி யாலும் இழந்த பலத்தை இம்மருந்து ஆச்சரியப் படத்தக்க விதமாய் உண் டாக்கி ஒரு விதமான சுறு சுறுப்பையும் கொடுக்கும்.



இதுவன்றி வேறு எந்த நோயினா லுண்டான பலவீனமும் இம்மருந்தி னால் நீங்கும். இரத்த விர்த்தியை யுண்டாக்கி நரம்புக்கு உறுதியைக்கொடுக் கும் தன்மையில் இது கை கண்ட மருந்து. வயோதிகமே தெரியாது. களைப்பும் தோன்றாது. சோர் வையும் சோம்பலையும் நீக்கித் தேகபலத்தைக் கொடுக்கும்.

இது, தங்கம், வெள்ளி, முத்து, அயம், காந்தம் முதலிய உயர்ந்த உலோகச் சரக்குகளும், சஞ்சீவிக்கு நிகரான பல மூலிகைகளும் சேர்க்கப் பட்டுச் சிறந்த கைபாக செய்பாகங்களால் தயாரிக்கப்பட்டது.

இதனை ஒருமுறை வாங்கி உபயோகித்தால் இதன் மேலான குணம் தானே தெரியும். 20-மாத்திரைகொண்ட சீசா 1-க்கு விலை ரூபா 2.

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

# ரூதக நிவாரணி மாத்திரை.



ஸ்திரீகளுக்கு மாதாந்திர பஹிஷ்டை (ருது) கிரமமாக வெளிப்படாமல் காலந்தவறி வெளிப்படுதல், சிலகாலம் வெளிப்படாமலே யிருத்தல், வயிற்றுவலி, ஜுரம், மார்பு நோய், மயக்கம், கழுத்திசிவு, ஜன்னி தோஷங்கள், மஞ்சட் காமாலை, உணர்ச்சியின்றி சிறுநீர் பெருக்கெடுத்தல், மூர்ச்சையாகுதல், மார்பு படபடவென்று அடித்துக்கொள்ளுதல், மேல் மூச்சு வாங்குதல், மர்மஸ்தானத்தில் பொறுக்கமுடியாத வேதனை உண்டாகுதல் இன்னும் மாதர்களுக்குக் காணும் ருது சம்பந்தமான எல்லா வியாதிகளையும் கண்டித்து கருப்பகோசத்தைச் சரிப்படுத்திச் சந்தான விருத்தியை உண்டாக்கும்.

ஒரு டப்பி மாத்திரை விலை ரூபா 1.

# (காட்லீவர் ஆயில்) மீன் எண்ணெய்.



இது பலத்தை உண்டாக்குகிறது. தவிர இரும்பலினால் உண்டாகும் இளைப்பையும் அடக்கும். இளைத்தவர்கள் உபயோகித்தால் தேகம் புஷ்டியாகும், ரத்தத்தைச் சுத்தி செய்யும், சுவாசகோசங்களின் ரோகத்தைக் குணப்படுத்தும், சரீரத்தினுடைய ஒவ்வொரு பாகத்துக்கும் பலத்தைக் கொடுக்கும். இதைக் குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். புட்டி 1-க்கு விலை ரூ. 1-8-0.

# சாண்டோவ் பாஸ்பாரிகோ.

## விருத்தாப்பியருக்கும் வீரிய விருத்தி கொடுக்கும்.

இந்த சஞ்சீவித் திராவகம் அநேக விதமான கஷ்ட வியாதிகளான பலயீனம், கை கால் ஓய்ச்சல், சோம்பல், திரேகம் மெலிந்துபோகுதல், ஜீரண அசக்தி, புளியேப்பம், பசி யின்மை, ஞாபகக் குறைவு, தைரியக் குறைவு, தாது விருத்தி இல்லாமல் இந்திரியம் நித்திரையில் ஸ்கலிதமாய் தானே வருதலும், கண்டமாலை, வாய்வினால் மலச்சிக்கல், நரம்புத் தளர்ச்சி, தலைவலி, மார்பு நோய், இடுப்பு நோய் இவை முதலான வியாதிகளை ஒரு வாரத்திற்குள் போக்கடித்து தேக உருப்புகளுக்கு வலுவை யூட்டி சிங்கத்துக்கு நிகரான பலத்தைக் கொடுத்து



ஜீவாமிர்தமாகிய ரத்தத்தைச் சுத்தப்படுத்தும். இதுவரையிலும் யாவராலும் கண்டுபிடிக்கப்படாத விசேஷ வீரியவிருத்தி மருந்து. இது சரீரத்தில் மாந்த்ரீகம்போல் வேலை செய்யும். இந்த சஞ்சீவி திராவகத்தைச் சாப்பிட்ட ஐந்து நிமிஷத்திற்குள் சந்தோஷமும் ஆச்சரியமும் சௌக்கியமும் பெறுவது உண்மை. புட்டி 1-க்கு விலை ரூபா 2.

கருணாநிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

# புதிய கொக்கோக வசனம்

## (உண்மையான இன்ப நூல் இதுவே)

இதைப்போன்ற பலவித புஸ்தகங்கள் வெளிவந்திருப்பினும், அவைகளில் விஷயங்கள் மனதிற் பதியுமாறு எழுதப்படவில்லை. ஆனால் இச்சிறு நூலில் ஆண் பெண் இருபாலரும் சிற்றின்ப சம்பந்தமாகவும், இல்வாழ்க்கை சம்பந்தமாகவும் அறியவேண்டிய பல விஷயங்களும், மர்மங்களும் தெளிவான நடையில், சுருங்கச்சொல்லி விளங்கவைக்கப்பட்டிருக்கிறது. இப்போது மூன்றாம்பதிப்பு வெளியானதாலேயே இதை மக்கள் எவ்வாறு விரும்புகிறார்களென்பது தெரிகிறது. சட்டைப் பையில் அடங்கும்படியான அளவு புஸ்தகம் விலை ரூபா 1—0—0. வி. பி. வேறு.

## காதலர் கண்டு களிப்புறும் நூல்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இன்பவாழ்க்கையின் இரகசியங்கள் ... | 2 | 0 | 0 | ரதி சாஸ்திரம் ... | 1 | 4 | 0 |
| | | | | சரீர மர்ம சாஸ்திரம் ... | 1 | 0 | 0 |
| இல்வாழ்க்கையின் இரகசியங்கள் ... | 2 | 0 | 0 | மதனாதி ரஹஸ்யம் ... | 1 | 0 | 0 |
| | | | | ரதிமதனசிருங்காரரகஸ்யம் | 2 | 0 | 0 |
| மணவாழ்க்கையின் மர்மங்கள் ... | 2 | 4 | 0 | மாயாஜால விநோதம் ... | 1 | 0 | 0 |
| | | | | மனோவசிய சாஸ்திரம் ... | 1 | 8 | 0 |
| மாதர் நீதி ... | 1 | 0 | 0 | ஸ்திரீ புருஷ ரகசியம் ... | 1 | 8 | 0 |

விலாசம்:—ஆரியன் புக் டிபோ, திருவல்லிக்கேணி, மதராஸ்.

# அயக்காந்த சத்தின் திராவகம்.



இந்தத் திவ்விய ஔஷதம், விஷசுரம் முதலிய எத்தகைய ஜுரத்தினாலும் தேகம் மெலிந்து வெளுத்துப் போனவர்களுக்கும், வேறு பல வியாதிகளால் தாக்கப்பட்டுப் பலமற்றுப் போனவர்களுக்கும், தாது விருத்தி நாட்டங்கொண்டு பல மருந்துகளைச் சாப்பிட்டு குணமடையாதவர்களுக்கு இது ஒரு அமிர்தமாகும் என்றே நிச்சயமாகக் கூறுவோம். இம் மருந்தை உட்கொள்வதால் மல ஜலம் தாராளமாய்க் கழிந்து பசியின்மையைப் போக்கி ஜீர்ண சக்தியைக் கொடுத்துப் பரிசுத்த இரத்தத்தைப் பெருக்கும். தாதுவிருத்தி உண்டாகும். தேகம் சிவப்படைந்து முகம் வசீகரமாகும்.

இம் மருந்தைச் சாப்பிடுகிறவர்கள் தேக திடத்தைப் பெற்று, வலிவுள்ள மக்களைப் பெறுவார்கள். சகல இன்பங்களையும் அனுபவிக்கலாம். ஆண் பெண் இருபாலரும் எக்காலத்திலும் உபயோகிக்கலாம்.

பெரியவர்கள் ஒரு அவுன்சு தண்ணீர் அல்லது பசும்பாலில் 10, 12-துளிவரையிலும், சிறியவர்கள் 2-முதல் 6,7-துளிகள் வரையிலும் காலை மாலை இருவேளையும் சாப்பிடவேண்டும். இதற்கு யாதொரு பத்தியமுமில்லை. எல்லா ஏழைகளும் வாங்கி உபயோகிக்கும் பொருட்டே மிகக் குறைந்த விலைக்கு விற்கிறோம். ஒரு மாதம் சாப்பிடக்கூடிய மருந்து 0-12-0. தபாற் செலவு வேறு.

கருணாநிதி டிபோ, நெ. 1/6 வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

முதல்தரமான—A Quality

# பெருங்காயம்.

அநேகா உணவை, இனிமையும்படுத்தி ஜீரணிக்கவும் செய்யும் நல்ல பெருங்காயம் கிடைப்பது அரிதா இருக்கின்றதென்றும், அதில் உயர்ந்ததைத் தயாரித்துப் பலருக்கும் உபயோகமாகும்படி வியாபாரஞ் செய்யவேண்டுமென்றும் எங்களைக் கேட்டுக்கொண்டபடியால், இப்போது மேலான பெருங்காயம் உயர்ந்ததாயும், வியாதிகளைக் கண்டிக்கக்கூடியதாயும், விலை சாசமாயும் நம்மிடத்தில் கிடைக்கும். வேண்டுவோர் வரவழைத்துக்கொள்ளலாம்.

1-இராத்தல் அல்லது 1-பவுன்ட் ரூ. 2.
½-இராத்தல் ரூபா 1—1—0. } தபாற்கூலி வேறு.



# மோகினி பரிமள கூந்தல் தைலம்

5 வித இனம் சாமான்கள் சேர்த்தனுப்பப்படும்.

இந்தத் தைலத்தை கூந்தலில் தடவிக் கொண்டால் இன்று மலர்ந்த புஷ்பங்களின் வாசனைக்கு நிகராயிருக்கும். கூந்தலுக்கு வளர்ச்சியைத் தருவதுடன் தலைக் கொதிப்பையும் அடக்கி தேகத்திற்கு ஆரோக்கியத்தைத் தரவல்லது. விலை அணு 13.

இனம் சாமான்:—1 செண்டுபுட்டி, 1 பெட்ரூம் படம், 1 ஜவ்வாது பில்லை, 1 கலர் சாந்து, 1 சிறிய கண்ணுடி.

# 130 சாமான்கள் அடங்கிய பெட்டி.

இதன் விலை ரூபா 2-12-0 தான்.



இதன் விலை ரூபா 2-12-0 தான்.

சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனு 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷை சர்ட் பொத்தான்கள் செட் 12; ஷை கல்விழைத்த புரூச்; 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணுடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலாக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணி பர்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 32; அழகிய பலாக சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு ரூ. 2—12—0.



# ஹெட் ஏக் கியூர்.



இது எலக்ட்ரிக் பவர் அதாவது மின்சார சக்தி வாய்ந்தது. தலைநோய், ஒற்றைத் தலைநோய், வயிற்றுவலி, சூதகத்தினால் உண்டாகும் வயிற்றுவலி, மார்புவலி, இன்புளுவென்ஸா, மலேரியா என்னும் விஷ நோய்கள் இவைகளைக் கண்டிப்பதுடன், மேக வாய்வு, கைகால் பிடிப்பு, கீல் பிடிப்பு, சூலை முதலிய வியாதிகளை நீக்கும். குழந்தைகளுக்குக் காணும் வலி, மாந்தம் முதலிய வியாதிகளுக்கு மிகவும் அனுகூலமானது.

இதன் விலை புட்டி 1-க்கு ரூபா 1.


# ராம பாணச் சூரணம்.



இந்த சூரணத்தால் சளி, இருமல், கபங்கட்டி இருமல், புகை இருமல், உஷ்ண இருமல், சீதள இருமல் இவை யாவுந் தீரும். குழந்தை களுக்கு இராக்காலத்தில் நெஞ்சில் கொருகொருப்பு இருக்குமாகில் அதையும் நிவர்த்தியாக்கும். இதை உபயோகிக்கவேண்டிய திட்டங்கள் டப்பியுடன் அனுப்பும் நோட்டிசில் தெரிந்துகொள்ளலாம்.

ஒரு டப்பியின் விலை ரூபா 1.

# உயர்ந்த க்ஷவரக் கத்தி.



க்ஷவரத்திற்கு ஒவ்வொருவரிடத்திலும் இருக்கவேண்டிய தவசியம்.

| | | | |
|---|---|---|---|
| நெ. 1. சீமை மேக்கர் உயர்ந்த க்ஷவரக் கத்தி | 1-க்கு விலை ரூ. | 1 | 12 |
| நெ. 2. சீமை மேக்கர் நடுத்தரம் க்ஷவரக்கத்தி | 1-க்கு விலை ரூ. | 1 | 4 |
| நெ. 3. க்ஷவரக் கத்தி | 1-க்கு விலை ரூ. | 1 | 0 |
| கிரௌன் அண்டு சோர்டு எக்ஸ்ட்ரா ஆலோ கிரவுண்டு உயர்ந்த க்ஷவரக்கத்தி | 1-க்கு விலை ரூ. | 2 | 2 |
| காப்மென் ரேஜர் | 1-க்கு விலை ரூ. | 2 | 4 |
| ஜெர்மன் கிராப் ரேஜர் | 1-க்கு விலை ரூ. | 1 | 12 |
| கத்தி தீட்டும் தோல் பட்டை | 1-க்கு விலை ரூ. | 0 | 10 |
| அலுமினியம் க்ஷவரக் கிண்ணம் | 1-க்கு விலை ரூ. | 0 | 4 |

## மானிடர்க்கு மகிழ்ச்சியைத்தரும்

# மகா சந்தனாதித் தைலம்.

அன்பர்களே! வெயிற் காலத்திற்கு இன்பந்தரும் இந்த மகா சந்தனாதித் தைலம், சிறந்த பல மூலிகைகளாலும், உயர்ந்த சந்தனக் கட்டைச் சத்தினாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான கற்க வகைகளினாலும் சித்த ஆயுர்வேத முறைப்படி பெரும் பிரயாசையின் மேல் செய்யப்பட்டு இப்போது வெளி வந்திருக்கிறது.



நூற்றுக்கணக்கான பணச் செலவின் மேல் தீர்க்கவேண்டிய வியாதிகளை யெல்லாம், இந்தச் சந்தனாதித் தைலத்தினால் தீர்த்துக்கொள்ளலாம்; இதற்குப் பல கனவான்கள் அநேகம் நற்சாக்ஷிப் பத்திரங்கள் அனுப்பி யிருக்கின்றனர்.

இத்தைலத்தை வாரத்திற்கு இரண்டு முறையாக, சிரசில் தேய்த்துச் சிகைக்காயிட்டு வெந்நீரில் ஸ்நானஞ் செய்து வருவதால் கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், காதுநோய், தலைப்பாரம், மூளைக் கொதிப்பு, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, சாலேஸ்வரம் பித்தபாண்டு, காமாலை, அஸ்தி சுரம், நாவறட்சி, கைகால் எரிவு, தேக வெளுப்பு, மேக ரோகங்கள், அதிக வெட்டையினாலுண்டான துர்நாற்றங்கள், சொறி, சிரங்குகள், நமைச்சல், பீனிசம், கபால சூலை முதலிய வியாதிகள் நீங்கித் தேகத்திற்குச் சுகமுண்டாகும்; ஞாபக சக்தி அதிகப்படும்; கண்ணிற்கு நல்ல ஒளியுண்டாகும்.

இதைத் தேய்த்து நீடித்து ஸ்நானஞ் செய்துவருவதால் மூளையில் கொதிப்பு நீங்கிக் குளிர்ச்சி யுண்டாகும்; மூளை அதிர்ச்சி, துடிதுடித்து, தலை மயக்கம் முதலியவைகளும் நீங்கும்; மறதி ரோகம் அறவே ஒழிந்துவிடும்; பித்தத்தினால் நரைத்த உரோமங்கள் கருமை யடையும்.

இன்னும் இத்தைலத்தைத் தலையில் தடவிவருவதால் கூந்தல் கருமையாய்ப் பளபளப்புடன் வளரும். உரோமங்களிலுள்ள நுனி வெடிப்பு; செம்பட்டை, சுறட்டை முதலியவை நீங்கும். தலையில் மயிர் உதிர்தல், பூச்சி வெட்டு முதலியவைகளும் நிவர்த்தியாகும். எப்பொழுதும் சிரசிலும் உடம்பிலும் இனிமையான சுகந்தம் பரிமளித்துக்கொண் டிருக்கும். இன்னும் இத்தைலம் மனமொத்த காதலர்க்கு மாறா இன்பத்தையும் தரும்.

இத்தைலம் தேய்த்து ஸ்நானஞ்செய்த தினத்தன்று சீதள பதார்த்தங்களையும், தயிர் மோர் முதலியவற்றையும், பகல் நித்திரை, ஸ்திரீ சம்போகம் முதலியவைகளையும் நீக்கவேண்டும்.

இதன் விலை 1 சேர் தைலம் அடங்கிய டின் ரூபா 1–12—0
இதன் விலை ½ சேர் தைலம் அடங்கிய டின் ,, 1—0—0


---

விலாசம்:—தனலட்சுமி கம்பெனி,

நெ. 6, வெங்கடேசமேஸ்திரி தெரு, சௌகார்பேட்டை, மதராஸ்.



## டேபில் டைம்பீஸ் இனாம்!!!



எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில் வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். முந்துங்கள். விலை ரூ. 5-15-0. தபால் கூலி பிரத்தியேகம்.

## அற்புத எலெக்டிரிக் மோதிரம்.

அமெரிக்கா தேசத்தில் ஓர் மின்சார நிபுணரால் இப்பொழுது நூதனமாய்க் கண்டு பிடிக்கப்பட்டது! இம்மோதிரத்தை பாலர் முதல் விருத்தர்வரை ஆண் பெண் இருதிறத்தார்களும் உபயோகப் படுத்தலாம். இம்மோதிரத்திற் குள்ளிருக்கும் எலெக்டிரிக் பவர் குறையாமல் எக்காலமும் நீடித்திருக்கும். தாங்கள் நோய்வராமல் தடுத்துக் கொள்வதற்கும், இருக்கும்நோயை குணப்படுத்திக் கொள்வதற்கும் இம் மோதிரத்தை உபயோகியுங்கள்! இம் மோதிரமானது 8-வித லோகங்களைக் கொண்டு வெகு அழகாகவும், பார்வையாகவும் செய்யப்பட் டிருக்கின்றது. இதை விரலில் அணிந்தவுடன் அதிலிருந்து மின்சார சக்தி தேகமெங்கும் பரவி பலத்தைக் கொடுப்பதோடு காய்ச்சல், வாந்திபேதி, தொத்து வியாதிகள், வைசூரி, இன்புளுயன்சா, க்ஷயம், குஷ்டம், பிளேக், தலைவலி, அஜீரணம், மூலம், அன்னத்துவேஷம், மலச்சிக்கல், வாதம், சூலை முதலிய கொடூரமான வியாதிகள் அணுகாது. நற்சாக்ஷிப் பத்திரங்கள் பிரதி தினம் வந்து குவிந்துகொண் டிருக்கின்றன.



மோதிரம் 1-க்கு ரூ. 1—8—0
மோதிரம் 3-க்கு ரூ. 3–12—0

## இரகசிய சுகானந்தன்.

இது ஒரு அதிசயமான ரப்பர் குழாய். ஆண்கள் சம்போக காலங்களில் உபயோகிக்க ஸ்பெஷலாக தயார் செய்யப்பட்டது. பெண்களிடமிருந்து நோய்களை வாங்கிக்கொள்ளாமல் தடுப்பதற்கு இதைவிட வேறுவழி கிடையாது. இதை சம்சாரிகளும் உபயோகிக்கலாம். இதனால் கெடுதல் ஒன்றும் கிடையாது. இதன் விலை ரூ. 1.



## பெண்களுக்கேற்ற கருவி.

அடிக்கடி கர்ப்பம் தரிப்பதைத் தடுக்கவேண்டுமானால் இந்த ரப்பர் கருவியை உபயோகிக்க வேண்டும். இக்கருவி மிகவும் மெல்லியதாகவும், சில்க்நெட், சில்க்டேப் முதலியவைகள் உள்பட இதன் விலை ரூபா 2—8—0.

---

ஞானநிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

# அமெரிக்கன் ஆகாயத் துப்பாக்கிகள்.

## இனும்! 100 குண்டுகள் இனும்!!



அபாரசப்தம்! அபாயமில்லாதது!!

இந்த ஆகாயத் துப்பாக்கியைப் புதிதாக அமெரிக்காவிலிருந்து வரவழைத்திருக்கிறோம். இது 250 ரூபா விலையுள்ள துப்பாக்கிக்கு நிகரானது. இந்தத் துப்பாக்கியால் பட்சிகளை வெகு சுலபமாகச் சுட்டு வேட்டையாடலாம். இதற்குச் சர்க்கார் லைசென்ஸ் தேவை இல்லை. எவ்விடத்திலும், யாருடைய கையிலும் இருக்கலாம். இராக்காலங்களில் பிரயாணஞ் செய்கின்றவர்கள் திருடர்கள் அஞ்சும்படி செய்வதற்கு இந்தத் துப்பாக்கி மிகவும் உபயோகமானது. இது பெரிய சப்தம் செய்யக்கூடியது.

100 குண்டுகளுடன் துப்பாக்கி 1-க்கு விலை ரூபா 4.

தபால் சிலவு, பாக்கிங் சார்ஜ் ரூபா 1. வேறு.

தனியாக 100 குண்டுகளின் விலை அணா 8.

வேண்டியவர்கள் ரூபா 1. முன்பணமாக அனுப்பவேண்டியது.

இது ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கத்தக்கது.

---

மாதம் **100**-ரூபா முதல் **500**-ரூபா வரை சம்பாதிக்கக்கூடிய

## சிறிய சைஸ் தையல் இயந்திரம்.



இது சாதாரண பெரிய தையல் மெஷின்களைப்போலவே சிறிய சைசில் உள்ளது. இதை மேஜையின்பேரிலோ, நாற்காலியின்பேரிலோ வைத்து முடுக்கி எந்த விதமான தையல் வேலையும் செய்யலாம். தையல்காரர்களிடம் நீங்கள் போகவேண்டிய அவசியமே இல்லை. வீட்டிலுள்ள பெண்களே எல்லா தையல் வேலையும் செய்துவிடலாம். சட்டைகள், கோட்டுகள், துணிகள் முதலியன எதுவும் இலகுவில் தைக்கலாம். இந்த மெஷினில் ஒரு குழந்தையும் வேலை செய்யலாம். இதைச்சேர்ந்த சாமான்களுடன் இதற்குரிய பெட்டியில் போட்டு ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். 5 வருட காரண்டியுள்ளது.

இதன் விலை ரூபா 3–0–0.

---

[illegible]லாசம்:—கருணாநிதி டிபோ,

[illegible] 1[illegible]6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

187514
187514